2



# அரும்புகள் மொட்டுகள் மலர்கள்

முருகுசுந்தரம்

# அரும்புகள்
# மொட்டுகள்
# மலர்கள்

தொகுப்பாசிரியர்
கவிஞர் முருகுசுந்தரம்

அகரம்
சிவகங்கை - 623 560

இந்நூல் 'பாவேந்தர் நினைவுகள்' வரிசையில்
வெளிவரும் இரண்டாவது நூல்

அரும்புகள் மொட்டுகள் மலர்கள் /
© தொகுப்பாசிரியர் கவிஞர் முருகுசுந்தரம் / முதற் பதிப்பு டிசம்பர் 1980 / அச்சும் அமைப்பும் வெளியீடும் அகரம் சிவகங்கை / அட்டை பி.ஞானவேலு / அட்டை அச்சாக்கம் விநாயகா ஸ்க்ரீன் மதுரை / விலை ரூபாய் பத்து



# புறம்

அரும்புகள் மொட்டுகள் மலர்கள், 'பாவேந்தர் நினைவுகள்' வரிசையில் வெளிவரும் இரண்டாவது நூல். இந்நூல்வரிசை என் 15 ஆண்டு முயற்சி. கவியரங்கம், சொற்பொழிவுகளுக்காக நான் எவ்வூர் சென்றாலும், அவ்வூரில் பாவேந்தரோடு பழகிய நண்பர் யாராவது இருக்கின்றாரா என்று அறிவது என் முதல்வேலை. அவ்வாறு யாரேனும் இருந்தால் அவருடைய இல்லம் சென்று பொறுமையாகக் காத்திருந்து அவர்கூறும் செய்திகளைக் குறித்துக் கொண்டுவருவது என் வழக்கம்.

நான் மேற்கொண்ட இம்முயற்சியிலிருந்து ஓர் உண்மை எனக்குப் புலனாயிற்று. சங்க காலந்தொட்டு இன்றுவரை பாவேந்தர் போல மக்களிடம் நேரடித் தொடர்பு கொண்ட கவிஞர் வேறு யாரும் இல்லை என்பதே அது! நான் இதைப் பாவேந்தர் மீது கொண்டிருக்கும் அளவிறந்த பற்றின் காரணமாகக் கூறியிருப்பதாகக் கருதக் கூடாது. நன்கு ஆராய்ந்துதான் இக்கருத்தைக் கூறுகிறேன்.

பாவேந்தர் கவிஞர் மட்டுமல்லர்! அவர் ஓர் அரசியல்வாதி; சீர்திருத்தவாதி; ஆசிரியர்; பத்திரிகாசிரியர்; நாடகாசிரியர்; திரைப்பட எழுத்தாளர்; பதிப்பகர்;

மேடைப் பேச்சாளர். இத்துணை துறைகளில் ஈடுபட்டுச் செயலாற்றிய கவிஞர் தமிழகத்தில் வேறு யாருமில்லை.

இவரது பல்துறை ஈடுபாட்டால் தமிழ்நாட்டின் பட்டி தொட்டிகளிலெல்லாம் இவரோடு ஏதேனும் ஒருவிதத்தில் தொடர்பு கொண்டவர்கள் பரந்து கிடக்கிறார்கள். ஆப்பக்காரியிலிருந்து அமைச்சர்வரை இப்பட்டியல் நீளுகிறது.

இதை நான் ஏதோ எதுகை மோனைக்காகக் கூறியதாக நினைக்கவேண்டாம். திருச்சி சிந்தாமணியில் பாவேந்தர் வழக்கமாகச் சென்று ஆப்பம் சாப்பிடும் ஒரு கடையின் சொந்தக்காரியைக் கண்டு பேசும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

சேலத்துக் குதிரை வண்டிக்காரன் ஒருவன் கூறினான்: ''ஐயா, என் வண்டியிலதா ஏறிக்கிட்டுப்போவார். மாடர்ன் கேஃபிலே டிஃபன் சாப்பிடுவார். காஃபி குடிக்கறத்துக்காகவே வில்வாத்திரிக்குப் போவார்.

மிலிட்டரி சாப்பாட்டுக்கு வி. மார்க்கெட்டில இருக்கிற நித்தியானந்த பவனுக்குப் போவார். அந்தக்காலத்திலேயே எனக்கு ஒரு ரூபா வாடகை கொடுப்பார்''— என்று.

பாவேந்தர் வரலாறு இப்படித் தமிழ்நாட்டு மூலை முடுக்கெல்லாம் சிதறிக் கிடக்கிறது. அதைத் திரட்டுவதென்பது தனிப்பட்ட ஒருவரால் நடைபெறக்கூடிய செயலன்று. அரசாங்கமே ஒரு குழு அமைத்துச் செய்ய வேண்டிய வேலை.

பாவேந்தரைப்பற்றிய செய்திகளைத் திரட்டும்பணி எனக்கும் அவ்வளவு எளிதாக இருந்ததில்லை. பாவேந்தரோடு பழகிய நண்பர்கள் பலதிறப்பட்டவர்கள்.

சிலர் அவர்களே விரும்பிச் செய்திகளைக் கூறுவர்; சிலர் பலமுறை நடக்க வைத்துச் செய்திகளைக் கூறுவர்; சிலர் பலமுறை நடக்கவைத்தும் செய்தி எதுவும் கூறமாட்டார்கள்.

பாவேந்தரோடு நெருங்கிப் பழகிய சென்னையைச் சேர்ந்த குடும்பநண்பர் ஒருவர்: அவரைத்தேடிச் சென்ருல், எனக்குத் தடபுடலாக விருந்தெல்லாம் கிடைக்கும், செய்திமட்டும் எதுவும் கிடைக்காது. அவரும் எழுதி வெளியிட்டபாடில்லை; இப்போது இறந்தும் விட்டார்.

பாவேந்தரோடு உள்ளங்கலந்து பழகிய அரசியல் நண்பர்கள் ஒவ்வோர் ஊரிலும் இருக்கிருர்கள். அவர்களில் சிலர், "அண்ணுவைப்பற்றிப் பாரதிதாசன் என்று தரக்குறைவாகப் பத்திரிகையில் எழுதிஞரோ, அன்றே வீட்டில் மாட்டியிருந்த அவர் படத்தையும், உள்ளத்தில் மாட்டியிருந்த அவர் நினைவையும் தூக்கி எறிந்துவிட்டேன்" என்று முகத்திலடித்தாற் போல் கூறுகிருர்கள். இன்றும் பாவேந்தரை ஏற்றுக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

சில அரசியல் தலைவர்கள் மேடையில் பேசும்போது பாவேந்தர் மீது காட்டும் பரிவையும் மதிப்பையும், தனிமையில் சந்திக்கும் நேரங்களில் காட்டுவதில்லை. சில அரசியல் தலைவர்களை நெருங்கவே முடியவில்லை.

கிடைத்தற்கருமையான பாவேந்தரின் புகைப்படங்கள் சிலரிடம் இருக்கின்றன. திருவானைக்காவலில் நடைபெற்ற மணிவிழாப் படமொன்று மதுரை அன்பர் ஒருவருடைய வீட்டில் சட்டம்கூட இல்லாமல் குப்பையோடு குப்பையாகக் கிடந்தது. ஆனல் அந்தப் படத்தைக் கொடுக்க அவர் விரும்பவில்லை; கறையானுக்கு உணவாக்க முடிவு செய்திருக்கிருர்.

குப்புறப்படுத்து மார்புக்குத் தலையணையைத் தாங்கலாக வைத்துக்கொண்டு பாவேந்தர் எழுதும் வழக்கமுடைய வர் என்ற செய்தியைப் பலரும் கூறுகின்றனர். ஒரு குளித்தலை நண்பர் அந்த நிலையிலேயே பாவேந்தரைப் படமெடுத்திருக்கிறார். அந்தப் படத்தைப் பார்க்கக் கேட்டபோது, ''எங்காவது கிடக்கும்; தேடிப்பார்க் கணும்'' என்று அசிரத்தையாகக் கூறிவிட்டார்.

பாவேந்தரோடு பழகிய நண்பர்களில் நூற்றுக்கு எண்பது பேர் தங்கள் இல்லத்தில் அவருக்கு விருந்து வைத்த தைப்பற்றியும், அவரது நடையுடை பாவனை பற்றியும் மேலோட்டமான செய்திகளையே கூறுகிறார்கள். பாவேந் தர் வாழ்வில் இடம்பெற்ற கலை, இலக்கியம், அரசியல், சீர்திருத்தம் பற்றிய நிகழ்ச்சிகளைக் கூறுபவர் மிகச் சிலரே! பாவேந்தர் அவ்வப்போது கூறும் நுட்பமான இலக்கியச் செய்திகளைப் புரிந்து கொள்ளவும், அவற்றை நினைவில் வைத்திருந்து கூறவும் ஓரளவு தகுதி வேண் டும். அத்தகைய தகுதிபெற்ற நண்பர்கள் கூறும் செய்தி சிந்தனைக்கு விருந்தாக உள்ளது.

கவிஞர்களுக்கே உரித்தான—சாதாரண மக்களிடமிருந்து தம்மைத் தனிப்படுத்திக் காட்டும்படியான—பண்புகளும் விசித்திரமான போக்குகளும் பாவேந்தரிடம் நிறைய உண்டு. அவற்றுள் சிலவற்றை நான் 'பாவேந்தர் நினைவுகள்' முதல்பகுதியில் எழுதியிருக்கிறேன். இந்த நூலில் பாவேந்தரின் மக்கள் சில செய்திகளை எழுதியிருக் கின்றனர். பாவேந்தரை அருகிலிருந்து ஆய்ந்தார்க்கே இது போன்ற செய்திகளைக் கூற இயலும்.

கவிஞர்கள் சுரதாவும், வாணிதாசனும், . புதுவைச்சிவ மும், பொன்னடியானும் பாவேந்தரின் பார்வையில் வளர்ந்த மாணவர்கள். இவர்களும் கவிஞர்கள் ஆகை யால், பாவேத்தர் பற்றிப் புலமை நுணுக்கத்தோடு கூடிய அரியபல செய்திகளைக் கூறியிருக்கிறார்கள்.

பாவேந்தரின் 50ஆவது வயதுக்கு முற்பட்ட குடும்பச் செய்திகளை உணர்ச்சி பூர்வமாக அவர் மகளார் திருமதி சரசுவதி கூறியிருக்கிருர். அக்கட்டுரை படிப்பவர் உள் ளத்தைத் தொடும்படி அமைந்துள்ளது.

பாவேந்தரின் இரண்டாவது மகளார் திருமதி வசந்தா நல்ல எழுத்தாற்றல் உள்ளவர். சொல்வதைச் சுவை படச் சொல்கிருர். பாவேந்தரின் வாழ்க்கை நிகழ்ச்சி களைப் பல செய்தித்தாள்களில் சிறுசிறு துணிக்கைகளாக நிறைய எழுதி வெளியிட்டுள்ளார். அஃதோர் தனி நூலாகவே அமையும் தகுதியுடையது. இந்நூலில் ஓரிரு செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.

திருவாளர் மன்னர்மன்னன் பாவேந்தரின் வாழ்க்கை வரலாற்றை இளமையிலிருந்தே முறைப்படத் தொகுத்து எழுதிக்கொண்டிருக்கிருர். அது பாவேந்தரின் முழுமை பெற்ற வரலாருக அமையும். அவருடைய கட்டுரையும் இத்தொகுப்பில் இடம்பெற்ருல் சிறப்பாக இருக்கு மென்று நினைத்து அவருக்குக் கடிதம் எழுதினேன். அவரும் உள்ளம் உவந்து ஒரு கட்டுரை அனுப்பிவைத்து இத்தொகுப்பைச் சிறப்பித்திருக்கிருர்.

முத்தமிழ்க் காவலர் பாவேந்தரோடு நீண்டநாளாகப் பழகியவர். பாவேந்தரைப்பற்றிய அவருடைய மதிப் பீடுகள் தமிழுணர்வின் அடிப்படையில் இலக்கிய நயம் பொருந்த அமைந்திருக்கின்றன. திருவாளர் திருலோக சீதாராமின் கட்டுரை ஒரு கவிஞனுக்கே உரிய பெரு மிதத்தோடு எழுதப்பட்டுள்ளது.

திருவாளர் மு. செல்லப்ப ரெட்டியார் பாவேந்தர் நடத் திய நாடகக்குழுவின் பொறுப்பாளராக இருந்தவர். பாவேந்தரின் நாடகத்துறை அனுபவங்களைக் கூறு வதற்கு இவரைத் தவிரத் தகுதியானவர் வேறு யாரு மில்லை. அந்த வகையில் இவரது கட்டுரை இத்தொகுப்

பில் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள பிற அறிஞர்களின் கட்டுரைகளும் ஒவ்வொரு வகையில் தனிச்சிறப்புப் பெற்ற பொறுக்கு மணிகள்.


உலகில் ஆங்கிலக் கவிஞன் ஷேக்ஸ்பியர் பற்றியும் அவன் படைப்புகள் பற்றியுமே அதிகநூல்கள் எழுதப்பட்டுள்ளன. தொகையில் அவை 50,000க்கும் மேற்பட்டவை. இந்த நூற்றுண்டின் இறுதிக்குள் பாவேந்தர் பற்றியும், அவர் படைப்புகள் பற்றியும் தரமான 500 நூல்களாவது வெளியாகவேண்டும் என்பது என் விருப்பம்.

நான் நேரில் சென்றபோது செய்திகள் உதவியும், எனது வேண்டுகோளுக்கிசைந்து கட்டுரைகள் அனுப்பியும் இத்தொகுப்பு உருவாவதற்குக் காரணமாக இருந்த பெரியோர்களுக்கு நன்றி.

இந்நூலுக்கு இன்றியமையாத சில புகைப்படங்களை எடுத்தனுப்பிய திருமதி வசந்தா அவர்கள் எனது நன்றிக்குரியவர். 'பாவேந்தர் நினைவுகளை' வெளிக்கொணர்வதில் தணியாத ஆர்வம் காட்டிவரும் அகரம் வெளியீட்டார் தமிழரின் நன்றிக்குரியவர்.

சேலம்-4
1-12-80


முருகு



பாவேந்தர் வாழ்ந்த புதுவைப் பெருமாள் கோவில் தெரு வீடு-
அரசாங்க உடைமையாக்கப்பட்டுத் தற்போது
'புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் நினைவு நூலகம்-காட்சிக்கூடம்' உள்ளது.



புதுவை கல்வே கல்லூரி
பாவேந்தர் படித்தது—பணிபுரிந்தது



பாவேந்தர் நினைவு மண்டபம்
புதுவைக் கடற்கரைப் பாப்பம்மா கோயில் இடுகாடு
புதுவை நகராட்சியினரால் 1965இல் நிறுவப்பட்டது



வாத்தியார் கனக சுப்புரத்தினம்

1935

# பாவேந்தர் பரம்பரை

**கனகசுப்புரத்தினம் ▢ பழனியம்மாள்**

| மக்கள் | மருமக்கள் | பேரர் | கொள்ளுப்பேரர் |
|---|---|---|---|
| சரசுவதி | கண்ணப்பர் | புகழேந்தி<br>பாரி<br>மல்லிகை<br>இளமுருகு | சுப்புரத்தினபாரதி<br>பரமநாதன் |
| வசந்தா | தண்டபாணி | தமிழ்ச்செல்வம் (பெண்)<br>பாண்டியன்<br>சேரன் | அருட்செல்வம்<br>புகழ்வடிவு (பெண்)<br>வெண்ணிலா (பெண்) |
| கோபதி | சாவித்திரி | செல்வம்<br>தென்னவன்<br>பாரதி<br>அமுதா | |
| ரமணி | சிவசுப்பிரமணியம் | செங்குட்டுவன் (எ)<br>வீரமணி<br>மணிமேகலை<br>முல்லைக்கொடி<br>சுப்புரத்தினம் (பெண்)<br>மணியரசு | |

பாவேந்தரின் பெற்றோர் } கனகசபை ▢ இலக்குமி

சகோதரர் ▢ சுப்பராயன்

சகோதரிகள் சிவகாமசுந்தரி ▢ இராசாம்பாள்



# அகம்


மார்கழியின் உச்சியில்...! 9
கவிஞர் சுரதா

பாவேந்தரோடு நான்: சில நினைவுகள் 21
கவிஞர் வாணிதாசன்

முழுமதியனையார் 35
கவிஞர் ச. சிவப்பிரகாசம் எம்.பி.

உள்ளத்தில் மணக்கும் முல்லைச் சரம் 43
கவிஞர் பொன்னடியான்

என் தந்தையார் 55
திருமதி சரசுவதி கண்ணப்பர்

பாடிப்பறந்த குயில் 73
திருமதி வசந்தா தண்டபாணி

அச்சம்—அவர் அறியாதது 81
திரு. மன்னர் மன்னன்

பாவேந்தர் பற்றி...! 91
முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்

நானறிந்த பாரதிதாசனார் 97
பேராசிரியர் மயிலை. சிவமுத்து

நினைவுத் துளிகள் 107
டாக்டர் திருமதி தே. தியாகராசன்

இன்பஇரவு 115
திரு. மு. செல்லப்ப ரெட்டியார்

கவியரசன் பாரதிதாசன் 139
கவிஞர் திருலோக சீதாராம்

பாவேந்தருடன் ஒருநாள் 153
கவிஞர் மணிவேலன்

இழந்த செல்வம் 163
டாக்டர் முருகரத்தனம்



கவிஞர் சுரதா

மார்கழியின்
உச்சியில்....!

○

'சுப்புரத்தின தாசன்' என்று பெருமிதத்தோடு தம்மைக் கூறிக்கொள்ளும் இச்சிக்கல் இராசகோபாலக் கவிஞர், எழுதும் பாணியில் பாவேந்தரிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர். பாவேந்தரிடத்தில் கூட்டுப் புழுவாக இருந்து, இன்று பட்டொளி வீசிப்பறக்கும் வண்ணத்துப் பூச்சி!

இவர் பணக்காரச் சாதியில் பிறக்கவில்லை, முன்னுக்குத் தள்ளப்படுவதற்கு!

சொந்தக்காரர் யாரும் பத்திரிகை நடத்தவில்லை, வாரந்தோறும் படத்தோடு விளம்பரம் பெறுவதற்கு!

எந்த அரசியற் கூடாரத்திலும் இவர் நிலையாகத் தங்குவதில்லை, மேடை விளம்பரம் பெறுவதற்கு!

வலியச் சென்று சங்கராச்சாரியார் காலில் விழுவதில்லை, முத்திரை குத்திக் கொள்வதற்கு!

எவரும் எடுத்து நிறுத்தாமல் தாமே எழுந்து நிற்கும் கவிஞர் சுரதா! உடம்பு தேய உருண்டுசென்று கயிலையைக் கண்ட நாவுக்கரசர் போல, உழைத்துழைத்துப் புகழ்க் கயிலையை எட்டிப் பிடித்தவர்!

எழுத்துச் சிக்கனக்காரர்!

தந்தக் கவிதைச் சிற்பி!

'சுரதாவுக்கு இணை சுரதாதான்!' என்று பாவேந்தரால் பாராட்டப்பட்ட இவர் பாவேந்தரோடு வாழ்ந்த நாட்களை வண்ணக் குழம்பில் தீட்டிக் காட்டியிருக்கிறார்.

○



குழந்தைக்குப் பலூன் பிடிக்கும். காரணம் அது எல்லாக் கடையின் முன்னாலும் தொங்கவிடப்பட்டிருக்கும். எனது காய்ப் பருவத்தில் சுத்தானந்த பாரதி பாட்டுத்தான் எனக்குப் பிடிக்கும். காரணம் பிரித்த பத்திரிகையில் எல்லாம் அவர் பாட்டுத்தான் வெளியாகியிருக்கும். எனது சொந்த ஊர், சிக்கலுக்குப் பக்கத்தில் உள்ள பழையனூர். பழையனூரில் நான் வழக்கமாகத் தேநீர் அருந்தும் கடையின் சொந்தக்காரன் அழகப்பன். அவன் தாடிச்சிங்கம் தந்தை பெரியாரின் தலைமையில் திருமணம் செய்து கொண்டவன். தூங்கும்போது கூடக் கருப்புச் சட்டையைக் கழற்ற மறுக்கும் திராவிடர் கழகத் தீவிர உறுப்பினன். ஒருநாள் தேநீரை ஆற்றிக் கொண்டே 'ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பர் ஆகிவிட்டால்'...... என்ற பாவேந்தரின் பாட்டு வரிகளை 'டைம் கொடுத்து' வெட்டி வெட்டிப் பாடினான். அப்பாடலைக் கேட்டு அப்படியே மெய்மறந்து நின்றேன். அந்தக் கணமே சுத்தானந்த பாரதியின் பலூன் பாட்டைப் பறக்க விட்டுவிட்டுப் பாவேந்தர் வரிகளைப் பற்றிக் கொண்டேன். அன்றிலிருந்து நந்தனுக்குப் பிடித்த சிதம்பரப் பயித்தியம் போல், எனக்கும் புதுவைப் பயித்தியம் பிடித்துக் கொண்டது.

1941-ஆம் ஆண்டு ஜனவரி 14. அன்று பொங்கல் நாள். நான் காதலித்துக் கூட்டி வந்த பெண்ணோடு பாவேந்தர் வீட்டுக்கு வந்து அவர் முன்னால் நின்றேன். பாட்டு வரிகளில் பதித்திருந்த விழிகளை உயர்த்தி எங்களைக்

கொஞ்ச நேரம் பார்வையால் எடை போட்டார். ஒளி மிகுந்த கண்கள்! உள்ளத்தை ஊடுருவும் தீட்சண்யமான பார்வை! பிறகு சாட்டையைச் சொடுக்குவது போலச் சில வார்த்தைக் கேள்விகள்:

யார் நீ?
ராஜகோபால்

ஊர்?
சிக்கல்!

இது?
என் காதலி.

எங்க?
கலப்புத் திருமணம் செய்துக்கலாமுன்னு......

சாமி கும்புடுவயா?
இல்லை!

சாப்பிட்டயா?
இல்லை!

போய் முதல்ல சாப்பிடு.

இதுதான் முதன் முதலில் பாவேந்தருக்கும் எனக்கும் நடந்த உரையாடல்.

சாப்பிட்டு முடித்துவிட்டு வந்தேன். மேல் பூச்சு இல்லாத என் பச்சையான பதில்கள் அவருக்கு மிகவும் பிடித்திருக்க வேண்டும். இரக்க உணர்வுடன் என்னைப் பார்த்தார். என்னை அருகில் அழைத்து, ''கலப்பு மணம் இருக்கட்டும். முதல்லே இதை (அருகில் நின்று கொண்டிருந்த பெண்ணைக் காட்டி) ஊரில கொண்டு போய்விட்டுட்டு வந்துடு. உன்னை நான் வேலைக்கு வெச்சுக்கறேன். கலப்பு மணம் அப்புறம்!...... என்ன?'' என்று சொன்னர். வழிச் செலவுக்குப் பணமும் கொடுத்தார். நான் அப்பெண்ணை ஊரில் கொண்டுபோய் விட்டு விட்டு மீண்டும் புதுவை வந்து சேர்ந்தேன்.

பாவேந்தரைச் சந்தித்த முதல்நாள் அச்சகத்திலிருந்து அவருடைய கவிதை ஒன்றின் திருத்தப்படி (Proof) வந்திருந்தது. அதை எடுத்துப் படித்துப் பார்த்தேன்.

'மார்கழியின் உச்சியில்
வருக தைப்பொங்கல் நாள்'—

என்று தொடங்கிய கவிதை வரி என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. மார்கழித் திங்கள் முடிந்துவிட்ட செய்தியைக் குறிப்பிடுவதற்கு அவர் கையாண்ட 'மார்கழியின் உச்சி' என்ற சொல்லாட்சி எனக்கு மிகவும் புதுமையாகத் தென்பட்டது.

நான் ஊருக்குச் சென்று மீண்டும் திரும்பி வந்து பாவேந்தரைச் சந்தித்தபோது எனக்கு ஒரு வேலை தரச் சொல்லிப் புதுவைத் துறைமுக அதிகாரி ஒருவருக்குப் பரிந்துரைக் கடிதம் கொடுத்தார். நான் அதை எடுத்துக்கொண்டு துறைமுக அலுவலகம் நோக்கிச் சென்றேன். ஆனால் துறைமுகப் பகுதியை நெருங்குவதற்கு முன்பாகவே ஆபத்து என்னை வலை போட்டுத் தேடிக் கொண்டிருப்பதை அறிந்தேன். எந்தப் பெண்ணை நான் புதுவை அழைத்து வந்தேனோ, அந்தப் பெண்ணைச் சேர்ந்த சிலர் அங்கு கழுகுப் பார்வையோடு காத்துக் கொண்டிருந்தனர். நான் ஏன் துறைமுகத்துக்குள் நுழையப் போகிறேன்? பந்தைப்போல் வந்த சுவடு தெரியாமல் பாவேந்தர் வீட்டுக்கே திரும்பி விட்டேன்.

பாவேந்தரிடம் வந்து நடந்ததைச் சொன்னேன். 'சரி, சொல்றதைக் கேட்டுக்கிட்டு இங்கேயே இருந்திடு!' என்றார். நானும் சரியென்றேன். மாதம் இருபது ரூபாய் சம்பளம். அப்போதுபாவேந்தரின் மூத்த பெண் சரசுவதி சடங்காகி வீட்டிலே இருந்தார்கள். கோபதி பள்ளி மாணவன். நான் கோபதியைப் பள்ளிக்கு இட்டுச் செல்வேன். வீட்டுக்குக் காய்கறிவாங்கி வருவேன். பாவேந்தரின் முன்கோபத்துக்கு அஞ்சி, யாரும் அதிக நாள்

அவரிடம் வேலைக்கு இருக்க மாட்டார்கள். நான் அடக்க மாகவும் அமைதியாகவும் நல்ல முறையிலும் அவரிடம் நடந்து கொண்டேன்.

என் கையெழுத்து அவருக்கு மிகவும் பிடிக்கும். பாண்டியன் பரிசை மூன்று முறை நான் படியெடுத்துக் கொடுத்தேன். பாவேந்தர் தாம் எழுதும் பாடல்களுக்கு முதலிலேயே தலைப்புக் கொடுக்கும் வழக்கமில்லை. அவர் எழுதிப் போட்ட பாடல்களைக் கையில் எடுத்து, ''இப் பாட்டுக்கு என்ன தலைப்பு?'' என்று அவரைக் கேட்டால் 'நீயே ஒரு தலைப்பு வையேன்!' என்பார். காதல் நினைவுகள் தொகுதியில் உள்ள 'ஒரே குறை' என்ற தலைப்பு பொன்னி ஆசிரியர் முருகுசுப்பிரமணியம் வைத்த தலைப்பு. 'குடும்ப விளக்கு' நான் சொன்ன தலைப்பாகும்.

வளர்ந்து புகழேணியின் உச்சியில் இருக்கும் சிலர் வளரும் நிலையில் இருப்பவரை ஊக்குவிப்பது மிக அருமை. ஆனால் பாவேந்தர் அதற்கு நேர்மாறானவர். நான் எழுதிய கவிதைகள் சிலவற்றை வேறொருவர் பெயர் போட்டு முதலில் அவரிடம் காட்டினேன். அவற்றைப் படித்துவிட்டு 'நல்லாருக்கு... பக்குவப்பட்டவன் எழுதற கவிதை போல இருக்கு' என்று சொன்னார். அப்பாராட்டு எனக்கு ஒரு 'டானிக்' மாதிரி இருந்தது. அப்பாடல்களை எழுதியவன் நான்தான் என்பதை அறிந்த பிறகு, 'விடாதே! எழுது! ஆறுமுக நாவலரை விட உனக்கு ஆற்றல் அதிகம் இருக்கு!' என்று பாராட்டினார். என்னை ஏன் அவ்வாறு அவர் பாராட்டினார் என்று எனக்கு அப்போது விளங்கவில்லை.

பாரதிதாசன் என்ற புனை பெயரைத் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த சில நண்பர்கள் கேலி செய்வது வழக்கம். அவர்களுள் பட்டுக்கோட்டை அழகிரிசாமி குறிப்பிடத் தக்கவர். பாரதி ஒரு பார்ப்பனர். மேலும் 'தாசன்' என்பது வடசொல். ''பாரதிதாசன் என்றால் பாரதிக்கு

அடிமை என்றல்லவா பொருள்? என்று சிலர் அவரைக் கேட்பதுண்டு. அதற்குப் பாவேந்தர் 'ஆமாண்டா! நான் பாரதிக்கு அடிமை தான்!' என்று சட்டென்று கூறுவார்.

பாரதிதாசன் என்ற பெயர் நாட்டில் விளம்பரமாகத் தொடங்கியதும், அப்பெயரைப் பின்பற்றித் 'தாசன் தாசன்' என்று கவிஞர்கள் புனைபெயர் வைத்துக் கொள்வது வழக்கமாகி விட்டது. என்னையும் அவ்வாசை பற்றிக் கொண்டது. ஒரு நாள் ஒரு பாடலை எழுதி அதன் கீழே சுப்புரத்தின தாசன் என்று கையெழுத்திட்டிருந்தேன். அதைப்பார்த்ததும் 'ஏம்பா இதெல்லாம்?' என்றார். இவ்வாறு சொன்னாலும் அவருக்கு உள்ளூர மகிழ்ச்சிதான். பிறகு நான் அவருக்குக் கடிதம் எழுதும் போதெல்லாம் சுப்புரத்தினதாசன் என்றே கையெழுத்திட்டு எழுதுவது வழக்கம். ஒருமுறை கடிதம் எழுதிய போது, முழுப்பெயரையும் எழுதுவதற்குக் கீழே இடமில்லை: சு. ர. தா. என்று சுருக்கமாக எழுதினேன். பிறகு அந்த ஆணிகளைப் பிடுங்கி விட்டுச் 'சுரதா' என்றே கையெழுத்திட ஆரம்பித்தேன். அப்பெயரே எனக்கு நிலைத்து விட்டது.

பாவேந்தருக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பு நான்கு ஆண்டுகள் நீடித்தது. புதுவையிலும் எங்கள் ஊரிலுமாக என் வாழ்க்கை கழிந்தது. கவிதைத்துறையில் ஈடுபாடும், ஆற்றலும் என்னிடத்தில் வளர்ச்சி பெற்றன. பாவேந்தர் தொடர்பால் என் படைப்பாற்றல் கூர்மை பெற்றது. 1944-ஆம் ஆண்டு பாவேந்தர் 'இன்ப இரவு' என்ற நாடகக் குழுவை நிறுவினார். நாமக்கல் செல்லப்ப ரெட்டியாரும், பொன்னி ஆசிரியர் முருகு சுப்பிரமணியமும், பெரியண்ணனும், பாவேந்தருக்கு உறுதுணையாக இருந்து இன்ப இரவு நாடகக் குழுவைப் பொறுப்பேற்று நடத்தினர். பாவேந்தர் படைப்பில் உள்ள இயல் இசை நாடகப் பகுதிகள் இன்ப இரவில் இடம்பெற்றன. இசையமைப்பாளராகிய ஞானமணி

யும், திருவள்ளுவர் படத்தை எழுதிப் புகழ்பெற்ற வேணுகோபால சர்மாவும், நானும் அதில் நடிகர்களாக இடம்பெற்றிருந்தோம். இன்ப இரவு நாடகம் சேலம் சென்ட்ரல் திரைப்படக் கொட்டகையில் முதன் முதல் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இரண்டாவதாக நாமக்கல்லில் தொடர்ந்து நடைபெற்றது. அந்நாடகத்திற்குப் பொதுமக்களிடத்தில் நல்ல வரவேற்பிருந்தும் அனுபவக் குறைவின் காரணமாகத் தொடர்ந்து நடத்த முடியாமல் போயிற்று. பாவேந்தரின் பாடல்களுக்கு இசையமைத்து ஞானமணி மிக இனிமையாகப் பாடினார். அவர் பாடலைக் கேட்டவர் எல்லோரும் 'ஞானமணி' என்ற பெயர் அவருக்குப் பொருத்தம் தான் என்று பாராட்டினர். பின்னர் ஞானமணி பாட, பயிற்சி பெற்ற சில பெண்கள் நாட்டியம் ஆடுவர். இறுதியில் புரட்சிக்கவி நாடகம் நடைபெறும். நான் அந்த நாடகத்தில் அமைச்சனாக நடித்தேன். 'காடைக்காரக்குறவ'னாக வேடமிட்டு நான் மேடையில் ஆடுவதும் உண்டு. 'புரட்சிக்கவி' காப்பியத்தை மேடைக்கு ஏற்ற முறையில் பாவேந்தர் அழகாக மாற்றி எழுதியிருந்தார். கவிஞன் உதாரன் அமுதவல்லிக்கு இலக்கணப் பாடம் சொல்லிக் கொடுக்கும் காட்சியை மிக எளிமையாகவும், சுவையாகவும், புரியும்படியும் எழுதியிருந்தார். அந்நாடகத்திற் பளிச்சிட்ட சில கவிதை வரிகள் என் நெஞ்சத்தில் இன்றும் இனித்துக் கொண்டிருக்கின்றன.

களவுப் புணர்ச்சியில் ஈடுபட்டிருந்த அரசிளங்குமரி அமுதவல்லி ஒருநாள் தோட்டத்திலிருந்து அரண்மனை திரும்புகிறாள். அவள் தோற்றத்தைக் கண்ட தோழியர் ஐயம் கொள்கின்றனர். அந்த ஐயத்தை அழகிய உவமை நயத்தோடு அந்தத் தோழியர் வெளிப்படுத்துகிறார்கள். மிக நயமான கற்பனை.

ஓடம் கவிழ்ந்துபின் உருப் பெற்றாலும்
புறத்தும் உள்ளும் புனலநனைந் திருக்கும்.
தெருக்குள் உலவும் சித்திரத் தேர்உன்
உருக் குலைந்ததேன்? உள்ளதைக் கூறு.

நான் வாழ்க்கையில் சந்தித்த பலருள் பாவேந்தர் மிக பெருமிதமான தோற்றமுடையவர். உண்பது, உடுப்பது, உரையாடுவது, நடப்பது யாவற்றிலும் ஒரு பெருமிதம் தென்படும். எவ்வளவு பெரிய நிலையில் இருப்பவர்களும் பாவேந்தர் முன் வரும்போது, அவர்களையும் அறியாமல் அவர்கள் உள்ளத்தில் ஒருவித அச்சங்கலந்த மரியாதை தோன்றுவதை நான் பார்த்திருக்கிறேன். பேரறிஞர் அண்ணா, பெரியாருக்கு அடுத்தாற்போல் இந்த நூற்றாண்டுத் தமிழர்களால் மதிக்கப்பட்ட பெரிய மனிதர். அவரே பாவேந்தர் முன்னால் வரும்போது உட்காரமாட்டார். ''அண்ணாத்துரை! ஏ நிக்கற? உக்காரு!'' என்று பாவேந்தர் சொல்லுவார். ஆனால் அண்ணா உட்காரமாட்டார். பாவேந்தரின் எழுத்து அண்ணாவின் துவக்கக் கால வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்தது.

பாவேந்தர் இயல்பாகவே பரந்த உள்ளம் உடையவர். யார் வந்து வாழ்த்துக் கவிதை, பாராட்டுக் கவிதை கேட்டாலும் முகங்கோணாமல் எழுதிக் கொடுப்பார். தன்னைத் தேடிவருபவர்க்கெல்லாம் சோறு போடுவார். பழகியவர் எவ்வளவு தாழ்ந்தவராக இருந்தாலும், கொஞ்சம் கூடப் பெருமை பாராட்டாமல் உதவி செய்வார். வசதியற்ற நண்பர் யாராவது கூட்டத்துக்கு அழைக்க வந்தால், ''நீயேன் கைக்காசை செலவு பண்ற? நாந்தா இத்தனாந்தேதி வேறொரு விஷயமா அங்க வர்ரனே! அப்பப் பாத்து வைச்சுக்க!'' என்று உரிமையோடு கூறுவார்.

தமது கவிதை ஆற்றலில் பாவேந்தருக்கு அளவு கடந்த நம்பிக்கை உண்டு. எந்தச் செய்தியை எப்படிச் சொன்னால் படிப்பவர் மனதில் உடனே படியும் என்பதை நுட்பமாக உணர்ந்து பாடுவதில் அவருக்கு நிகர் அவரே! ''இதோ பார்! இதைப் படிச்சான்னா அப்படியே உள்ளத்திலே உட்காரும்!'' என்று சொல்லிவிட்டுக் கவிதை எழுதுவார். அவ்வளவு தன்னம்பிக்கை.

எவ்வளவு புகழ் பெற்றவரானாலும் தகுதியில்லாதவர் வளர்ச்சியைப் பாவேந்தர் மதிப்பதில்லை. பிழையாக எழுதிப் பாவேந்தரின் பாராட்டைப் பெறுவது என்பது முடியாத காரியம். முன்னுரை வேண்டி வந்த சிலரைப் பார்த்து, ''உன்னையெல்லாம் கவிதை எழுதலேன்னு எவங்கேட்டா? போ போ! வந்துட்டானுக!'' என்று திட்டி அனுப்புவார்.

இறைவன் மீது பாடும் துதிப்பாடல்களைத்தான் மக்கள் பாராயணம் செய்வது வழக்கம். பக்திப் பாடலைப் போல் பாவேந்தரின் பாடலையும் பாராயணம் செய்ய இந்த நாட்டில் ஒரு பெருங் கூட்டமே உண்டு. 'பாவேந்தர் பாடலைப் படித்தேன்' என்று சொல்லிக்கொள்வதைக் கேவலமாக எண்ணிய தமிழ்ப் பேராசிரியர்களை எனக்குத் தெரியும். இன்று பாவேந்தர் பாடலை ஆராய்ச்சி செய்து 'டாக்டர்' பட்டம் பெறப் பல பேராசிரியர்கள் போட்டி போட்டுக்கொண்டு முன்வருகின்றனர். இந்த நாட்டிலே பாவேந்தருக்குக் கடற்கரையில் சிலையெடுக்க வேண்டும் என்ற கருத்தை முதன் முதலில் வெளியிட்டவன் நான்தான்.† பேரறிஞர் அண்ணா அதை நிறைவேற்றினார்.

பாவேந்தரின் தொடக்கநாள் கவிதைகள் மிகவும் கரடு முரடானவை. எழுத்தசை எண்ணிப்பாடும் வண்ணப் பாடல்களையும் சந்த விருத்தங்களையும் தம்முடைய இருபதாம் வயதுக்கு முன்பே பாவேந்தர் எழுதிக் குவித்தவர். எவ்வளவுக் கெவ்வளவு புரியாத பாடல்களை ஒருவன் எழுதுகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் பெருங்கவிஞன் என்று எண்ணும் புலவர் கூட்டத்துள் தாமும் ஒருவராக இருந்தவர். இந்தத் தவறான எண்ணம் எவ்வாறு தம்மை விட்டு நீங்கியது என்பதைப் பாவேந்தர் ஒருமுறை என்னிடம் கூறினார். அவர்

† 'சிலை வைப்போம்' என்ற கவிதை 22-4-55 முரசொலி இதழில் என்னால் எழுதப்பட்டது.

என்ன சொன்னார் என்பதை அப்படியே எழுதுகிறேன்:

''பாரதியாரை நான் முதன் முதலில் சந்தித்த போது எனக்கு வயது இருபதிருக்கும். படித்த இளைஞர் கூட்டமொன்று எப்போதும் அவரைச் சுற்றிக் கொண்டிருக்கும். பாரதி இலக்கியம், அரசியல், சமூகம் பற்றிப் பல கருத்துக்களையும் ஓயாமல் பேசிக்கொண்டே இருப்பார். திடீரென்று பேச்சை நிறுத்திவிட்டு ஓரமாகப் போய் உட்கார்ந்துகொண்டு கவிதை எழுதத் தொடங்குவார். இரண்டடி எழுதுவார். 'ஊஹூம்... வல்லடா!' என்று தலையை ஆட்டி விட்டு எழுந்து வந்து விடுவார். பாதியில் விட்ட சில வரிகளை நான்கைந்து மாதங்கள் கழித்துக்கூடச் சிந்தித்து எழுதிமுடிக்கும் வழக்கம் அவருக்குண்டு.

அவரெழுதிய கையெழுத்துப் படிகள் அங்குமிங்குமாகக் கிடக்கும். ஒருநாள் அவர் எழுதும் விசிப்பலகை டிராயரை இழுத்துப் பார்த்தபோது 'பாஞ்சாலி சபதம்' என்ற கையெழுத்துப்படி இருந்தது. அதை எடுத்துப் படித்துப் பார்த்தேன். பாடல்கள் மிக எளிமையாகவும், புரியும் படியும் இருந்தன. அதே சமயம் மிகச் சுவையாகவும் இருந்தன. இப்படி எளிதில் புரியும்படியான கவிதையை நான் பார்த்ததில்லை. புரியும்படி எளிதாகக் கவிதை எழுதமுடியும் என்றும் நான் நினைத்ததில்லை.

அக்கையெழுத்துப்படி என் கவிதைப் போக்கில் பெரிய மாறுதலை உண்டாக்கியது; சுப்பிரமணியர் துதியமுது எழுதிய சுப்புரத்தினத்தைப் பாரதிதாசனாக்கியது. 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்ற எனது பாடல் பாஞ்சாலி சபதம் கையெழுத்துப் படியைப் படித்தபின் எழுதியது.''

பாரதியாரையும், பெரியாரையும்தான் பாவேந்தர் தம் வாழ்க்கையில் மதித்தார். ஒரு நாள் புகை பிடித்துக் கொண்டிருந்த பாவேந்தர் ''தோ! இருக்கே சிகரெட்!

இதை பாரதியார் முன்னலையும் பெரியார் முன்னல யுந்தா குடிக்க மாட்டேன்! இந்த இரண்டுபேர் தவிர எவர் முன்னலும் என் சிகரெட்ட நா மறைச்சது கிடையாது. ஏன்ன...... இரண்டு பேரும் ரொம்பப் பெரியவங்க. பாரதி போயிட்டார். இவர் இருக்கிரு்!'' என்று கூறினர்.

பாவேந்தர் ஒருவர் தாம் பாரதியின் பரம்பரை. ஆனல் பாவேந்தருக்குப் பின் ஒரு பெருங் கூட்டமே உண்டு. பாரதியை விடப் பாவேந்தர், தமிழை முறையாகப் பயின்றவர்; அழுத்தமான புலமையுடையவர். தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் பெயர்த்து வெளி யிடுவதற்கு ஒரு தனித்துறையைத் தமிழக அரசு நிறுவ வேண்டும். படைப்பாற்றலும் பன்மொழிப் பயிற்சியும் மிக்கவர்களைக் கொண்டு பாவேந்தர் கவிதைகளை மொழி பெயர்த்து உலகில் பரப்ப வேண்டும். அதுதான் பாவேந்தருக்கு நாம் ஆற்ற வேண்டிய நன்றிக் கடன்.



கவிஞர் வாணிதாசன்

# பாவேந்தரோடு நான்:
# சில நினைவுகள்

○

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற புரட்சிப் பயிர் விளைந்த புதுவைப் பண்ணை பாவேந்தர் பிறப்பிடம்; அப்பண்ணையின் இரண்டாம் போகப் பயிர் கவிஞர் வாணிதாசன்.

பாவேந்தர் பயின்று பட்டம் பெற்று ஆசிரியர் பணி புரிந்த கல்வே கல்லூரியில் இவரும் பயின்று பட்டம் பெற்று ஆசிரியராகப் பணிபுரிந்தார். எனவே கல்வே கல்லூரியின் இலக்கிய வரலாற்றில் பாவேந்தர் முதல் அத்தியாயம்; வாணிதாசன் இரண்டாம் அத்தியாயம்.

பாவேந்தர் புதுவையில் பிறந்து ஈரோட்டுக்குச் சென்றவர். வாணிதாசன் புதுவையில் பிறந்து ஈரோடு வழியாகக் காஞ்சி சென்றவர்.

'ஷாநாமா' எழுதிய பாரசீகப் பெருங்கவிஞன் ஃபிர்தௌசியைப் போல, இறந்த பின் அரசாங்கப் பரிசை எதிர்கொண்டவர்.

இவர் நூற்றுக்குநூறு பாவேந்தரின் மாணவர்; பாவேந்தரின் கவிதைப்பாணியை அப்படியே பின் பற்றி எழுதியவர். எப்போதும் கவிதைமயக்கத்தோடு வாழ்ந்தவர்; 'நன்றியுள்ளவன்' என்று பாவேந்தரால் பாராட்டப்பட்டவர்.

இங்கே பாவேந்தர் என்னும் பசும்பொன்னைத் தம் எழுத்துத் தராசில் எடை போட்டுக் காட்டுகிறார்.

○



பாவேந்தர் பாரதிதாசனை அறியாதார் இலர். அவரைப் போன்று தமிழுக்குத் தொண்டு செய்தவர் பிறந்ததும் இல்லை; இனிப் பிறக்கப் போவதும் இல்லை!

கல்வி பயிலும் போதே கவியரசருக்குத் தாய்மொழி மீது தணியாத பற்றும், கவிபாடும் வேட்கையும் நிறைந்திருந் தன. அதற்குத் தூண்டுகோலாய்ப் பாரதியாரின் கூட்டுறவு—புதுவையில் பாரதியார் புகலிடம் தேடிவந்த போது—ஏற்பட்டது. பாரதியாரின் பாடல்கள் இவ ருள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன; இவரையும் எழுதத் தூண்டின.

செஞ்சொற்சுவை நனி சொட்டச் சொட்டச் சிறந்த தோத்திரப் பாடல்கள் பல அப்பொழுதே பாவேந்தர் பாரதிதாசன் பாடியுள்ளார். இவர் பிரெஞ்சு அரசாங் கத்தில் தமிழாசிரியர் பணியேற்றுச் சுமார் முப்பதாண்டு கள் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

தமிழாசிரியர் பணிபுரிந்து கொண்டிருக்கும்போது தன் மான இயக்கத் தொடர்பு இவருக்கு ஏற்பட்டது. இவ ருக்குத் தன்மான இயக்கத் தொடர்பு ஏற்பட்டது என் பதை விட, இவர் உள்ளத்தில் கொந்தளித்துக் கொண் டிருந்த தன்மான உணர்வு — கொடுமையை எதிர்க்கும் துணிவு—தாய்மொழிப்பற்று ஆகியவை இவரைத் தன் மானக் கவிஞராக ஆக்கின என்றே சொல்லலாம்.

அப்போது புதுவையில் வாழ்ந்த—பிரெஞ்சு மொழியும்

தமிழும் நன்கறிந்த முத்தையா முதலியார், அவோக்கா (வழக்கறிஞர்) செல்ல நாயகர், அவோக்கா பெருமாள், நோயேல் போன்றவர்களுடன் சேர்ந்து கவியரசர் தன் மான இயக்கப் பணியைப் புதுவையில் பல எதிர்ப்பு களுக்கிடையே தோற்றுவித்துப் பணி புரிந்து வந்தார். அவர்களுள் பெருந்துன்பத்துக்கு அரசாங்கத்தாரால் ஆளாக்கப்பட்ட நோயேல் என்பவர் கவியரசரின் உயிர் நண்பராவார். அண்மையில் புதுவையில் நடந்த கவியரசரின் எண்பதாவது ஆண்டுவிழாவில் அவருடன் கலந்து பேசும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

அந்நாளில் தன்மானக் கவிஞராக இருந்த ஒரே காரணத்தால் அரசாங்கத்தாலும், பொதுமக்களாலும், படித்த ஒருசிலராலும் இவரடைந்த அல்லல்கள் பலப் பல.

அரசாங்கம் அவரை அடிக்கடி வேறு ஊர்களுக்கு மாற்றி விடும். பல தொல்லைகள் தரும். ஆனால் கவியரசர் அதற்கெல்லாம் சளைத்ததே கிடையாது. போக்குவரவு வசதி இல்லாத இடங்களிலேயே இவர் தமிழாசிரியர் பணிநடத்தப் பெரும்பாலும் உத்தரவு வரும். எங்கே சென்றாலும், எதிர்ப்பும் இவரைத் தொடர்ந்து கொண்டே வரும்.

இவர் காலத்திலேயே இவரைப் போன்று தமிழாசிரியர் பணிபுரிந்து வந்த துரைசாமி முதலியார் என்னும் 'துரைசாமி வாத்தியார்' இவருக்குக் கொடுத்துவந்த தொல்லைகள் சொல்லிமுடியா. இவரைப் பற்றிச் 'சுயமரியாதைச் சுப்பன்' என்னும் தலைப்பில் எத்தனையோ கட்டுரைகள் வெளிவரும். அவற்றிற்கெல்லாம் ஆணித் தரமான காரண காரிய விளங்கங்களை எழுதிப் பகைவரான துரைசாமி வாத்தியாரை முறியடித்து வெற்றி வாகை சூடினர் கவியரசர்.

ஒரு முறை துரைசாமி வாத்தியார் கவியரசரைப்பற்றி

''சுப்புவால் முளைத்தகவி'' என்று ஈற்றடி அமையும்படி ஒரு வெண்பா எழுதியிருந்தார். 'சுப்புவால் முளைத்த கவி' எனவும், சுப்பு—வால்முளைத்த கவி' எனவும் இரு பொருள்படக் குறும்புத்தனமாகக் குறிப்பிட்டிருப்பதைக் கண்ட கவியரசர், அவர்க்குத் தக்கபடி கவிதையிலேயே 'தோண்டி துரைசாமி' என இருபொருள்படச் சாட்டையடி கொடுத்திருந்தார். துரைசாமி வாத்தியாரைத் 'தோண்டி துரைசாமி' என்றே கூறுவதும் எழுதுவதும் பின்னர் கவியரசரின் வழக்கமாகி விட்டது.

கவியரசர் பாரதிதாசனுக்கும் பண்டிதர் துரைசாமி முதலியாருக்கும் கருத்து வேற்றுமை பலப்பல உண்டு. அதன் காரணமாக இருவரிடமும் பகையுணர்ச்சி வளர்ந்திருந்தது. இப்பகையுணர்ச்சியின் அடிப்படையில் அக்காலத்திலேயே பண்டிதர் மாணவர் குழு ஒன்றும், பாவேந்தர் மாணவர் குழு ஒன்றும் புதுவையில் இருந்து வந்தன. பண்டிதரும் பாவேந்தரும் கொள்கையில் முரண்பட்டிருந்தாலும் தமிழை வளர்க்கும் நோக்கத்தில் ஒன்றுபட்டிருந்தனர்.

புதுவைப் பிரெஞ்சு அரசாங்கத்தாரால் நடத்தப்படும் தமிழ்த் தேர்வுகட்கு இவ்விருவருமே ஆய்வாளர்களாக —தலைமைத் தேர்வாளர்களாக—நியமிக்கப்படுவதுண்டு. இவ்வாறு நடந்த ஒரு தேர்வின்போது பாவேந்தரிடம் பயின்ற நான் துரைசாமிப் பண்டிதர் முன் தேர்வுக்காக நிறுத்தப்பட்டேன். பண்டிதர் என்னிடம் இலக்கண இலக்கியங்களிலிருந்து பலப்பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். நான் பாரதிதாசனிடம் தமிழ் பயின்று வந்திருந்ததை அறிந்திருந்தமையாலும், அவரிடம் கொண்டிருந்த பகைமை காரணமாகவும் என்னிடம் சிக்கலான கேள்விகளைக்கேட்டு விடையை எதிர்பார்த்திருந்தார். நான் தெளிவாகத் தெரிந்தவிடைகளைக் கூடத் தயங்கித் தயங்கிக் கூறிக்கொண்டிருந்தேன். அப்போது ''ஏய்! தைரியமாகப் பதில் சொல்!'' என்ற

உரத்த குரல் ஒன்று கேட்டது. ஒலிவந்த திசை நோக்கித் திரும்பிப் பார்த்தேன்; பாவேந்தரின் ஆணை என்பதை உணர்ந்தேன். அதன்படி முன்பைவிடத் தைரியமாகத் தங்கு தடையின்றி விடையிறுத்தேன். முடிவில், அத்தேர்வில் வெற்றிபெற்றேன். என்னோடு கவியரசரிடம் தமிழ்பயின்ற மற்ற மாணவர்களும் வெற்றிபெற்றனர். தம் மாணவர் அனைவரும் வெற்றி பெற்றதால் கவியரசருக்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது.

துரைசாமி வாத்தியார் நல்ல தமிழறிஞர் 'கண்ணப்பர் கலம்பகம்' போன்ற ஆத்திக நூல்களை எழுதியவர். அவர் மறைந்தபோது பகையென்றுபாராது ஓடோடி வந்து, என்றுமே கலங்காத கவியரசர் கண் கலங்கி நின்றார். "துரைசாமி மறைந்தான். ஆம்; அவன் எனக்குப் பகைவன்தான். அவன் தமிழறிவைப் பாராட்டுகிறேன். தமிழ் என் உயிர்! தமிழைப் பாராட்டப் போகிறேன்" என்று புதுவையில் ஒருதனிக் கூட்டம் ஏற்பாடு செய்து பகைவராகிய பண்டிதர் துரைசாமி முதலியாரை இரண்டு மணி நேரம் பொதுமக்கள் முன்னிலையில் வாயாரப் பாராட்டி அஞ்சலி செய்த பெருந்தன்மை பாரதிதாசனை விட வேறு எவருக்கும் இருந்திருக்கவில்லை; இனிஇருக்கவும் முடியாது!

துரைசாமி வாத்தியார் மாணவர்குழுவில் குறிப்பிடத்தக்கவர் இலக்கணச் செம்மல், வித்துவான் குமாரசாமி செட்டியார் ஆவார். இவர் நல்ல தமிழ் இலக்கண இலக்கிய அறிஞர். இவரும் கவியரசரைப் போலவே அரசாங்கப்பள்ளிகளில் தமிழாசிரியர் பணிபுரிந்து அண்மையில் ஓய்வு பெற்றவர்.† இவரிடம் பயின்ற மாணவர்கள், இவருக்குப் பொன்னுடை போர்த்த வேண்டும் என ஏற்பாடுசெய்து, கவியரசரிடம் கருத்தைத் தெரிவித்தனர். கவியரசர் மன முவந்து, தம் பகைவரின் மாணாக்கன் என்பதை உணர்ந்தும் முன்வந்து, சென்னை முத

†இக்கட்டுரை 1964 மேத்திங்களில் எழுதப்பட்டது.

லமைச்சராக இருந்த திரு. காமராசர் அவர்களைத் தாமே சென்று அழைத்துவந்து, தம் தலைமையிலேயே காமராசர் அவர்களால் இவருக்குப் புதுவை வேதபுரீசுவரர் கோயிலில் பொன்னுடை போர்த்தச் செய்து, தமிழுக்குத் தம் மாட்டுள்ள தனிப்பற்றையும், எவராக இருந்தாலும் தமிழைப் பயின்றவரைச் சிறப்பிக்கின்ற தம் தூய தமிழ் உள்ளத்தையும் விளக்கியுள்ளார்.

பாவேந்தர் மாணவர் குழுவில் குறிப்பிடத்தக்கவர்கள் நானும், புதுவைச் சிவம் எம். பி.யும், இன்னும் சிலரும் ஆவோம், கவியரசர் தமிழ்ப்பாடம் நடத்தும் முறையே ஒரு தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். மிகத் தெளிவாகவும், இனிமையாகவும் அவர் பாடம் நடத்துவார்.

புதுவையில் தன்மான இயக்கம் தளிர்விட்டுக் கொண்டிருந்தபோது கவியரசர் அவர்களின் கடும்உழைப்பால், பெருமுயற்சியால் புதுவையிலுள்ள ஒதியன் சாலையில் அமைந்த திரைப்படக்கொட்டகையில், பெரியார் ஈ.வே. இராமசாமி, அறிஞர் அண்ணாத்துரை ஆகியோரை அழைத்து மாநாடு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது பொதுவுடைமைக் கட்சி நல்ல நிலையில் வளர்ந்து ஓங்கியிருந்தது. பிரெஞ்சு அரசியலார் பொதுவுடைமைக் கட்சித் தலைவரும் இன்றைய அமைச்சருமாகிய திரு.வ.சுப்பையாவைச் சிறையிலடைத்து வைத்திருந்தனர். அக்கட்சியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்த அது போது பாரிசில் படித்துவிட்டுப் புதுவைக்குத் திரும்பிவந்திருந்த புதுவையைச் சேர்ந்த திரு:லாம்பேர் சாவன் என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். லாம்பேர் சாவனே தமிழ் அறியாதவர்; பிரெஞ்சும் ஆங்கிலமும் அறிந்தவர், அவர் தூண்டுதலின்பேரில், பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த சிலர் புதுவையில் நடைபெறும் தன்மான இயக்க மாநாட்டைக் கலைக்க முன்கூட்டியே சதித்திட்டம் தீட்டியிருந்தனர்.

அப்போது புதுவையில் அகில இந்தியக் காங்கிரசுக்

கட்சிவளர்ந்திருக்கவில்லை. விரல் விட்டு எண்ணக் கூடிய ஒருசிலர்மட்டுமே காங்கிரசின் கொள்கைகளை ஆதரித்து, அதில் சேர்ந்திருந்தனர் அவர்களில் முக்கியமான ஒருவர் அன்சாரி துரையாவார். இவர் மாநாடு நடைபெற இருந்த அன்று காலை சிறுவர்கள் சிலருக்குக் காசு கொடுத்து, ''பெரியாரே! திரும்பிப் போ?'' என்று கத்தும்படி செய்திருந்தார்.

தன்மான இயக்க மாநாடு புதுவை ஒதியன் சாலையில் காலை ஒன்பது மணிக்குத் தொடங்கிற்று. கூட்டம் மிகுதியாக இருந்தது. வெள்ளையன் ஒருவன் தலைமையிலிருந்த புதுவைக் காவல் படையினர் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர். மாநாட்டிற்குக் கவியரசர் தலைமை வகித்தார். அறிஞர் அண்ணாவும், புதுவை அவோக்கா பெருமாள், நோயேல் போன்றவர்களும் வந்திருந்தனர்.

பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த சிலர் தங்கள் கைவரிசையைக் காட்டத்தொடங்கினர். கொட்டகையில் ஒரே கூச்சல்; குழப்பம்! கற்கள் தகரக் கொட்டகை மீது வீசப்பட்டன! பாதுகாப்புக்காக வந்திருந்த காவல் படைத் தலைமை அதிகாரி, வெள்ளைத் தலைமை அதிகாரியிடம் 'இக்கூட்டம் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்காகக் கூட்டப்பட்ட கூட்டமாகும்' என்று நயவஞ்சகமாகக் கூறியிருந்தார். அதனால், காவல் படையினரின் காப்பு பயனளிக்கவில்லை! காலிகளின் கைகள் ஓங்கின! காங்கிரஸ், பொதுவுடைமைக் கட்சி போன்று. இம்மாநாடும் தங்களை எதிர்க்கும் கூட்டம் என்று எண்ணி வெள்ளை அதிகாரிகள் கண்காணிப்பை அசட்டை செய்து விட்டனர்.

மாநாடு காலையில் சிறப்புடன் நடைபெறுமல் தடைப்பட்டது. தலைவர்கள் கலைந்து பெருமாள் அவோக்கா வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார்கள். அதுபோது பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த சிலரும், அவர்

களின் கையாட்களிற் பலரும் கவிஞரை வாய்க்கு வந்த படி ஏதேதோ பேசினர்.

பாவேந்தரால் அதைச் சகித்துக் கொள்ளமுடியவில்லை. அக் கொடுங்காலிகளிடையே இருக்கிறோமே என்பதையும் கருதவில்லை, சினங்கொண்ட சிறுத்தையைப்போல் சீறியெழுந்தார்; அவர்களை முறைத்துப் பார்த்தார். அந்த அறிவிலிகளில் ஒருவன் கவிஞரின் கன்னத்தில் அறைந்து விட்டான். அவன் தனியிருந்து தாக்கியிருந்தால், கவிஞரின் ஒரே ஓர் அறையில் அவன் உயிர் போயிருக்கும். காலஞ்சென்ற நெல்லிக்கிருஷ்ணன் இடையே புகுந்து கவிஞரைப் பாதுகாப்போடு வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டுவந்தார். இதைக் கேட்டறிந்ததும் சிறையிலிருந்த பொதுவுடைமைக் கட்சித்தலைவர் திரு.வ. சுப்பையாவே மிகுந்த கவலைப்பட்டாராம். தலைவர் சுப்பையா சிறையில் இல்லாதிருந்தால் இந்த அசம்பாவிதம் நடந்தேறியிருக்காது.

அறிஞர் அண்ணு, பெரியார் இராமசாமியின் பேச்சைக் கூடக் கேட்காமல் கவியரசருக்குப் பொன்னுடை போர்த்த வேண்டும் என்று ஏற்பாடு செய்தார்கள். 28-7-1946 இல் நாவலர் ச. சோ. பாரதியார் தலைமை தாங்கினுர்; இசையரசு தண்டபாணி தேசிகர் இன்னிசை வழங்கினுர்; இரா.பி. சேதுப்பிள்ளை முதலிய மாற்றுக் கருத்துடைய பெரியார்கள் பலர் பாராட்டுரை வழங்கினர். ''பெரியார் இராமசாமி இவ்விழாவில் இல்லாத ஒரே குறைதான் என் மனக்குறை'' என்று இறுதியில் நன்றி கூறிய அறிஞர் அண்ணுவின் பேருரையோடு விழா சிறப்புடன் முடிவுற்றது. கவிஞர்க்குப் பொன்னுடை போர்த்தப்பட்டு 25,000ரூபா கொண்ட பொற்கிழி ஒன்று வழங்கப்பட்டது. இவ்விழாவிற்குத் துணை நின்ற பொதுமக்கள், செயல்புரிந்த அறிஞர் அண்ணு, பாரதிதாசன் நூல்களையெல்லாம் நல்ல முறையில் கவினேடு வெளிக்கொணர்ந்த முல்லை பழ. முத்தையா,

மறைந்த டி.என். இராமன், சலகண்டபுரம் ப.கண்ணன் முதலியவர்களின் ஒத்துழைப்பு, பெரிதும்பாராட்டத் தக்கது.

1950 ஆம் ஆண்டு கோவையில் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி முதலியவர்களின் முயற்சியால், 'கோவை முத்தமிழ் மாநாடு' ஒன்று நடந்தது. அதில் கவியரசர், நாவலர் ச.சோ.பாரதியார், கலைவாணர் என்.எஸ்.கே., கா.அப்பாதுரை, அறிஞர் அண்ணா. இரா. நெடுஞ்செழியன், மு.கருணாநிதி முதலியவர்கள் பங்கு கொண்டனர். மாநாடு சிறப்புடன் நடந்தேறியது.

அதில் கவிஞர் தலைமையில் சிறந்த கவியரங்கம் ஒன்றும் நடைபெற்றது. அப்போது நான் புதுவை கல்வே கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். கவிஞர் அவர்கள் அக்கவியரங்கில் என்னைக் கலந்து கொள்ளும்படி பணித்தார்கள். நான் சிறிது தயங்கினேன். அதற்குக் காரணம், நான் முன் குறிப்பிட்ட பேரறிஞர் பலர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியாயிற்றே; கவிதை எழுதும் துறையில் தொடக்கநிலையில் இருக்கின்றோமே என்ற தாழ்வு மனப்பான்மையால் ஏற்பட்ட அச்சங்களே ஆகும். என்றாலும், கவியரசர் சொல்லைத் தலைமேல்ஏற்றுத் துணிந்து அந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள உடன்பட்டேன். கவியரசரே என்னைத் தம்முடன் கோவைக்கு அழைத்துச் சென்றார். நான் கவியரங்கில் கலந்து கொண்டேன். அரங்கின் நடுவர்களாகக் கவியரசர், நெடுஞ்செழியன், அப்பாதுரை மூவரும் இருந்தனர். வெள்ளிக் கோப்பை ஒன்று பெற்று வந்தேன். கவிஞருடன் திரும்பிவரும் போது, கவிஞர் நடுவர்களாக இருந்தவர்கள் குறித்திருந்த மதிப்பெண் தாளை எடுத்துக் காட்டினார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! கவிஞரைத் தவிர மற்ற இருவரும் என் கவிதைக்கே அதிக மதிப்பெண் தந்திருந்தனர். கவியரசர் ஒருவர் மட்டுமே எனக்குச் சிறிது குறைவாக மதிப்பெண்

தந்திருந்தார். அதையே நான் திரும்பத்திரும்ப உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். என் எண்ணத்தைக் குறிப் பாலுணர்ந்த கவிஞர், ''நீதான் முதற்பரிசு பெறவேண் டியவன். நான் உன்னை அழைத்து வந்திருக்கிறேன். உனக்கு முதற்பரிசு கொடுத்தால், எனக்கு வேண்டிய வனுக்கு முதற்பரிசு கொடுத்து விட்டார்கள் என்ற பேச்சு எழக் கூடும். அதனால், நானேதான் மற்றொருவருக்கு முதற்பரிசு கொடுக்கச் செய்து, உனக்கு இரண்டாம் பரிசு கிடைக்கச் செய்தேன்'' என்று விளக்கமளித்தார். இவ்வாறு என்னை முதன்முதல் கவியரங்கில் பங்கு கொள்ளச் செய்து, எனக்கு வழிகாட்டியவர் கவியரசரே யாவார்.

கவியரசர் அவர்கள் திருக்குறளுக்குப் பதின்மர் முன் எழுதிய உரையுடன் ஒப்பிட்டு எதிர்க்கும் புதிய உரை யைப் பொதுமக்களிடம் பரவவிட்டார். அதன் பயனை மதுரையில் பொதுமக்களால் அழைக்கப்பட்டு மதுரை உடுப்பி உணவு விடுதியில் இருந்து கொண்டே திருக் குறளுக்குப் புத்துரை எழுதி வந்தார். கவியரசர் அவர் கள் திருக்குறளுக்குப் புத்துரை பெரும்பாலும் எழுதி முடித்து விட்டார். அதனை வெளிக்கொணர்வது அரசி யலாருடையவும், பொதுமக்களுடையவும் கடமையா கும்.

மதுரை அன்பர்கள் தனுஷ்கோடிராசு, பாரதி புத்தக நிலையம் சாமிநாதன், வை.சு. மஞ்சுளாபாய் அம்மை யார், கு.திரவியம், பொன்னம்பலனார் முதலியவர்கள் கவிஞரின் அறுபதாம் ஆண்டுவிழாவைச் சீரும் சிறப்பு மாக நடத்த வேண்டுமென எண்ணினர்; முயன்றனர். அதற்குப் பெரிதும் ஊக்கமூட்டியவர் தற்போது மேலூர் அரசினர் கலைக்கல்லூரி முதல்வராயுள்ள திரு.பண்டித. இராம. மீனாட்சி சுந்தரம் பிள்ளை எம்.ஏ.ஆவார்.

1951 ஆம் ஆண்டு இளைஞர்களால் தொடங்கப்பெற்ற இம் முயற்சி மதுரையில் ஈடேறாத நிலையில் இருந்த

போது, எதார்த்தம் பொன்னுசாமி, ஏ.கே. வேலன், மற்றும் திருச்சி நண்பர்கள் பலர் முயன்று, திருச்சி தேவர் மன்றத்தில் கவிஞரின் அறுபதாம் ஆண்டுவிழா வினைச் சீரும் சிறப்புமாக நடத்த முன்வந்தனர். அதுவும் பலகாரணங்களால் தடைப்பட்டுவிட்டது.

மீண்டும் அதைத் திருவானைக்காவலில் உள்ள சத்திரம் ஒன்றில் நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது. காதல் ஆசிரியர் அரு.ராமநாதன், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் தலையிட்டு, அவ்விழாவை அங்குச் சிறப்புடன் நடத்திமுடித்தனர்.

திருவானைக்காவலில் பொன்னி இதழின் உரிமையாளர் அரு. பெரியண்ணனும், இந்நாள் புதுவைச் சட்டமன்ற உறுப்பினர் முத்தியாலுப் பேட்டை முருகையனும், நானும் கவியரசர் குடும்பத்துடன் இருந்து வந்தோம். கவியரசரோடு கருத்து வேறுபட்டுப் பகைத்திருந்த காலஞ்சென்ற துரைசாமிப் பண்டிதரின் இல்வாழ்க்கைத் துணைவியாரும் அப்போது எங்களுடன் இருந்து வந்தார்கள். அங்கேதான் கவியரசர் ஒரு வழிகாட்டியாவார் என்பதை நான் கண்ணாரக்கண்டு மகிழ்ந்தேன். பகைவர் மனைவி என்று சிறிதும் எண்ணாமல், பண்போடும் பாசத்தோடும் கவியரசர் குடும்பமே அந்த அம்மையாரை ஏற்று உபசரித்து வந்தது.

அப்போது புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த 'பொன்னி' இதழ் கவியரசரின் அறுபதாம் ஆண்டுவிழா மலர் ஒன்றை வெளியிட்டது. கவிபாரதியாரோ தம்பரம்பரை என்று பாரதிதாசன் ஒருவரையே உருவாக்கினார். பாவேந்தர் பாரதிதாசரோ 'பாரதிதாசன் பரம்பரை' என ஒருபெரும் கூட்டத்தையே உருவாக்கிக்காட்டினார். அப்பரம்பரையைப் புகைப்படத்தோடு வெளியிட்டு அறிமுகப்படுத்திய சிறப்பு அந்தப் 'பொன்னி' இதழையே சாரும்.

கவியரசர் தம் மாணவர்கட்கும் பரம்பரைக்கும் மட்டும் வழிகாட்டி அல்லர்; மனித இனத்திற்கே வழிகாட்டி ஆவார்.

கவியரசர் சீர்திருத்தத் திருமணங்கட்கெல்லாம் செல்வார். அப்போதெல்லாம் அவருடன் நானும் செல்வேன். திருமணத் தலைமை நிகழ்ச்சிக்குப் பின் பல கருத்துக்களை விளக்கி, மணமக்களைப் பலர் பாராட்டி வாழ்த்துவார்கள். என்னையும் பாராட்டுவோர்களுடன் ஒருவனுக்கி மணமக்களைப் பாராட்டச் செய்வார். இவ்வாறு பல திருமணங்களில் அவருடன் சென்று வாழ்த்தும் பேறு பெற்றுள்ளேன்.

பாவேந்தர் பாரதிதாசன் கவிசுப்பிரமணிய பாரதியின் ஏகவாரிசு; இருபதாம் நூற்றூண்டில் ஈடு இணையில்லாப் பாவேந்தர்; தமக்கென்று ஒரு தனிப் பரம்பரையை ஏற்படுத்தித் தந்தவர். இவர் தமிழுக்குச் செய்த தொண்டு எண்ணிலடங்காது. தமிழ் இலக்கிய இலக்கண மரபையொட்டித் தமிழைத் தம்வயப்படுத்திப் புதிய நோக்கோடு புதுப்புது உவமை, புதுப்புதுப்பாடல்களால் புதுப் புதுச் சுவைகூட்டி எழுதி எழுதிக் குவித்துத் தமிழ்த் தாயின் மணிமுடியை அழகு செய்த பெருமை பாவேந்தர் பாரதிதாசனையே சாரும். தமிழர்கள் ஏறுநடை போட—தனித்தமிழ்ச் சொற்கள் வழக்கில் தனிநடம் புரியச் செய்த பெருமையும் இவரையே சாரும். இவர் எழுதிய ஒவ்வொரு நூலும் ஒரு பொற்கிழி எனலாம்.

இவருக்கு மன்னர்மன்னன் (கோபதி) என்னும் ஒரே மகனும், மூன்று (சரசுவதி, வசந்தா, ரமணி†) மகளும் உள்ளனர். நால்வரும் திருமணமானவர்கள். கவியரசருக்குப் பெயரர்கள் பேர்த்திகள் நிரம்பஉள்ளனர். பெயரர்கள் பேர்த்திகள் என்றாலே கவியரசருக்குப் பேரின்பம்.

---

†ரமணி, பாவேந்தரின் கடைசிமகள். இவர் 1966-இல் இயற்கையெய்திஞர்.

இவர் மறைவு தமிழ் கூறும் நல்லுலகிற்கு—ஏன்—கடல் சூழ்ந்த உலகிற்கே பேரிழப்பு என்பது மிகையாகாது! இவர் தமிழ்நாட்டில் அல்லாமல் வேறு நாட்டில் பிறந்திருந்தால் 'நோபெல்பரிசு' இவருடையதே!



கவிஞர்
ச. சிவப்பிரகாசம்

# முழுமதியனையார்

○

புதுவை முத்தியால் பேட்டையில் பிறந்து, பாவேந்தரிடம் தமிழ் பயின்று, ஆசிரியர் பணி புரிந்தவர் புதுவைச் சிவம். எழுத்துப்புயல் பாவேந்தரோடும், கொள்கை மறவர் ம.நோயேலோடும் தோள் கொடுத்துப் புதுவையில் சுயமரியாதை இயக்கத்தை வளர்த்தவர். 'புதுவை முரசின்' பொறுப்பாசிரியராக இருந்து பாதிரிமாரின் சட்டத் தாக்குதலுக்கு ஆளானவர்.

புதுவை நகர்மன்ற உறுப்பினராகவும், துணைமேயராகவும், பாராளுமன்ற மேலவை உறுப்பினராகவும் பணி புரிந்தவர்.

சங்கப் புலவர் கொல்லன் எழிசியைப் போல இவர் பட்டறை (Janatha Steel Industries) நடத்துகிறார். ஓய்வு நேரத்தில் கவிதையும் எழுதுகிறார்.

1930 முதல் 1946 வரை பாவேந்தரோடு நெருங்கிப் பழகிய இவர், தம் நினைவுகளை இக்கட்டுரையில் நிழற்படமாக்கியிருக்கிறார்.

○



1928 ஆம் ஆண்டில் நான் இருபது வயது கட்டிளங் காளை. பகுத்தறிவுத் தந்தைப் பெரியார் அவர்களால் நடத்தப் பெற்ற 'குடியரசு' இதழை என் நண்பர் ஒரு வர் வாராவாரம் கொண்டுவந்து கொடுப்பார். அதைப் படித்து நானும் நண்பர்கள் சிலரும் அக்கொள்கையில் ஆர்வமுடையவரானோம். பின்னர் 1929 இல் புதுவை முத்தியால் பேட்டையில் புதுமனை புகுவிழாவுக்குப் பெரி யார் அழைக்கப்பட்டிருந்தார். அன்று அவரது சொற் பொழிவைக் கேட்டுச் சுயமரியாதை இயக்கக் கொள்கை யில் தீவிரமாக ஈடுபடலானேன். இதே ஆண்டில் பெரி யார் கொள்கைக்கு எதிர்ப்பாக வைதீக மாநாடு ஒன்றும் இங்கு நடத்தப்பட்டது. அந்த மாநாட்டின்போது, கனக சுப்புரத்தின வாத்தியார் (பாவேந்தர்) சுயமரியாதைக் கொள்கைக்கு ஆதரவாக இருப்பதறிந்து, அன்று முதல் அவரிடம் தொடர்புகொண்டு பழகி வந்தேன். எங்கள் தொடர்பு 1946 வரை மிக நெருக்கமாக இருந்து வந் தது. இவ்வளவு காலம் யாரும் அவரிடம் நீடித்துப் பழகியதில்லை.

பாவேந்தரிடம் இலக்கணம் பயின்று கவிதை எழுத வேண்டுமென்ற ஆர்வத்தால், நான் அவரை அடிக்கடி தொந்தரித்து வந்தேன். போதிய நேரம் இல்லாத கார ணத்தால், என்னுடைய ஆவலை அவரால் நிறைவேற்றி வைக்க முடியவில்லை.

1930இல் தோழர் ம. நோயேல் அவர்களைப் பொறுப்

பாசிரியராகக்கொண்டு 'புதுவை முரசு' என்னும் வார இதழ் தொடங்கப்பட்டது. அவ்விதழின் நிர்வாகத்தை நான் கவனித்து வந்தேன். 1931 இல் புதுவைப் பாதிரி மார்கள் 18 பேர் சேர்ந்து தோழர் ம.நோயேல் அவர்கள் மீது வழக்குத் தொடுத்தார்கள். அதனுல் அவ்விதழின் பொறுப்பாசிரியர் பணியை நான் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. 1932இல் என்மீதும் மூன்று பாதிரி கள் வழக்குத் தொடுத்தார்கள். பொருளாதாரச் சங்கடம் புதுவை முரசிற்கு ஏற்பட்டதால், தொடர்ந்து அதை நடத்த முடியாமல் நிறுத்த வேண்டியதாயிற்று.

பாவேந்தரின் எழுத்தாற்றலுக்குச் சாணைக் கல்லாக விளங்கியது புதுவை முரசு இதழ்தான். இதில் அவர் அளவற்ற கவிதைகள், கட்டுரைகள், குட்டிக் கதைகள், நாடகங்கள், கனல் தெறிக்கும் தலையங்கங்கள் எழுதினுர்.

1932இல், புதுவை அரசாங்கம் நடத்திவந்த தமிழாசிரி யர் தேர்வுக்குத் தனிப்பட்ட முறையில் வகுப்பு நடத்தப் பாவேந்தர் முயன்ருர். அதில் பலர் சேர்ந்து பயின்றனர். நானும் அதில் பயின்று 1934இல் தமிழாசிரியர் தேர்வில் வெற்றிபெற்றேன். இத்தேர்வின் பெயர் 'பிரவே தெ லாங்க் ஏந்திழேன்'† என்பது. இதற்கிடையே தனிப் பட்ட முறையில் பாவேந்தரிடம் இலக்கணம்—யாப்புப் பயின்று கவிதை எழுதத் தொடங்கினேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, இவ்விருபதாம் நூற் ருண்டுக் கவிஞர்களுள் திரு.பாரதிதாசன் அவர்கள், ஒரு தலைசிறந்த கவிஞராவார்! ஒப்பற்ற கவிஞர் எனினும் பொருந்தும்.

---

†இத்தேர்வு பிரெஞ்சு மொழியில் *Brevet De Langue Indigene* என்று அழைக்கப்படும். பாவேந்தர் கல்வே கல்லூரியில் பயின்று பெற்ற பட்டம் இது தான் இது எஸ். எஸ். எல்.சிக்கும் பி.யூ.சிக் கும் இடைப்பட்ட பாடத்திட்டம் கொண்டது. இதைப் பயின்றவர் தமிழாசிரியராகப் பணிசெய்யப் புதுவைப் பிரெஞ்சு அரசால் அனுமதிக்கப்பட்டனர்.

அவருக்குள்ள புனைபெயராகிய 'பாரதிதாசன்' என்பதைக் கொண்டு, அவர் தேசியகவி பாரதியாரிடம் தமிழ் பயின்றவர் என்றும், கவிதை எழுதக் கற்றுக்கொண்டவர் என்றும், பாரதியாரின் மாணவர்என்றும் சிலர் கூறி வருவதாகக் கேள்விப்பட்டுள்ளேன். இது முற்றிலும் தவறு.

திரு. பாரதிதாசனவர்கள் தேசியகவி பாரதியாரோடு தொடர்புகொள்வதற்கு முன்பே, இலக்கிய இலக்கணங்களில் புலமை எய்தியிருந்ததோடு பாட்டு எழுதும் ஆற்றலும் பெற்றிருந்தவராவார். அவர் தமிழ் கற்றது, சாரம் மகாவித்துவான் திரு.பு.ஆ.பெரியசாமிப்பிள்ளையவர்களிடமும், கல்வே காலேஜ் தமிழ்ப்பண்டிதர் திரு. பங்காருப் பத்தர் அவர்களிடமுமேயாகும்.

அப்பொழுதெல்லாம் திரு. பாரதிதாசன் அவர்களுடைய பாடல், எளிய நடையில் இராது. 'கடுநடை' என்பார்களே, அந்த வகையைச் சேர்ந்ததாக இருக்கும். 'சுப்புரத்தின வாத்தியார் பாட்டா? அது கடுந்தமிழிலல்லவா இருக்கும்!' என்று பலர்கூற, நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

பிரிட்டிஷ் ஆட்சியினரின் கெடுபிடிக்காளாகிப் புதுவையில் தஞ்சமடைந்த அரவிந்தர், வ.வே.சு. அய்யர், சுப்பிரமணியபாரதியார் போன்றவர்கட்கும், புதுவையிலுள்ள தேசிய உணர்வுகொண்ட பலர் ஆதரவாக இருந்து வந்தனர். அவர்களுள் ஒருவர்தாம் திரு. பாரதிதாசன் அவர்களும்.

இனம் இனத்தோடு சேரும் என்பதுபோல், நாளடைவில் திரு. பாரதிதாசனவர்கள் தேசியகவிபாரதியாரோடேயே நெருங்கிப் பழகலானார். ஏனெனில், இவரும் கவிஞர்; அவரும் கவிஞர். இதுமட்டுமல்ல அவர்கள் நெருங்கிப் பழகியதற்கு காரணம், மற்றவர்களைக் காட்டிலும், சமத்

துவ நோக்கமும் சீர்திருத்த உள்ளமும் பெற்றிருந்ததே ஆகும்.

அப்பொழுது திரு. பாரதியாரவர்கள், எளிய நடையி லேயே தம்பாடலைஎழுதி வந்தார். இது புலவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால், பாரதியார் பாடலைக் குறை கூறத் தொடங்கினர். ஏனெனில் பாட்டு என்பது, கற்ற வர்களால் அரிதாகப் பொருளுணரக்கூடிய திரிசொற் களைக் கொண்டுதான் எழுதவேண்டும் என்பது விதியாக இருந்தது. காலம், அந்த விதியை மாற்றிவிட்டதால், அந்த மாறுதலைப் பின்பற்றி எழுதலானார் பாரதியார். அதற்குமுன் நாட்டைப்பற்றிய கவலையில்லாமல், மக்கள் நலனைப்பற்றிய கவலையில்லாமல் வாழ்ந்து வந்தனர் புலவர்கள். அவர்கள் கவலையெல்லாம் பொழுது விடிந் தால் பொழுது போனால், ஆண்டவனைப் பற்றியும், அவ னருள் பெறுவது பற்றியுமே இருந்து வந்தது. அதற் காக அவர்கள் தமது புலமையை ஆண்டவனைப் பாடுவ திலும், தலபுராணம், அந்தாதி, கோவை போன்ற நூல் கள் எழுதுவதிலுமே செலவிட்டு வந்தார்கள். ஆனால் தேசிய இயக்கம் ஏற்பட்ட பிறகு, தலைவர்களாயுள்ளவர் கள், தங்கள் கருத்தை மக்களிடம் பரப்பவேண்டிய அவ சியத்துக்கு ஆளானார்கள். அதனால் பாரதியாரும் தாம் எழுதுகிற பாட்டின் பொருளைப் பிறர் உதவியின்றிச் சாதாரண மக்களும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கோடு, எளிய நடையில் எழுதலானார். இதற் காகத்தான் எதிர்ப்புக் கிளம்பியது. இதில், பாரதி யாருக்கு ஆதரவாக இருந்தார் திரு. பாரதிதாசனவர் கள்.

ஒருசமயம் திரு.பாரதியாரவர்கள் தம்மைச் சூழ்ந்திருந் தவர்களிடம், ‘சுப்புரத்தினமும் பாட்டு எழுதுவான்’ என்று சொல்லி, ‘எழுது’ என்று கட்டளையிட்டவுடன், ‘எங்கெங்குக் காணினும் சக்தியடா’ என்ற பாடலைப் பாரதிதாசன் எழுதியதாகச் சொல்வர். இதுதான்,

அவர் எழுதிய முதற்பாட்டு என்று கூறுவோரும்உண்டு. அவர், இதற்குமுன் பல பக்திப்பாடல்கள் இயற்றியிருக் கிறார். வேண்டுமானால், திரு பாரதியாரவர்களைப் பின் பற்றி எளிய நடையில் எழுதிய பாடல்களுள், இதுதான் முதற்பாட்டு என்று சொன்னால், பொருத்தமாக இருக் கும்.

திரு. பாரதிதாசனவர்கள் பாட்டு எழுதத் தொடங்கினால் பக்கத்தில் அகராதி இருக்காது; யோசித்து யோசித்து, அடித்தல் திருத்தலுடன் எழுத மாட்டார். தரையில் ஒரு பாயை விரித்துக் கவிழ்ந்து படுத்தவண்ணம் எழுதத் தொடங்குவார் சிலசமயம் சாய்வு நாற்காலியிலமர்ந்து, அதன் நீண்ட கைப்பிடியின் குறுக்காக ஒரு மனையைப் பொருத்தி எழுதுவார். பாடல் எழுதி முடியும் வரை, 'சிகரெட் தொடர்ந்து புகைந்தபடியே இருக்கும்.' எழுத் தோட்டமும் விரைந்து சென்று கொண்டேயிருக்கும்.

'புலவருக்கு வெண்பா புலி' என்பார்கள். அத்தகைய வெண்பாவினும் கடுமையானது, வண்ணப்பாடல். திருப் புக்ழ்ச்சந்தம் போன்ற வண்ணப்பாடல்களையும் மிக எளி தாக விரைந்து எழுதும் ஆற்றல், திரு. பாரதிதாசனவர் களிடம் அமைந்திருந்தது. உள்ளத்தைக் கவரும் வார்த்தைகளும், அவர் பாடலில் முந்திக்கொண்டு வரும். இப்படிப்பட்ட ஒருசில கவிஞர்களைப் பார்த்துத் தான் 'ஒரு சிறந்த கவிஞன் பிறவியிலேயே கவிஞனாகப் பிறக்கிறான்' என்று கூறுகிறார்கள் போலும்.

திரு. பாரதிதாசனவர்களிடம் குறும்புத் தனமும் நகைச் சுவைப் பேச்சும் இயல்பாகவே அமைந்திருந்தன. அத னால் அவருடைய பாட்டுக்கள் பலவற்றுள்ளும், அத் தன்மை அமைந்திருக்கக் காணலாம். அப்பாடல்களைப் படிப்போர், தம்மையும் மீறி வாய்விட்டுச் சிரிப்பர்; மகிழ்ச்சிக் கடலிலாழ்வார்.

இந்த இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களை நட்சத்திரங் களுக்கு ஒப்பிட்டுக் கூறுவோமானால், திரு. பாரதிதாச னவர்கள் முழுநிலவாக விளங்கியவர் என்பதை யாரா லும் மறுத்துவிட முடியாது! வாழ்க அவர்புகழ்!



கவிஞர் பொன்னடியான்

உள்ளத்தில்
மணக்கும்
முல்லைச்சரம்

○

திருச்சி மாவட்டச் செந்துறையில் பிறந்து, தமிழ் மறவர் பொன்னம்பலனாரால் உருவாக்கப்பட்டு, பாவேந்தர் கையில் பட்டை தீட்டப்பட்டவர் இந்தப் பொன்னடிக் கவிஞர். பள்ளிப்பருவத்திலேயே இனப் போராட்ட வீரராகத் திகழ்ந்தவர்.

பாவேந்தரின் இறுதி நாட்களில் அவர் மாணவராக வும், செயலாளராகவும, அணுக்கத் தொண்டராகவும் பணிபுரிந்தவர். உருவத்தில ஊசிமிளகாய் போல ஒல்லியானவர்; காரமானவர். தமிழைத் தாய்மை யோடும், உருசியத்தைக் காதலோடும் பார்த்துப் பழக்கப்பட்டவர்.

அமுதும் தேனும்போல ஓராணும் பெண்ணும் பெற்று வளர்ப்பவர். பதின்மூன்று ஆண்டுகள் பிடிவாதமாகப் பாட்டிதழ் நடத்திக்கொண்டிருப்பவர்.

பாவேந்தர் விட்டுச் சென்ற கடைசிக்குழந்தையான 'தமிழ்க் கவிஞர் மன்ற'த்துக்குப் பாலூட்டிக் கொண டிருக்கும் செவிலித்தாய் இவர். பாவேந்தரின் இலக் கியப்பூங்காவில் துடிக்கும் தும்பியாகப் பறந்து கொண்டிருந்த நாட்களில், அப்பாட்டு முல்லை தமது உள்ளத்தில் பரப்பிய மணத்தை இக்கட்டுரையில் அள்ளித் தெளித்திருக்கிறார்.

○



*தமக்குத் தெரிந்ததை யெல்லாம்...!*

தமக்குத் தெரிந்ததையெல்லாம் தம் மாணவர்கட்கும் தெரிவித்துவிட வேண்டும்; தாம் கற்றதையெல்லாம் தம்முடைய மாணவர்கட்கும் கற்பித்துவிட வேண்டும் என்பதில் தணியாத ஆர்வம் உடையவர் கவிஞர்.

நான் அவரிடம் சேர்ந்த புதிதில் கவிதைத் துறையைப் பற்றி எனக்கு விளங்காத ஐயங்களைக் கவியரசரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற பேராசை இருந்தும், அச்சத்தின் காரணமாக ஒதுங்கியே இருந்து வந்தேன். போகப்போகத்தான் எனக்கு ஒரு பேருண்மை விளங்கியது. தம் மாணவர்களே கேட்கா விட்டாலும், தாமாகவே அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்ற பெரியமனம் படைத்தவர் பாவேந்தர் என்பதே அவ்வுண்மை.

பாவேந்தர் கவிதைகளை எழுதி முடித்துவிட்டு அவற்றைப் படியெடுக்க என்னை அழைப்பார். அருகில் சென்றவுடன் தாம் எழுதிய கவிதையை நயம்பட நடிப்புப் பாவனையோடு எனக்குப் படித்துக் காண்பிப்பார். பிறகு இந்த இடத்தில் இப்படி ஏன் வந்தது தெரியுமா? இது என்ன இலக்கணம்? இப்படித்தான் பாடல்களில் நம் எண்ணங்களை—கொள்கைகளை—நுழைக்க வேண்டும் இப்படிச் செய்ய வேண்டியதைப் புதிய அமைப்பில் நான் இப்படிச் செய்திருக்கிறேன்''—என்று கிளிப்பிள்ளைக்குச் சொல்

வதைப் போல மீண்டும் மீண்டும் விளக்கி, சொல்ல நினைத்ததை என் உள்ளத்தில் பதியுமாறு தெளிவாகப் புரிய வைத்து விடுவார். எத்தனைமுறை, எத்தனை வகை யான கேள்விகளைத் திருப்பித் திருப்பிக் கேட்டாலும் சிறிதும் சலிப்படையாமல், முகங்கோணமல் புரியும்படி சொல்லிக்கொடுப்பார். நியாயமான கேள்விகளுக்கு அடிமுதல் நுனிவரை விளக்கிக் கூடுமானவரை ஆத்தி ரம் அடையாமல் சொல்லிக் கொடுப்பது அவரது தலை யாய பண்புகளில் ஒன்று. ஆனால் எல்லாம் தெரிந்தது போல் தலையாட்ட ஆரம்பித்தாலோ அது அவரைக் கோபப்பட வைத்துவிடும் என்பது அவரை அறிந்தார் அறிந்த ஒன்று.

சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி யில் அப்போது பயின்று வந்தவரும், என் நெருங்கிய நண்பருமான கவிஞர் முருகுசுந்தரம் அடிக்கடி கவிஞ ரைப் பார்க்கவருவார். புரட்சிக்கவிஞரின் மேல் அவ ருக்குத் தணியாத ஆசை. அவர் வரும்போதெல்லாம் கவிஞரிடம் ஓயாது எதையாவது கேட்டுக்கொண்டே இருப்பார். கவியரசரின் எழுபதாண்டு அனுபவத்தை நண்பர் முருகு தமது ஆறுமாதப் பயிற்சிக் காலத்திற்குள் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற துடிப்புடையவர். ஒருநாள் மாலை ஐந்து மணி இருக்கும். அன்று வந்தி ருந்த திரு. முருகுசுந்தரம் கவிஞரிடம் பேசிக்கொண் டிருந்தார். நான் கூடத்தில் 'குயில்' ஏட்டின் வேலையில் மூழ்கியிருந்தேன். முருகு வழக்கம் போல் தமக்கு ஏற் பட்ட ஐயத்தைக் கேட்டிருப்பார் போல் தெரிகிறது. கவி ஞர் உடனே உரத்த குரல் கொடுத்துப், 'பொன்னடி' என்று என்னை அழைத்தார். நான் சென்றதும், 'இப்படி உட்கார்' என்று திரு. முருகு சுந்தரம் பக்கத்தில் என்னை அமரச் செய்து, அவர் கேட்ட கேள்வியை எனக்குத் தெரிவித்து, அதற்குரிய விளக்கத்தையும் சொன்னர். பிறகு, 'சரி! நீ போய் உன் வேலையைக் கவனி' என்று என்னை அனுப்பினர். அன்று கவிஞர் எங்களுக்குக்

கூறிய விளக்கம், 'கவிதையில் குற்றியலுகரப் பிழை ஏற்படாமல் எப்படி எழுதுவது? என்பது பற்றியாகும். தாம் ஒருவருக்குச் சொல்லும் விளக்கத்தை—கவிதைக் கலை நுணுக்கத்தை—அத்துறையில் வளரத்துடிக்கும் மற்றொருவரும் தெரிந்து கொள்ளட்டுமே என்ற கவிஞரின் பரந்த எண்ணத்தை இன்றைக்கு நினைத்தாலும் இதயம் சிலிர்க்கிறது.

தமக்குத் தெரிந்த தொழில் நுணுக்கத்தை இன்னொருவன் தெரிந்து கொள்ளக்கூடாது என்று திரைபோட்டு, உலகின் பொது நலத்திற்குக் கேடு செய்யத் துடிக்கும் கூட்டத்தினரின் நடுவில், கடற்கரையில் அண்ணுந்து நிற்கும் கலங்கரைவிளக்கமாகப் பாவேந்தர் காட்சியளிக்கிருர்.

*சீனப்போரும்*
*சைவ உணவும்*

சீனப்போரில் இந்தியா தோல்விகளைத் தழுவிக்கொண்டிருந்த நேரம். இந்திய வீரர்கட்கு உணர்ச்சியூட்டும் கவிதைகளை ஏராளமாகக் கவிஞர் படைத்துக் கொண்டிருந்த வேளை. வெளியூரிலிருந்து வந்திருந்த சில இளங் கவிஞர்களும், சுவைஞர்களும் புரட்சிக் கவிஞருடன் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தனர். நண்பகல் சாப்பாட்டுவேளை நெருங்கவே கவிஞர் தமது வழக்கப்படி (அதாவது வீட்டில் எத்தனை பேருக்கு உணவு தயாரிக்கப் பட்டுள்ளது என்பதையும் கேட்டறியாமல் வந்திருக்கும் விருந்தினருக்கெல்லாம் இலைவிரிக்கச் சொல்லிவிடுவார்) ''நீங்கள் எல்லாரும் இன்று மதியம் இங்கேதான் சாப்பிட வேண்டும். நல்ல வஞ்சிர மீன் வருவல், இருல்பிட்டு மணமாகத்தயார் செய்யப்பட்டுள்ளன'' என்று கூறிஞர். அவ்வாறு கூறிக்கொண்டிருந்தவர், எதிரில் முகத்தைச் சுளித்து ஒருமாதிரியாக உட்கார்ந்திருந்த இருபது வயது மதிக்கத்தக்க ஒல்லியுடம்பு இளைஞரைப் பார்த்து 'ஏம்ப்பா... இதெல்லாம் நீ சாப்பிடுவேல்ல? என்று அன்போடு கேட்டார்.

அந்த நோஞ்சான் உடம்புக்கார இளைஞர், "இதெல்லாம் எனக்குப் பிடிக்காதுங்க, நான் சைவ உணவுக்காரன்'' என்று கொஞ்சம் பெருமிதத்துடன் கூறினர்.

வந்தது கோபம் கவிஞருக்கு!

''ஓஹோ... அப்படியா! அதனால்தான் நீ இப்படிக் கொத்தவரை வற்றல் போல் இருக்கிறாய்! சைவ சாப்பாட்டுக்காரர்களுக்கு நாம் எதிர்பார்க்கும் அளவு உடலில் வலுவும், உள்ள உறுதியும் இருக்காது. இப்போ... இந்தியாவுக்கு வினை வந்ததே உன்னைப் போன்ற சைவ சாப்பாட்டுக்காரர்களால் தான்" என்று ஒரு போடு போட்டார் கவிஞர். அங்கிருந்த அனைவருக்கும் ஒரே திகைப்பாகிப் போய் விட்டது. எனக்குந்தான்! ஏனென்றால் நானும் ஒரு நோஞ்சான். கொத்தவரங்காய் உடம்புக்காரரோ இக்கட்டான இரண்டுங் கெட்டான் நிலையில் 'ஹி...ஹி...' என்று சிரிப்பதுபோல் காட்டிக் கொண்டார். அவர் முகத்தில் அசடே வழிந்தது.

கவிஞர் தொடர்ந்தார்:

"நம்மை உதைக்கிறேன் பார் என்று சொல்லிப் படையெடுக்குந் துணிவு சீனக்காரனுக்கு எப்படி வந்தது தெரியுமா? இந்தியாவில் பாதிப்பேருக்குமேல் சைவ சாப்பாட்டுக்காரர்கள். அவர்களிடம் வீரமே இருக்காது என்று நினைத்துத்தான் சீனக்காரன் துணிந்து நம் எல்லைக்குள் கால் வைத்தான். வந்த வேகத்தில் இரண்டு மூன்று இடங்களையும் பிடித்துக்கொண்டான். நம்படை சிறிது பின்வாங்கியது கூட உன்னைப் போன்ற பருப்புச் சாம்பார்க்காரர் பலர் பட்டாளத்தில் இருப்பதனால்தான். சாம்பார்க் கூட்டத்தின் தொகை பெருகினால் சீனக்காரன் கன்னியாகுமரி வரை வந்தாலும் வியப்படைவதற்கில்லை'"

உணர்ச்சி வசப்பட்டுக் கவிஞர் பேசிக்கொண்டிருந்தார். ஸ்பென்சர் தயாரிப்பான, விரல்களுக்கு அடங்காத சர்ச்

சில் சுருட்டு அவர் வாயில் புகைந்து கொண்டிருந்தது. மேலும் தொடர்ந்தார்:

“நம் பரம்பரை வீரம் இந்தக் காலத்து இளைஞரிடம் இல்லை; வரவரக் குறைந்து கொண்டே வருகிறது. எல்லைப்போர் எக்காலத்தும் வரும், அதற்காக உயிர் கொடுத்துப் போரிட வீரர் நாட்டிற்கு என்றும் தேவை. எனவே, உயிரினங்கள் உயிரோடு அறுக்கப்பட்டு, வெட்டப்பட்டு, அவை இரத்தம் சொட்டச் சொட்டத்துடிக்கும் காட்சியைச் சிறுவயதிலிருந்தே நம் குழந்தைகளுக்குக் காட்டிப் பழக்கவேண்டும். இந்தக் காலத்து இளைஞர் சிரங்கிலிருந்து சீழ்வடிந்தால் கூட ஓவென்று நடுங்கி மயக்கம் போட்டு விழுந்து விடுகின்றனர்.”

நிறுத்துகிறார் கவிஞர்.

இதற்குள் சைவ உணவுத்தோழர் முக்கால் பங்கு கவிஞர் வழிக்கு வந்து விட்டவராகத் தன்னைக் காட்டிக் கொள்ள முயற்சித்து, வேகவேகமாகத் தலையை ஆட்டுகின்றார்; ஆமாம் போடுகின்றார்.

மீண்டும் கவிஞர் தொடர்கிறார்:

“கத்தரிக்காய் வெண்டைக்காயில் என்ன சத்து இருக்கிறது என்றால் வைட்டமின் ‘ஏ..பி..சி’ என்று அடுக்க ஆரம்பித்துவிடுகின்றனர். ஒரு ‘வெண்டைக்காய்ச் சத்தும் அவற்றில் இல்லை. இவைகளை நம்பி நீ இருப்பதால் தான் இப்படி நோஞ்சானாக இருக்கிறாய்! என்னைப் பார்! என் உடம்பைப் பார்! நான் புலிக்கறியே சாப்பிடுகிறேன் தெரியுமா?”

அங்கிருந்தவர் அத்தனை பேரும் ஆவென்று வாயைப் பிளக்கின்றனர். ‘‘பொன்னடி! அந்த டப்பாவில் இருக்கும் புலிக்கறி வற்றலை இவர்களுக்கு எடுத்துக் கொண்டு வந்து காட்டு!” என்று ஆணையிடுகிறார். (அப்போது ஒரு புகழ்பெற்ற நடிகர் கவிஞருக்குப் புலிக்கறி வற்றல் கொடுத்துவிட்டுச் சென்றிருந்தார்).

அந்தநண்பர்கள் நான் புலியையே கொண்டுவந்துவிடப் போகிறேன் என்று பயந்தோ என்னவோ, ''ஊஹூம். அதெல்லாம் வேண்டாங்கையா! நீங்க சொன்னப் போதாதா?" என்று கையைப் பிசைந்து கொண்டு கவி ஞரைப் பார்த்து ஒரே ஒற்றுமையாகக் குழைந்தனர்.

அந்த ஒல்லியுடம்புச் சைவ நண்பரும் ஏனையோரும், "ஐயா! உங்கள் வீட்டுச் சுவையான சாப்பாட்டைச் சாப் பிட எங்களுக்கு விருப்பந்தான்; ஆனல் வண்டிக்கு நேர மாகி விட்டது!'' என்று சாக்குப்போக்குக்கூறித் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று புறப்பட்டு விட்ட னர்.

*பாவேந்தர்*
*படமெடுக்க வந்ததேன்?*

ஒருநாள் நள்ளிரவு 1½ மணி. தியாகராய நகர் இராமன் தெருவிலுள்ள பாரதிதாசன் படநிறுவனத்தின் மூலை அறையொன்றில் 100 வாட்ஸ் மின்விளக்கு ஒன்று ஒளிக் குழம்பை உமிழ்ந்து கொண்டிருந்தது. அது பாவேந்த ரின் தனியறை. கட்டிலின் மேல் கால்களை மடித்து வைத் துத் தமது படர்ந்த மார்பை இடதுகையால் தடவிக் கொடுத்தபடி புத்தரைப்போல் நிமிர்ந்து உட்கார்ந்திருக் கிருர் கவிஞர். மேலாடை இல்லாத அவர் மாநிற மேனி யும் அறிவுக் கண்களும் ஆற்றல் மிக்க அந்த விளக் கொளியில் மின்னிக்கொண்டிருந்தன.

அந்த அமைதியான நள்ளிரவில் அவர் எடுக்கவிருந்த 'பாண்டியன் பரிசு'த் திரைக்கதைக்கான உரைநடை யைச் சொல்லிக்கொண்டு வருகிருர். 'கணீர் கணீர்' என ஒலிக்கின்ற அவருடைய கம்பீரக் குரலிலே மூப்பின் காரணமாகச் சில நேரங்களில் கரகரப்புக் கலக்கிறது. சிங்கத்திற்கு முன் அமர்ந்திருந்த சுண்டெலியைப்போல் அவரெதிரில் அமர்ந்து, அவர் விடுவிடென்று சொல் வதை நான் வேகமாக எழுதிக்கொண்டிருக்கிறேன். திடீ ரென அவரின் ஆர்ப்பொலி தடைப்படுகிறது. அவரு

டைய பேச்சு 'பாண்டியன் பரிசு'ப் படப்பிடிப்பின்பக்கம் திசை திரும்புகிறது.

"பாண்டியன் பரிசுத் தலைவனும் தலைவியும் கடைசியில் ஒன்றுகூடிப் பூங்காவில் ஆடிப்பாடுவதாக நேற்று ஒரு பாட்டு எழுதினேனே.. என்ன அடி?... உம்...(அவரே பாடுகிறார்)

விடியும் போது விடியட்டுமே
    வெண்ணிலாவே! —பொழுது
விடியும் வரை அமுதமழை
    வெண்ணிலாவே!

இது எப்படி! எளிமையாக இருக்குமல்லவா?''

"பாட்டு எளிமையாக இருப்பதோடு கருத்தாழ்த்தோடும் இருக்கிறதையா!"

"இந்தப் பாடல்வரும் காட்சிதான் படத்தின் கடைசிக் காட்சி. எனவே நன்றாக அமையவேண்டும். மைசூர் பிருந்தாவனத்தில் இக்காட்சியைப் படமெடுக்க வேண்டும். மைசூரில் உள்ள ஆறு ஒன்றில் காதலர் படகில் பாடிச்செல்வது போல எடுக்கவேண்டும். வெளிப்புறக் காட்சிகளுக்கு மைசூர் ஏற்ற இடம்."

''படகில் காதலர் பாடிச் செல்வதுபோல் பல திரைப் படங்களிலும் வந்திருக்கிறதே ஐயா"— என்று நான் முந்திரிக்கொட்டைத் தனமாக உளறிவிட்டேன். கவிஞர் என்ன சொல்வாரோ என்று உள்ளுக்குள் நடுக்கந்தான்.

''அப்படியா! அந்த இடத்தில் வேண்டுமானால் கொஞ்சம் மாற்றம் செய்துகொள்ளலாம்,'' என்று கூறிய கவிஞர், நீண்ட அமைதியில் மூழ்கி விடுகிறார். அவருடைய இடையில் நெகிழ்ந்திருந்த கட்டம்போட்ட

லுங்கியை, உடம்பை அசைத்து இரண்டு கைகளாலும் கட்டிக்கொண்டு மேலும் பேசுகிருர்.

''நான் இப்படமெடுக்கும் முயற்சியில் பலவாருகத் தொல்லேப்படுகிறேன். படத்துறையில் உள்ளவர்களிட மெல்லாம், என் இயற்கைக் குணத்துக்கு மாருக நடந்து கொள்கிறேன். இவையெல்லாம் நான் எதிர்பார்க்காத—என் வாழ்க்கையில் நடக்கக் கூடாத நிகழ்ச்சிகள்! இவைபற்றியெல்லாம் நான் சிறிதும் பொருட்படுத் தாமல் இருப்பது எதற்காகத் தெரியுமா? இரண்டே இரண்டு காரணங்களுக்காகத்தான்.

''ஒன்று; போகத்தகாத வழியில் போய்க்கொண்டிருக்கும் திரைப்படத் துறையை நமது தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்படும் சீர்திருத்தப் புரட்சிக் கூடமாக மாற்ற வேண்டும்.''

''இரண்டு; இந்தப் படத்தின் மூலம் கிடைக்கின்ற வரு வாயில் குறைந்தது இரண்டுலக்க ரூபாயை ஒதுக்கித் தமிழருக்கு அறிவொளியூட்டும் பெரிய நூலகம் ஒன் றைச் சென்னேயின் மையமான இடமொன்றில் அமைக்க வேண்டும்.

''அந்த நூலகத்தில் இல்லாத பயன்மிகு நூல்களே உலகத்தில் இல்லே எனும் வகையில் பல்துறை இலக்கி யச் செல்வங்களேயும், ஆராய்ச்சி நூல்களேயும் குவித்து வைக்க வேண்டும். அந்த நூலகத்தில் பிறமொழி கற்றறிந்த தூய தமிழறிஞர்களே வேலேக்கமர்த்த வேண் டும். அவர்கள் உலகின் மூலே முடுக்குகளிலுள்ள சீர் திருத்த முற்போக்கு இலக்கியங்களேயெல்லாம் தமிழிலே மொழிபெயர்க்க வேண்டும். அதே போன்று தமிழறிஞர் களின் தரமான இலக்கிய நூல்களேயெல்லாம் மொழி பெயர்த்து உலகெல்லாம் பரப்பவேண்டும். மேலும் இந்த நூலகத்தில் பலபிரிவுகளே ஏற்படுத்தி, நைந்த எழுத்தா ளர்களுக்கும் வறுமை வாய்ப்பட்ட கவிஞர்கட்கும் வேலே

கொடுக்கவேண்டும். இந்தக் காரியத்தை ஒழுங்காகச் செய்தால், தமிழ்ச் சமுதாயத்தைப் பெருமுன்னேற்றத்தை நோக்கி இழுத்துச் செல்ல முடியுமென நம்புகிறேன். இந்த நன்முயற்சிக்கு நம் அப்பாதுரை (பன்மொழிப்புலவர்) தேவநேயப் பாவாணர் போன்றவர்கள் பயன் படுவார்கள்.''

சற்று நிறுத்துகிறார்; சிந்திக்கிறார்.

''இந்த முயற்சியின் முக்கியமான உள்நோக்கம் உனக்குப் புரிகிறதா?'' என்று கவிஞர் என்னைக் கேட்டார்.

''புரிகிறதையா!'' என்று உணர்ச்சி வயப்பட்டுத் தலையாட்டுகிறேன்.

''தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடு சென்றுள்ள சில போலிகள் மகாபாரதமும், கம்பராமாயணமும், கந்தபுராணமும் தமிழர்களின் தலை சிறந்த இலக்கியங்கள் என்று கூறிக் கொண்டிருக்கிறார்களாம்; மொழிபெயர்த்தது நூல்வடிவில் வெளியிடுகிறார்களாம், இவைகளைப்படித்த பிறநாட்டார் அவைகளின் கட்டுக் கதைகளையும், மூடத்தனங்களையும் எண்ணி நம்மையெல்லாம் காட்டுமிராண்டிகள் என்று எள்ளி நகையாடுகிறார்களாம். தமிழரின் மானம், மரியாதையாவும் அங்கே கப்பலேறுகின்றன. இந்த நிலையை நீடிக்கவிடலாமா?... இதற்காகத்தான்...''

கவிஞர் நீண்ட பெருமூச்சு விடுகிறார். பிறகு, ''சரி எனக்கு ஒரு சோடா உடைத்துக் கொடுத்துவிட்டு நீபோய்ப் படுத்துக்கொள்'' என்கிறார், (தண்ணீருக்குப் பதிலாகச் சோடா குடிப்பதுதான் அப்போது கவிஞரின் பழக்கமாக இருந்தது.)

''கவிஞர் ஏன் படம் எடுக்க வந்தார்? இந்தத் தள்ளாத

வயதில் இவருக்கு ஏனிந்த ஆசை?'' என்றெல்லாம் குறுக்குக் கேள்வி கேட்டு, அன்று கிண்டல் செய்து அங்கலாய்த்துக் கொண்ட தமிழர்கள் இப்போதேனும் இந்த உண்மையைப் புரிந்து கொண்டால் நல்லது.

●



திருமதி
சரசுவதி கண்ணப்பர்

# என் தந்தையார்

○

இவர் பாவேந்தர் குடும்பக் காவியத்தின் முதற்காதை; பாவேந்தர் பல்கலைக் கழகத்தின் முதல் பட்டதாரி; தமிழுக்குப் பிறந்து தமிழுக்கே வாழ்க்கைப்பட்டவர்.

'குடும்பவிளக்கு' தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர் என்று அந்நூலின் முன்னுரையில் குறிப்பிடப் படும் தலைவி இவரே!

அறுபதாம் அகவையை நெருங்கிக் கொண்டிருக்கும் இவர், வீட்டு வேலைகளைச் சுறுசுறுப்போடு செய்யும் காட்சி, 'பறந்தனள் பச்சைப் பசுங்கிளி ...' என்ற பாவேந்தர் பாட்டை உள்ளத்தில் கொண்டுவந்து நிறுத்துகிறது.

குடும்பவிளக்கில் படம் பிடித்துக் காட்டப்படும் விருந்தோம்பும் அழகை, இன்றும இவர் வீட்டுக்குச் சென்றால் சுவைத்து மகிழலாம.

புக்ககத்திலிருந்து புதுவை வரும் இவரைப் பெருமாள் கோவில் தெருக் கோடியில் கண்டால் "பழனியம்மா! குடும்பவிளக்கு வருது!" என்று பாவேந்தர் பரிவோடு குறிப்பிடுவதுண்டு.

சரசுவதி அம்மையார், பனித்த கண்களோடு தம்தந்தையாரை இக்கட்டுரையில் நினைவு கூர்கிறார்.

○



எங்கள் தாத்தா திருவாளர் கனகசபை முதலியார் புதுவையில் பெரிய வணிகர்; மளிகை மண்டியின் உரிமையாளர். கப்பலில் சரக்கு ஏற்றி பிரெஞ்சு நாட்டுக்கு அனுப்பிவைப்பார். அவர் ஒரு முறை சரக்கு ஏற்றி அனுப்பிய கப்பல் கவிழ்ந்து போனதால் வளமான எங்கள் குடும்பமும் கவிழ்ந்தது. அப்போது எங்கள் தாத்தாவின் வயது எழுபது.

வேணு (எ) சுப்பராய முதலியார் எங்கள் பெரியப்பா. அவருக்கு மளிகைமண்டி வாணிகம்தொழில்; சோதிடம் துணைத்தொழில். மணிக்கணக்குச் சோதிடம் சொல்வதிலும், கோசாரபலன் கூறுவதிலும் வல்லவர். புதுவைப் பிரமுகர்களான திருவாளர்கள் ஞாந்தியா முதலியார், சின்னையா முதலியார் ஆகியோர்க்கு இவர் குடும்பச் சோதிடர். இரட்டைக் குதிரைகள் பூட்டிய சாரட்டில் அவர்கள் வீட்டுக்குச் சென்று சோதிடம் சொல்லிவிட்டுத் திரும்புவார். என் தந்தையார்க்குச் சோதிடமெல்லாம் பிடிக்காது. என் பெரியப்பாவைப் பற்றி அவர் நகைச் சுவையாக அடிக்கடி ஒரு செய்தியைக் குறிப்பிடுவதுண்டு.

பெரியப்பாவும் என் தந்தையாரும் சிறுவர்களாக இருந்த போது நடந்தது இந்நிகழ்ச்சி. ஒருமுறை என்பெரியப்பா ஒருபெட்டியின் மீது அமர்ந்தபோது பெட்டிச் சந்தில் அவரது கை சிக்கிக் கொண்டதாம்; வலி பொறுக்க முடியாமல் 'முருகா! முருகா!' என்று கதறினாராம்.

அருகிலே நின்று கொண்டிருந்த எங்கள் தாத்தா 'எந்திரிடா மடையா? முருகன் என்னடா செய்வான்?' என்று சொன்னாராம். இதை என் தந்தையார் கூறும் போதெல்லாம் நாங்கள் விழுந்து விழுந்து சிரிப்போம்.

புதுவைக் கல்வே கல்லூரியின் எதிரில் மயிலம் சுப்பிரமணிய மடத்தார் ஒரு திண்ணைப்பள்ளிக்கூடம் நடத்தி வந்தனர். அத்திண்ணைப் பள்ளியில்தான் என் தந்தையார் தொடக்கக் கல்வி பயின்றார். திருவாளர் திருப்புளிசாமி ஐயா அப்பள்ளியின் ஆசிரியர்.

கல்வே கல்லூரியில் முதல் வகுப்பிலிருந்து பி.ஏ. பட்ட வகுப்புவரை கற்றுக் கொடுக்கின்றனர். தமிழகத்துக் கல்லூரிகளில் ஆங்கிலத்துக்கு உள்ள சிறப்பிடம் அங்கு பிரெஞ்சு மொழிக்குண்டு. தமிழ்ப் புலவர்களுக்கென்று புதுவை அரசாங்கம் அந்நாளில் 'பிரவே—தமிழ்' என்று ஒரு தேர்வுநடத்திவந்தது. கல்வே கல்லூரியில் ஈராண்டு பயின்று அத்தேர்வு எழுதவேண்டும். என் தந்தையாரும் அக்கல்லூரியில் பயின்று அத்தேர்வு எழுதி முதல்வராக வெற்றி பெற்றார்.

கல்வே கல்லூரியில் இவர் படித்துக் கொண்டிருந்த காலத்தில் புலவர் பங்காரு பத்தர் இவருக்குத் தமிழ் பயிற்றும் பேராசிரியராக விளங்கினார். ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியரான சாரம் மகாவித்துவான் பு.ஆ. பெரியசாமி பிள்ளையிடம் இலக்கிய இலக்கணத்தோடு வேதாந்த சித்தாந்தக் கருத்துக்களையும் பயின்றார்.

என் தந்தையாருக்குத் திருமணம் உறுதி செய்யப்பட்ட வுடன் புதுவை அரசு அவர்மீது ஒரு பொய் வழக்குப் போட்டுச் சிறையில் தள்ளிவிட்டது. எங்கள் தாய்ப் பாட்டன் பெயர் பரதேசியார்; பாட்டி பெயர் காமாட்சி அம்மாள். தென்ஆர்க்காடு மாவட்டத்தில் பெண்ணை ஆற்றுக்கு வடகரையில் உள்ள புவனகிரிப் பெருமாத் தூர் இவர்கள் சொந்தவூர். திருமணம் உறுதியானபிறகு என் தந்தையார் சிறைக்குச் செல்வதைக் கண்டு என்

பாட்டனர் மிகவும் அஞ்சினர். ஆனல் என் பாட்டி "ஆமாம்! அவர் அப்படித்தான் சிறைக்குப் போவார். ஆனல் சீக்கிரம் திரும்பி வந்திடுவார். நீங்க கவலைப் படாதீங்க'' என்று கூறி அவரைத் தேற்றினராம்.

என் தந்தையாருக்கு மிகவும் பிடித்தவர்கள் இரண்டு பேர். ஒருவர் பாரதியார்;மற்றொருவர்இந்தக்காமாட்சிப் பாட்டி. இந்தப்பாட்டி மருமகனைக் கண்டால் அஞ்சி நடுங்குவார். ''மருமகன் எங்கே கோபித்துக் கொள்வா ரோ! எங்கே சாப்பிடாமல் போய் விடுவாரோ! எங்கே பழனியம்மாளை வேண்டாம் என்று சொல்லிவிடு வாரோ!" என்றெல்லாம் வீணாக அச்சப்படுவாராம்.

மாமியார் வீட்டுக்குச் சென்றுவிட்டுப் புதுவை திரும்பி யதும் "உங்கபாட்டி என்னைக்கண்டு ரொம்ப நடுங் கருங்க. அதனாலே நா ரொம்ப அமைதியா இருந்துட்டு வந்த ..?''என்று எங்களிடம் தந்தையார் கூறுவதுண்டு.

உணவுப் பழக்கத்தில் என் தந்தையாருக்கு ஒரு கட்டுத் திட்டம் கிடையாது. ஒரு நாளைக்கு அதிகாலையில் தேநீர் கேட்பார். அடுத்தநாள் அதே நேரத்தில் தேநீர் கொண்டுபோய்க் கொடுத்தால், 'உங்களை யார் இப் போது தேநீர் கேட்டார்கள்?' என்று திட்டுவார். எப் போதாவது என் தாயாரைக் கூப்பிட்டு, ''பழனியம்மா! கைகால் வலிக்குது. ஏதாவது பண்ணு!" என்றுசொல்லு வார்."என்ன செய்வது?' என்று என் தாயார் கேட்டால் 'ஏதாவது செய்' என்று சொல்லுவார்.

காலையில் இட்டிலி சாப்பிடும் போது தேங்காய்ச் சட்டினி வெங்காயச் சட்டினி, தயிர், மிளகாய்ப்பொடி, உருக்கு நெய், பழைய மீன் குழம்பு இத்தனையும் கேட்பார். சாப் பிட்டு முடித்ததும் எண்ணெய்ப் பசை படிந்த கையை அழகாக வெளுத்த வேட்டியிலே கறைபடும்படி துடைத் துக் கொள்வார். இதைப் பல முறை பார்த்த பிறகு, இது நம் குறையே என்றுணர்ந்து அவர் சாப்பிட்டு முடித்ததும் சோப்புக்கட்டியும் துண்டும் கொண்டுபோய்க்

கொடுப்பதை நான் வழக்கமாக்கிக் கொண்டேன். நாவல்பழம், சர்க்கரைவள்ளிக் கிழங்கு ஆகியவை அவருடம்புக்குச் சேரா. ஒரு முறை நாங்கள் அவற்றை வீட்டில் வாங்கி வைத்திருந்ததைக் கண்டதும் கிணற்றில் எடுத்துக் கொண்டுபோய்க் கொட்டிவிட்டார்.

என் தந்தையார் சிந்தனையில்மூழ்கி மும்மரமாக எழுத்து வேலையில் ஈடுபட்டிருக்கும்போது நாங்கள் திண்டாடிப் போவதுண்டு. சற்று நேரத்துக்கு முன்தான் சாப்பிட்டு முடித்திருப்பார். திடீரென்று 'பாப்பா!' என்று குரல் கொடுப்பார். நான் எழுந்து ஓடுவேன். என்னைப் பார்த்து 'என்னம்மா! நான் சாப்பிட்டுட்டனு?' என்று கேட்பார். சிலசமயம் தட்டில் உணவு பரிமாறியிருந்தால் அப்பளத்தை மட்டும் சாப்பிட்டுவிட்டுப் போய்ப்படுத்துக் கொள்வார். கொஞ்ச நேரங்கழித்து. ''என்ன பண்றீங்க எல்லாம்? நா பசியோட கிடக்கற...!'' என்று சத்தம் போடுவார். சில சமயம் பாதி சாப்பிட்ட நிலையில் கைகழுவிவிட்டு எழுந்து விடுவார்.

குளிப்பதற்காகக் குளியல் அறையில் ஒரு பெரிய பாத்திரத்தில் வெந்நீர் நிரப்பி, உட்காரும் பலகையும், செம்பையும் அருகில் வைத்துவிட்டு அவருக்கு நாங்கள் அறிவிப்பது வழக்கம். என் தந்தையார் குளிப்பதற்கு உள்ளே செல்லுவார். கொஞ்ச நேரம் பலகையில் மௌனமாக அமர்ந்திருப்பார். பிறகு வெந்நீரை ஒரு கையால் மொண்டு மொண்டு காலில் ஊற்றிக்கொண்டு மற்றொரு கையைச் சுண்டித் தாளம் போட்டுக்கொண்டிருப்பார். தாளச் சத்தத்தைக் கேட்டதும் என் தாயார், ''போய்ப் பாரும்மா! சிட்டிகை வருது''என்று கூச்சல் போடுவார்.

சிலசமயம் சென்னையிலிருந்து அவசரமாக வீடுதிரும்பும் போது இரவு நேரமாக இருக்கும். வீட்டில் அவருக்கு ஏற்ற உணவு இருக்காது. சோற்றைப்போட்டு இரசத்தை ஊற்றி அப்பளத்தைப் பொரித்து வைப்பார் என் தாயார். சோற்றை வாயில் அள்ளிப் போட்டுக்கொண்டு அப்பளத்தைக் கடிப்பார். பிறகு தூவென்று துப்பிவிட்டு

'அப்பளம் கசக்குது' என்று கூப்பாடு போடுவார். சாப் பாட்டுக் கிண்ணி மேலே பறக்கும். பிறகு என்னைக் கூப்பிடுவார். அப்பளம் ரசத்துக்குக் கசக்கும். அது என் தாயார் கவனத்துக்கு வருவதில்லை. நான் மீண்டும் போய்ப் பருப்புத் துவையல் அரைத்துக் கொடுத்து சமா தானம் செய்தால்தான் சாப்பிடுவார். பருப்புத் துவைய லோடு அப்பளத்தைத் தொட்டுச் சாப்பிடச் சொல்லு வேன். 'ஆமாம்மா! இப்பத்தான் நல்லாருக்கு' என்பார் தந்தை.

இரவு நேரங்களில் எழுதும்போது நிறைய ரொட்டியும் ஜாமும் வேண்டும். காலையில் அவர் அறைக்குள் நுழைந் தால் சிகரெட் துண்டும், சாம்பலும், நெருப்புக் குச்சியு மாகக் கிடக்கும். அவர் எழுதிய கையெழுத்துப் படிகளும் இறைந்து கிடக்கும். சிலசமயம் அவர் கையெழுத்துப் படிகளை எடுத்துப் பார்த்தால் ஒன்றின்மேல் ஒன்று ஏறி யிருக்கும்.

'என்னப்பா இப்படி எழுதியிருக்கறீங்க?' என்று கேட் டால், 'விளக்கிலே எண்ணெய் தீந்து போச்சு. கூப் பிட்ட...யாரும்வரலை. இருட்டிலேயேஎழுதிமுடிச்சுட்ட...' என்று கூறுவார். சுவாரசியமாக எழுதும் நேரங்களில் குப்புறப்படுத்து நெஞ்சுக்குத் தலையணையைத்தாங்கலாக வைத்துக்கொண்டு எழுதுவார். சிலசமயங்களில் எழுதும் போது தாகமாக இருக்கிறது என்பார். சீரகம் போட்டுக் காய்ச்சி வடித்த நீரைக் கொண்டுபோய்க் கொடுத்தால் குடித்துவிட்டு மீண்டும் எழுதத் தொடங்குவார்.

அதிகாலை தொடங்கி ஓய்வொழிச்சல் இன்றி வேலை செய்யும் என் தாயார் அசதி காரணமாக இரவு எட்டு மணிக்கே படுத்துக்கொள்வார். படுத்தால் மீண்டும் அவரால் எழுந்திருக்க இயலாது. ஆனால் தந்தையாரோ இரவில் எழுதிக்கொண்டிருக்கும்போது பசியென்பார். நான் எழுந்து ஏதாவது தின்பண்டம் செய்து கொடுக்க வேண்டும். இரவு 1 மணிக்குப் பூசணி அல்வா கேட்பார்

நடு இரவில் பல் தேய்த்துவிட்டுச் சாப்பிடுவார். ''இப்ப அழுத்திப் பல் தேச்சுட்டுக் காலையிலே லேசா துலக்கினாப் போச்சு!'' என்று சிரித்துக்கொண்டே சொல்வார். எந்த வேலையையும் அனாவசியமாக நீட்டிக் கொண்டிருப்பது என் தந்தையாருக்குப் பிடிக்காத ஒன்று. பல் தேய்ப்ப தாக இருந்தாலும், குளிப்பதாக இருந்தாலும், உடை யுடுத்துக்கொள்வதாகஇருந்தாலும் விரைவில் சுறுசுறுப் பாகச் செய்து முடிக்கவேண்டும்; இல்லாவிட்டால் கண் டிப்பார்.

சில சமயங்களில் எங்கள் வீட்டில் சமையல்காரர்கள் இருப்பார்கள். என் தந்தையாரின் சுவைக்கு ஏற்பச் சமையல் செய்ய முடியாமல் அவர்கள் விழிப்பார்கள். கோழியை அறுத்துத் துண்டு போடுவதிலும் கூட என் தந்தையாரின் விருப்பமறிந்து துண்டு போட வேண்டும்; இல்லாவிட்டால் திட்டுவார்; கோழிக்கறியைச் சமையல் காரன்தான் சமைக்கவேண்டும். நானோ என் தாயாரோ அதில் தலையிடக்கூடாது. ஒருநாள் கோழிக்கறி சமைக் கும்போது என் தாயாரை உப்புப் போட அனுமதித்த தற்காக அச் சமையல்காரனை வீட்டைவிட்டுத் துரத்தி விட்டார். எங்கள் வீட்டில் வேலை செய்த சமையல்காரர் களுக்கு, அவர்கள் வைக்கும் குழம்பைவிட நாங்கள் வைக்கும் குழம்புதான் மிகப்பிடிக்கும்.

ஒருமுறை என் தந்தையாரிடம் நற்சான்றிதழ் பெற்றுச் செல்வதற்காக ஒரு சமையல்காரன் வந்தான். 'இரண்டு நாள் வீட்டிலிருந்து சமைத்துப்போடு. உன்னுடைய சாப்பாடு எப்படி இருக்கிறது என்று சுவைத்துப் பார்த்து விட்டுச் சான்றிதழ் தருகிறேன்' என்று என் தந்தையார் கூறினர். முதல்நாள் சமைப்பதாகச் சொல்லி அன்றைய உணவை அவன் பாழடித்தான். ஒரு பெரிய உருண்டை புளியை எடுத்துப் பாத்திரத்தில் ஊறவைத்திருந்தான். அப்போது எதேச்சையாக உள்ளேவந்த என் தந்தையார் அதைப்பார்த்துவிட்டு 'எதற்காக இவ்வளவு புளி ஊற வைத்திருக்கிறாய்?' என்று அவனைக் கேட்டார். 'குழம்

புக்கும் இரசத்துக்குமாகச் சேர்த்து ஊற வைத்திருக்கி றேன்' என்று அவன் சொன்னான். உடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டது. எப்போதும் குழம்புக்கும் ரசத் துக்கும் தனித்தனியாகப் புளி ஊறவைக்க வேண்டும். ஒன்றாக ஊறவைத்தால் முதல்பாதி மிகுதியாகப் புளிக் கும்; மறுபாதி துவர்க்கும். அதனால் குழம்பின் சுவையும் கெட்டுவிடும்; இரசத்தின் சுவையும் கெட்டுவிடும்.

இரண்டாவது நாள் நான் சமைத்தேன். தானும் கற்றுக் கொள்வதாகச் சொல்லி அச்சமையல்காரன் என் அருகி லிருந்து அன்று கற்றுக் கொண்டான்.

என் தந்தையாரைக் கூட்டங்களுக்கு அழைத்துச் செல்வ தற்காக, அயலூரிலிருந்து எங்கள் வீட்டைத் தேடி யாராவது அடிக்கடி வந்து கொண்டிருப்பார்கள். முதன் முறை ஒழுங்காக நடந்து கொண்டவர்களாக இருந்தால் மறுப்பு ஏதும் சொல்லாமல் ஒத்துக்கொள்வார். ஒழுங் காகநடந்து கொள்ளாதவர்கள் வீட்டைத் தேடி மறு முறைவந்துவிட்டால் அவர்கள்பாடு திண்டாட்டந்தான். "யாரவ"? கூப்பிடு!... போடா...! கூட்டமில்லே. போனமுறை வந்திருந்தப்ப பிட்நோட்டீஸ் போடல. சாப்பாடு சரியில்லே. ஒழுங்கா வண்டி ஏற்றிவிடல. போ போ! வர முடியாது'' என்று திட்டி அனுப்பிவிடுவார்.

கூட்டத்துக்குப் போகும் போது அவர் எந்த இடத்துக் குப் போகிறாரோ அந்த இடத்தின் தட்ப வெப்ப நிலைக் கேற்ப உடை, போர்வை, கம்பளிச் சட்டை ஆகியவற் றைப் பெட்டியில் வைத்து அனுப்புவோம். திரும்பி வரும் போது வெறும் பெட்டியும் அழுக்குத் துண்டும் தான் வரும். கேட்பவர்களுக்கு அவற்றைக் கொடுத்து விட்டு வந்து விடுவார். ஒரு முறை வெளியூர் சென்றிருந்த போது வைரமோதிரத்தையும் கடிகாரத்தையும் கூட யாருக்கோ கொடுத்துவிட்டு வந்துவிட்டார். யாருக்கு அவர் எதைக் கொடுத்தாலும் வீட்டில் வாயைத் திறக்

கக்கூடாது. திறந்தால் அன்று வீடு தலையாலங்கானந் தான்.

இன்றையப் பேச்சாளர்கள் கூட்டத்திற்காக வெளியூர் சென்றால் ஆயிரம் ஐநூறு என்று வீட்டுக்குக் கொண்டு வருகிறார்கள். அன்றைய நிலை அப்படியில்லை. என் தந்தையார் கூட்டங்களுக்கு அயலூர் சென்று விட்டு வெறுங்கையோடு திரும்புவதுண்டு; சில நாட்களில் கைப்பணத்தைச் செலவு செய்துவிட்டு வருவதுண்டு. ஆகையால் அவர் கூட்டத்துக்குப் போகிறேன் என்று சொன்னால் என் தாயாருக்குக் குலைநடுங்கும்; தப்புத் திப்பென்று குறுக்கும் நெடுக்குமாக நடந்து தமது வெறுப்பை வெளிப்படுத்துவார். தம்மிடம் எங்கு பணம் கேட்டுவிடுவாரோ என்று என் தாயாருக்கு அச்சம். இதைக் குறிப்பால் அறிந்துகொண்டு என்னை அருகில் அழைப்பார் என் தந்தையார். 'ஏம்மா! சீப்பை எடுத்து ஒளிச்சுவைச்சுட்டா கல்யாணம் நின்னுடும்னு உங்கம்மா நினைக்கரு!' என்று கூறுவார் நான் கையை நீட்டுவேன். வளையலைக் கழற்றி விற்று எடுத்துக் கொண்டு கூட்டத்துக்குப் போய்விடுவார். 1930ஆம் ஆண்டில் நான் பத்து வயதுப்பெண். அப்போது என் தந்தையார் ஒரு தீவிர தேசியவாதி. காங்கிரஸ் மீதும் கதர்மீதும் அவருக்கு அளவுகடந்த பற்று. கதர்த்துணி யைத் தோளில் சுமந்துகொண்டு தெருத்தெருவாகச் சென்று விற்று வருவார். வீட்டில் நாங்கள் எல்லாரும் அணிவது கதராடைதான். என் தாயார் அப்போது கழுத்தில் அணிந்திருந்த பத்துபவுன் நகையை விற்று அந்தப் பணத்தில் தாம் எழுதிய 'கதர் இராட்டினப் பாட்டு' நூலை வெளியிட்டார். நாங்களே அந்நூலைத் தைத்து ஒட்டி விற்பனைக்கு அனுப்பினோம்.

கைச்செலவுக்குப் பணமில்லாத நேரத்தில் அவருக்குக் காரணமில்லாமல் கோபம் வரும். ஒரு முறை என் தாயார் ஓராண்டுக்குத் தேவையான புளியை வாங்கி இரண்டு பானைகளில் நிரப்பி வைத்திருந்தார். அவற்

றைப் பார்த்ததும் வந்ததே கோபம்! 'புளி! அங்கே பெரிய பானைப்புளி! அப்படிச் சின்னப்பானைப் புளி! எதுக்கு? பத்து வருஷத்துக்குப் புளியா... பால அடிப்ப!' என்று சத்தம் போடத் தொடங்கிவிட்டார்.

வாத்தியார் சுப்புரத்தனம் என்றால் எல்லாருக்கும் கொஞ்சம் நடுக்கந்தான். எப்போதும் அவர்கையில் ஒரு கூட்டம் இருக்கும். வீட்டில் கத்தி, அரிவாள், தடி எல்லாம் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். எப்போது என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது.

சில சமயங்களில் ஓய்வு வேண்டி என் தந்தையார் அரசாங்க மருத்துவமனைக்குச் சென்று படுத்துக்கொள்வதும் உண்டு. பள்ளியிலிருந்து மருத்துவ விடுப்பு எடுப்பதற்காக அரசாங்க மருத்துவரிடம் சென்று மருத்துவச் சான்றிதழ் (Medical Certificate) கேட்பார். அவர் கொடுக்க மறுத்தால் 'பத்திரிகையில் எழுதி உன் குட்டை அம்பலப் படுத்துவேன்' என்று மிரட்டி விட்டு வந்து விடுவார். அன்று மாலை மருத்துவரே வீடு தேடிவந்து மருத்துவச் சான்றிதழை வழங்கிச் சமாதானப் படுத்திவிட்டுப் போவார். மருத்துவமனையில் படுத்துக்கொண்டு அங்கேயே கவிதை எழுதிப் போடுவார். நாங்கள் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வருவோம்.

பிரெஞ்சு நாட்டில் விழிமலை என்றோர் இடமுண்டு. அம்மலை அந்நாட்டு மக்களால் மிகவும் புனிதமாகக் கருதப் படுகிறது. அம்மலையின் ஊற்றுநீர் மருந்துத் தன்மை வாய்ந்ததென்றும், அந்நீரை அருந்திய நோயாளிகள் நோய் நீங்கப் பெறுவர் என்றும் பிரெஞ்சு மக்கள் நம்புகின்றனர். அந்தக் காலத்தில் அந்நீரைப் புட்டிகளில் அடைத்துப் புதுவைக்குக் கொண்டுவந்து மருத்துவமனையில் உள்ள நோயாளிகளுக்குக் கொடுப்பர். நோயாளிகள் அதை விரும்பி அருந்துவர். ஆனால் என் தந்தையார் அதைக் கைகழுவப் பயன்படுத்துவார்.

நான் பள்ளி இறுதி வகுப்பு (S.S.L.C.) வரைதான் படித்தேன். அதற்குமேல் என் கல்வியைத் தொடர என் வீட்டுச் சூழ்நிலை இடந்தரவில்லை. நான் மேற்படிப்புக்குச் சென்றிருந்தால் என் தந்தையாரின் எழுத்துப்பணி குறைந்திருக்கும்.

என் இளமைக்கால வாழ்க்கையின் பெரும்பகுதி என் தந்தையாரின் மனங்கோணுமல் அவரைப் பேணுவதிலேயே கழிந்தது. நான் எப்போதும் 'அப்பாபெண்'. அவர் உள்ளமறிந்து நடந்து கொள்வதில் கண்ணுங் கருத்துமாக இருப்பேன். ஓர்ஆசிரியர் இரவில் வீட்டுக்கு வந்து எனக்குத் தனிப்படிப்புச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் எனக்குப் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது 'பாப்பா! பாப்பா!' என்று அறைக்குள்ளிருந்து என் தந்தையார் கூப்பிட்டுக் கொண்டிருப்பார். அவர் தேவைகளை கவனித்துக் கொண்டே கல்வி கற்பது எனக்கு மிகவும் கடினமாகத்தான் இருந்தது. இரவு பதினொருமணிக்கு அவர் தூங்கியபிறகு வீட்டு வேலைகளை முடித்துவிட்டு, வீட்டுப் பாடங்களைப் படித்து முடிப்பேன். இரவு எந்நேரம் படுத்தாலும் அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளைத் தொடங்கி விடுவேன். குடும்பவிளக்கு நூல் முதல் பகுதி 1942ஆம்ஆண்டு வெளியிடப்பட்டது. பள்ளிப் படிப்பை முடித்துவிட்டுக் குடும்பப்பணிகளை நான் கைந்து ஆண்டுகள் நான் செம்மையாகச் செய்துகொண்டிருந்த நேரம் அது. என்னைப் பார்த்துத்தான் குடும்ப விளக்கின் தலைவி உருவம் கொடுத்ததாக என் தந்தையார் அடிக்கடி கூறுவதுண்டு.

கொஞ்சநாள் நான் இசையும் கற்றுக்கொண்டேன். சேலத்திலிருந்து ஓர் இசையாசிரியர் வந்து எனக்குக் கற்றுக்கொடுத்தார். இசையில் என் தந்தையாருக்கு ஈடுபாடு அதிகம் என்றாலும், எப்போது பார்த்தாலும் 'சரிகமபதநி' என்று கத்திக்கொண்டிருப்பது அவருக்குப்

பிடிக்காது. 'யார்ரா அவ?...எப்பப்பாத்தாலும் சரிகம பதநின்னுக்கிட்டு...அவனை மொதல்ல வெளிய போகச் சொல்லு...' என்று சத்தம் போடுவார்.

நானும் என் தம்பி கோபதியும் பள்ளி மாணவர்களாக இருந்தபோது, எங்களுக்கென்றே சிலபாடல்களை எழுதிக் 'கவிதாமண்டலம்' பத்திரிகையில் வெளியிட்டார். 'கல்வியின்மிக்கதாம்' 'நிற்கையில் நிமிர்ந்துநில்' 'சேரிடம் அறிந்துசேர்' 'மரங்கள் அடர்ந்திருக்கும் காடு' என்ற பாடல்கள் அப்போது எழுதப்பட்டவை. நெட்டப்பாக்கம் பள்ளியில் நாங்கள் படித்துக்கொண்டிருந்த போது பள்ளி விழாவில் நடிப்பதற்காக எழுதப்பட்டதே 'வீரத்தாய்' என்ற கவிதை நாடகம். அதில் நான் வீரத்தாயாக நடித்தேன். கோபதி சுதர்மனாக நடித்தான்.

21-1-44இல் எனக்கும் புலவர் கண்ணப்பனுருக்கும் திருச்சிராப்பள்ளியில் பதிவுத் திருமணம் நடைபெற்றது. 22-1-44ஆம் நாள் காலை ஒன்பது மணிக்குப் பெரியார் முன்னிலையில் பாராட்டுக்கூட்டம் கட்டிப்பாளையத்தில் நடைபெற்றது. என் திருமணம் நடைபெறப் பெரிதும் முயற்சி எடுத்துக்கொண்டு உறுதுணையாகஇருந்தவர்கள் கானாடுகாத்தான் தனவணிகர் திரு. வை சு. சண்முகம் செட்டியாரும், அவரது துணைவியாரான மஞ்சுளா பாய் அம்மையாரும் ஆவர். மஞ்சுளாபாய் அம்மையார் எங்கள் குடும்பத்தின்பால் மிக்க ஈடுபாடு கொண்டவர். அவரை எங்கள்குடும்பத்தின் ஓர் அங்கமாக்கி 'அத்தை' என்று அன்போடு அழைப்பது வழக்கம். எப்போதும் அரசியலிலும் கவிதையிலும் மூழ்கிக் கிடப்பவர் என் தந்தையார். அவர் உலகமே வேறு; உலகியலுக்கு இறங்கிவந்து செயல்படுவது அவருக்குச்சற்றுத்தொல்லையாகத்தான் இருக்கும். அதுபோன்ற வேளைகளில் மஞ்சுளாபாய் போன்ற நல்ல உள்ளம் படைத்த அன்பர்கள் தாமே முன்வந்து உதவுவது வழக்கம்.

திருமதி மஞ்சுளாபாய் அவர்களே மாப்பிள்ளை பார்த்து

விட்டுத் திடீரென்று ஒருநாள் புதுச்சேரிவந்தார். அவரே ஒட்டடை அடித்து வீட்டைத் தூய்மை செய்தார்; பால் வாங்கிக்கொண்டு வந்தார். பெண்பார்க்கும் படலத்தை உடனிருந்து நடத்தினர். திருமணத்தைப்பற்றி முதன் முறையாக என்னிடம் கேட்டபோது, ''அப்பாவைப் பிரிந்து என்னல் இருக்க முடியாது; அவரைத் தொடர்ந்து செல்வதில்தான் எனக்கு விருப்பம். அப்பா வைக் கேளுங்கள். அவர் விருப்பம் எதுவோ அதுதான் என் விருப்பம்'', என்று நான் சொன்னேன்.

பெரியாரைப் பின்பற்றும் தன்மான இயக்கத்தோழர்கள் சடங்குத் திருமணத்தை எதிர்ப்பவர்கள். ஆண் பெண் சமத்துவத்தை வற்புறுத்திப் பேசிய பெரியார் 'தாலி பெண்ணுக்குப் பூட்டப்படும் அடிமைச் சாசனம்' என்று அடிக்கடி குறிப்பிடுவார். அதனல் சீர்திருத்தத் திரு மணங்களில் அன்று தாலிகட்டும் நிகழ்ச்சி இடம் பெறுவ தில்லை. எனது திருமணப்பேச்சு நடைபெற்றபோது தாலி அணிவதற்கு என் எதிர்ப்பைத் தெரிவித்தேன். அப்போது என் தந்தையார், ''கட்டிப்பாளையம் சிற்றூர் ஆயிற்றே! அங்கு ஏதாவது எதிர்ப்பும் பூசலும் ஏற்பட் டால் என்ன செய்வது?'' என்று கூறினர்.

''எதிர்ப்பதற்குத்தானே நாம் இருக்கின்ருேம்'' என்று நான் சொன்னேன். பிறகு புலி வில் கயல் பொறித்த மூவேந்தர் சின்னத்தைத் தங்கத்தால் செய்து என் மங் கல நாணில் அணிவித்தார்கள். அதற்குப் பிறகு எங்கள் குடும்பத் திருமணங்களில் 'புலிவில்கயல்' அணிவது வழக்கமாகி விட்டது.

திருமணம் முடிந்து முதன் முறையாக என் கணவரோடு பிறந்தகம் சென்று சில நாட்கள் மகிழ்ச்சியோடு தங்கி யிருந்துவிட்டுப் புக்ககத்துக்குப் புறப்பட்டேன். இருப தாண்டுகள் இருந்து பழகிய வீட்டையும், உறவையும், குறிப்பாக என் அன்புத் தந்தையாரையும் பிரிந்து வரு வது எனக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது; என்

தந்தையாருக்கும் என் பிரிவு மிகவும் வேதனையைக் கொடுத்திருக்க வேண்டும். வழியனுப்பிவிட எங்களோடு வந்த தந்தையார், விழுப்புரம் வந்ததும் என்னிடம் சொல்லிக்கொள்ளாமலேயே சென்று விட்டார். என்னிடம் சொல்லிக்கொண்டால் நான் கண்ணீர் விடுவேன் என்று அவர் எண்ணியிருக்கலாம், தந்தையார் என்னிடம் சொல்லிக்கொள்ளாமல் போய்விட்டதால் எனக்கு வருத்தம்.

கட்டிப்பாளையம் சென்றதும் நான் தந்தையாருக்குக் கடிதம் எழுதவில்லை. தம்பி தங்கையரின் நலன் விசாரித்து அம்மாவுக்குக் கடிதம் எழுதினேன். சென்னையிலிருந்து திரும்பிவந்த தந்தையார், நான் அம்மாவுக்கு எழுதியிருந்த கடிதத்தைப் பார்த்தவுடன் என் வருத்தத்தைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும் என் வருத்தத்தைப் போக்க ஆதரவோடு அன்புக்கடிதம் ஒன்று வரைந்தார்.

“அம்மா! உன் பிரிவு என்னை மிகவும் வருத்துகிறது. உன்னைக் கணவன் வீட்டுக்கு அனுப்பிவிட்டுப் புதுவையில் இருக்கும் நான், வலிய தோளும் வாளும் இழந்த படைவீரன்போல் இருக்கிறேன்” என்று எழுதியிருந்தார். இவ்வரிகளைப் படிக்கத் தொடங்கியதும் என் கண்கள் நீர்க்குளமாகிவிட்டன. நினைக்கும்போதெல்லாம் நெஞ்சை உருக்கும் வரிகள், இந்த வரிகள்! திருமணம் என்ற புயல் எனது உயிரைப் புதுவையிலும் உடலைக் கட்டிப்பாளையத்திலும் ஒதுக்கிவிட்டதாக அப்போது நான் எண்ணி வருந்தினேன். என் உள்ள நிலையை உணர்ந்த என் கணவரும் உடனே விடுப்பெடுத்துக் கொண்டு என்னோடு புதுவை புறப்பட்டார்.

நான் புதுவைக்கு இந்த நாளில் வருகிறேன் என்று முன்னதாகவே கடிதம் போட்டுவிட்டுச் செல்வது வழக்கம். என் வரவை எதிர்நோக்கி அவர் எப்போதும் திண்ணையிலேயே அமர்ந்திருப்பார். பெருமாள் கோவில் தெரு முனையில் என்னைப் பார்த்ததும் வீட்டுக்குள்ளிருக்

கும் என் தாயாரை விளித்து, ''பழனியம்மா! குடும்ப விளக்கு வருது'' என்று கூறுவார். என் கணவர் புதுவைக்கு வரும்போதெல்லாம் என் தந்தையாரே கடைக்குச் சென்று மீன் வாங்கிக்கொண்டு வருவார்.

என் தலைப்பிள்ளையான புகழேந்தி புதுவையில் பிறந்த போது பிரெஞ்சுநாட்டிலிருந்து இறக்குமதியான சாக்லெட்டைப் பார்க்க வருபவர்களுக்கெல்லாம் குத்துக் குத்தாக வாரிவழங்கினார். பேரன் புகழேந்தி மீது அவருக்கு அளவுகடந்த விருப்பம். தமக்கு உடம்பு சரியில்லையென்றால் தந்தி கொடுப்பார். நான் குழந்தையோடு புறப்பட்டுச் செல்வேன். புகழேந்தியைப் பார்த்ததும் அவருக்கு உடம்பு குணமாகிவிடும்.

என் தந்தையாருக்கு உள்ளமும் நாக்கும் ஒன்றுதான். உள்ளத்தில் என்ன நினைக்கிறாரோ அதை எதிர்ப்புகளுக் கஞ்சாமல், பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் பேசிவிடுவார்; எழுதிவிடுவார். அதனால் அரசியல் உலகிலும், இலக்கிய உலகிலும் அவருக்கு எதிரிகள் அதிகம். எதிர்ப்பு அதிகம் ஆக ஆக அவருக்குச் சுறு சுறுப்பு அதிகமாகுமே தவிர சோர்வு ஏற்படாது. அவர் எந்தநிலையிலும் அச்சப்பட்டு நான் பார்த்ததில்லை. இந்தப் பண்புகளால் அவருக்கு ஏற்பட்ட தொல்லைகள் ஏராளம். கல்வித்துறை அதிகாரிகள் வேண்டுமென்றே இவரை அடிக்கடி இடம் மாற்றிக் கொண்டிருப்பார்கள். காரைக்கால், நிரவி, கூனிச்சம்பட்டு, நெட்டப்பாக்கம், முதலியார்ப்பேட்டை ஆகிய வெளியூர்களுக்கும், புதுவையில் கல்வே கல்லூரி முதல் மற்ற முத்திரைப் பாளையம், உருளையன்பேட்டைப் பள்ளிகளுக்கும் அவரைப் பந்தாடிக் கொண்டிருப்பார்கள். அதற்காக என்தந்தையார் கலங்க மாட்டார்; தம் கொள்கைகளையும் விட்டுக் கொடுக்கமாட்டார்.

கல்லூரி வகுப்புகளுக்குப் பாடம் பயிற்றுவிக்கத்தக்க பெரும்புலமையும் ஆற்றலும் பெற்றிருந்தாலும் சிறுவர்

களின் மீது கொண்ட அளவிறந்த பற்றின் காரணமாகக் கீழ் வகுப்புகளுக்கே என் தந்தையார் ஆசிரியராக இருப்பதுண்டு. அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியரான பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் இதைப் பற்றிக் குறிப்பிட்டு, "என்ன? பாரதிதாசன் அட்டைக் கிளாஷ் வாத்தியார் தானே"† என்று ஒருமுறை கேவலமாகப் பேசிவிட்டார். பண்டிதமணி அடுத்த முறை கூட்டத்தில் பேசப் புதுச்சேரிக்கு வந்த போது, கூட்டத்தில் இருந்தவர்கள் எழுந்து, அவ்வாறு பேசியதற்காக் அவரை மன்னிப்புக் கேட்கும்படி செய்தார்கள்.

ஏழை மாணவர்கள்பால் என் தந்தையாருக்கு எப்போதும் அன்பும் பரிவும் உண்டு. தேர்வு மேற்பார்வையாளராக இருக்கும்போது ஏழைப்பிள்ளைகளுக்கு இவரே சொல்லிக் கொடுத்து மதிப்பெண் போட்டுத் தேர்விலும் வெற்றியடையும்படி செய்து விடுவார். ஆசிரியர் பயிற்சிக்குப் படிக்கும் சில பெண்கள், தனிப் படிப்புக்காக வீட்டுக்கு வருவதுண்டு. அவ்வாறு வரும் பெண்களுக்குக் கல்வியோடு பண்பாட்டையும் புகட்டுவது இவர் வழக்கம். பெண்கள் இரட்டைச் சடை போட்டுக் கொண்டு வந்தால் இவருக்குப் பிடிக்காது. உடம்பு மறைய ஆடை உடுத்த வேண்டுமென்று வற்புறுத்துவார். 'பெண்களுக்கு அலங்காரம் தேவையில்லை; தாயுள்ளமே தேவை' என்று அடிக்கடி கூறுவார்.

என் தந்தையார் எதற்கும் கண்கலங்கமாட்டார். என் தங்கை ரமணிக்குப் பிறகு பிறந்த கைக்குழந்தையொன்று ஏழுதிங்களில் இறந்தபோது கூட அவர் கண் கலங்கவில்லை. ஆனால் பாரதியாரைப் பற்றி யாராவது

† புதுவையில் முதல் வகுப்பு ஆசிரியரை 'அட்டைக் கிளாஸ் வாத்தியார்' என்று பொதுவாகக் குறிப்பிடுவது வழக்கம், பாவேந்தர் எப்போதும் ஐந்து அல்லது ஆறும் வகுப்புகளுக்குப் பாடம் எடுப்பார்.

பேசினால் அழுவார். 'சாகிறேன்' என்று யாராவது சொன்னால் பேடித்தனம் என்பார்.

ஆடை, மீசை ஆகியவற்றின் மீது என் தந்தையார் அதிக அக்கறை காட்டுவது வழக்கம். அவர் அணியும் மேற்சட்டை (Long Coat) அவர் விருப்பப்படி தைக்கப் பட வேண்டும். அவர் விருப்பத்துக்குக் கொஞ்சம் மாறாக இருந்தாலும், தூக்கித் தையற்காரன் முகத்தில் வீசி எறிந்து விடுவார். அவருடைய மீசையை ஒழுங்கு செய் யும்போது சவரத் தொழிலாளி மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவருக்குக் கடுமை யான கோபம் வந்து விடும். மீசை ஒழுங்காக வெட்டி விடப்பட்டிருக்கிறதா என்று கண்ணாடியைக் கையில் வைத்துக் கொண்டு நீண்ட நேரம் பார்ப்பார்.

என் தந்தையார் ஒரு கறவை மாட்டைப் போன்றவர். கறவை மாட்டை எவ்வளவுக்கெவ்வளவு கவனமாகப் பேணுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக அது பால் கொடுக்கும். "அப்பாவிடம் கல்வியும் செல் வமும் சேர்ந்திருக்கிறது. அவரை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று என் தம்பியிடமும், தங்கை களிடமும் நான் அடிக்கடி கூறுவதுண்டு. அவரைச் சரியாகக் கவனிக்கவில்லையென்றால் எழுதமாட்டார்.

●



திருமதி
வசந்தா தண்டபாணி

பாடிப்பறந்த குயில்!

○

மறைமலையடிகளின் மகளார் நீலாம்பிகை அம்மையார் தம் தந்தையைப்போல் எழுத்தாற்றல் பெற்றவர். பாவேந்தரின் புதல்வியருள் எழுத்தாற்றல் வாய்க்கப் பெற்றவர் இவரே!

பாவேந்தரின் வாழ்க்கை வானில் நாள்தோறும் பளிச்சிட்ட வரலாற்று மின்னல்களை, இவர் வரைகோட்டுப் படமாக்கி அடிக்கடி செய்தித்தாள்களில் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார். சுவையான நிகழ்ச்சிகளைத் தெரிந்தெடுத்துச் சுவையாகச் சொல்லும் ஆற்றல் இயல்பாகவே இவரிடம் அமைந்திருக்கிறது. இக்கட்டுரையில் தம் தந்தையாரைப் பற்றிய சில செய்திகளை நினைவுபடுத்திக் கூறியுள்ளார்.

○



நானும் என் தங்கை ரமணியும் பள்ளிச் சிறுமிகளாக இருந்த நேரம். நான் எப்போதும் பள்ளிக்கு ஒழுங்காகச் சென்றுவிடுவேன். தங்கை ரமணி அடிக்கடி பள்ளிக்கு மட்டம் போட்டு விடுவாள். இதையெல்லாம் கவனிப்பதற்கு என் தந்தையாருக்கு நேரமிருக்காது. ஆசிரியர் தொழிலும், அரசியலும். கவிதையும் அவருக்குச் சரியாக இருக்கும்.

ஒருநாள் நான் பள்ளிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். என் தங்கை ரமணி பள்ளிக்குப் புறப்படாமல் முரண்டுபிடித்துக்கொண்டிருந்தாள். தந்தையார் அறைக்குள் உட்கார்ந்து மும்மரமாக எழுதிக்கொண்டிருந்தார். என் தாயார் கூச்சலிடத் தொடங்கினார். "பள்ளிக்குப் போகாம சின்னப்பொண்ணு ஏமாத்திக்கிட்டிருக்கறா. நீங்க அதைப்பத்தி கொஞ்சமாவது அக்கறை எடுத்துக்கறீங்களா...உங்க வேலையுண்டு; நீங்க உண்டுண்ணு இருந்தா பெண்களோட படிப்பு என்னாகறது?" என்று என் தந்தையாரைப் பார்த்து முறையிட்டார் என் தாயார். என் தந்தையார் எதுவும் பேசவில்லை. அமைதியாக எங்களையே பார்த்துக்கொண்டிருந்தார். அவர் முகத்தில் எந்தவிதச் சலனமும் தென்படவில்லை. அவ்வாறு அவர் எங்களையே பார்த்துக்கொண்டிருந்தது எங்கள் உள்ளத்தில் அச்சத்தை ஏற்படுத்தியது. நானும் என் தங்கையும் பள்ளிக்குச் சென்றுவிட்டோம்.

அடுத்தநாள் காலை நாங்கள் பள்ளிக்குப் புறப்பட்டுக்

கொண்டிருந்தபோது, என் தந்தையார் மிகவும் அன்போடு "இந்தாம்மா ரமணி! இங்கவா!" என்று கூப்பிட்டார். நானும் ரமணியும் அவரருகில் சென்றோம். அவர் கையில் ஒருதாள் இருந்தது. அத்தாளில் ஒரு பாடல் எழுதப்பட்டிருந்தது. அப்பாடலை இசையோடு பாடிக்காட்டினர். அப்பாடல் மிகத்தெளிவாகவும், எங்கள் பிஞ்சுள்ளங்களில் பதியும்படியும் எழுதப்பட்டிருந்தது. நாங்கள் மெய்மறந்து எங்கள் தந்தையார் பாடிய பாடலைக் கேட்டுக் கொண்டிருந்தோம். 'தலைவாரிப் பூச்சூடி' என்று தொடங்கும் அப்பாடல் 'தந்தை பெண்ணுக்கு!' என்ற தலைப்பில் இசையமுது முதற்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இப்பாடலில் தாயினுல் அலங்கரிக்கப்பட்டுப் பள்ளிக்கு அனுப்பப்படும் பள்ளிச் சிறுமியின் தோற்றமும், அவள் கண்ணீரும், தந்தையின் அறிவுரையும், கல்வியின் சிறப்பும் மிக அழகாக எடுத்துச் சொல்லப்படுகின்றன. இப்பாடல் திரைப்படப்பாடலாக வந்து தமிழகத்தில் நல்ல விளம்பரத்தைப் பெற்றதோடு, ஒவ்வொரு பெண்கள் ப்ள்ளியிலும் பாடி ஆடி நடிக்கப்படுகிறது.

எங்கள் தாயார் பள்ளி செல்லாமல் பிடிவாதம் செய்த என்தங்கையைப்பற்றி முறையீடு செய்தபோது, தந்தையார் முகத்தில் சலனமேதுமில்லாமல் எங்களைக் கூர்ந்து நோக்கியதன் பொருள் எனக்கு இப்போதுதான் விளங்கியது. மற்ற தந்தையராக இருந்தால் தாயாருடன் சேர்ந்து கொண்டு பிள்ளைகளைத் திட்டித்தீர்த்திருப்பர்! ஏன்? அடித்தும் இருப்பர்! எங்கள் தந்தை பாவேந்தர் அல்லரோ? அவர் சிந்தனை உடனே கவிதையின் பக்கம் திரும்பி விட்டது. வீட்டிலே நடந்த இச்சிறுநிகழ்ச்சி, நாட்டுக்கே பாடமாக விளங்கும் இலக்கியமாக மலர்ந்து விட்டது.

என் தந்தையாருக்குச் சோதிடத்தில் ஈடுபாடு கிடையாது. எனினும் சோதிடம் வல்லார் ஒருவர் அவருக்கு நெருங்கிய நண்பர். அச்சோதிடர் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார் சாப்பாட்டு வேளைக்கு! சோதிடமும் சொல்வார்; உணவுண்டும் செல்வார். கவிஞரைத்தவிர, புதுவையில் உள்ள அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட யாவருக்குமே அவர் சோதிடம் கூறுவதுண்டு.

அவரிடம் கவிஞருக்குப் பிடிக்காத 'அம்சம்' ஒன்று உண்டு! அது 'நீ பயப்படாதே சுப்புரத்தினம்' என்று அவர் சொல்லுவது தான்.

சோதிடர் நெடுநாளைய நண்பர் என்பதோடு, கவிஞரை விட வயதில் மூத்தவர். இவற்றையெல்லாம் கருதி கவிஞர் ஒன்றும் சொல்லாமல் பல்லைக் கடித்துக்கொண்டு இருந்து விடுவார். ஒருநாள் கவிஞருக்குப் பள்ளி விடு முறை. வழக்கப்படி சோதிடப் புலி வந்தது. கவிஞரும் அவரும் ஏதேதோ பேசிக்கொடிருந்தார்கள்.

வழக்கப்படி சோதிட நண்பர் "சுப்புரத்தினம்! நான் ......பிள்ளை வீட்டுக்குப் போனேன். எலக்சியம் (தேர்தல்) சம்பந்தமாகப் பேசிக்கிட்டிருந்தோம்! அவரை எதிர்த்து நிக்கிறவன் சாய்கால் உள்ள ஆளாம்! கொஞ்சம் கவலைப்பட்டார். நான் சொன்னேன். பயப்படாதே! உனக்கு இன்ன ராசியில் இன்னர் இருப்பதால்......!" என்று நிறுத்தினர்.

கவிஞர் எதிர்நோக்கியிருந்த நேரம் வாய்த்து விட்டது. திடுமென்று சாய்வு நாற்காலியை விட்டு எழுந்து விட்டார். "ஏண்ணே(ன்) உனக்குக் கொஞ்சமாவது அறிவு கிறிவு இருக்கா? எவ்வளவு பெரிய ஆள் அவன்! இந்த சோசியத்தை நம்பியா† 'பொலீத்திக்' (அரசியல்) பண்ருன்! நிலைமையை உங்கிட்ட சொன்னுன். அதுக்கு

† எலக்சியம் பொலீத்திக் என்ற இரண்டு சொற்களும் பிரெஞ்சுச் சொற்கள்.

நீ பயப்படாதேன்னு சொன்ஞ என்ஞ அருத்தம்? நீ வந்தா, 'இது இப்படியிருக்கு அப்பா! அதுக்குத் தகுந்த மாதிரி நடந்துக் கோ'ன்னு சொல்லணுமே தவிர, 'நீ பயப்படாதே'ன்னு சொன்ஞ அது தப்பில்லையா? ஒருவன் சோசியத்தை நம்பிப் பயந்து விடுகிருன் என்ருே, துணிச்சலா இருக்கிருன் என்ருே சொன்ஞல் அவனே மடையன் என்றுதா சொல்லணும்'' என்று காட்டமாகத் தாக்கிவிட்டார். வெலவெலத்துப் போய் விட்டார் சோதிடர்.

''சுப்புரத்தினம்! நான் கிழவன்! கோவிச்சுக்கிருதே! நீ சொல்றதும் சரிதான்! எல்லோரும் பயந்துக்கிட்டேயே இருக்காங்க! ஆஞ, உன்னைப்போல இருக்கிறவங்ககிட்ட அப்படிச் சொல்லுவது தப்புதான்!'' என்று அழாக்குறையாகச் சொன்ஞர் சோதிடர்.

''அது இருக்கட்டும் அண்ணே! நீ கையைக் கழுவிக்கிட்டுவா, சாப்பிடலாம்'' என்று சோதிடர் தலையில் 'ஐசை' வைத்தார் கவிஞர்.

எதற்கும், எங்கும்,யார்க்கும் அஞ்சுவது என்பதே அவர் வாழ்க்கையில் இருந்ததில்லை என்பதற்கு இந்நிகழ்ச்சி சரியான சான்று.

❍

1955 ஆம் ஆண்டு புதுவையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை மக்களின் ஆதரவோடு 'மக்கள் முன்னணி', என்ற கூட்டமைப்பு வெற்றி பெற்றது. பல்லாயிரக் கணக்கான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றுக் கவிஞர் சட்டமன்ற உறுப்பினராஞர். மூத்தஉறுப்பினர் என்ற முறையில் இவர் தலைமையில்தான் சட்டமன்ற முதல் கூட்டமே துவங்கப்பட்டது. அத்தேர்தலில் வெற்றி பெற்ற மற்ருேர் உறுப்பினரும் நண்பருமான திருவாளர் உசேன் அவர்கள் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்

திருந்தார். அவ்விருந்துக்குக் கவிஞரும் அழைக்கப் பட்டிருந்தார். எல்லாம் தூய நெய்யால் சமைக்கப் பட்ட உயர்தரப் புலால் உணவுகள்.

கோழி ரோஸ்ட் பரிமாறப்பட்டது. கவிஞர் சுவைத்து உண்டு கொண்டிருந்தார். அளவுக்குமீறி நெய் சேர்க்கப்பட்டிருந்ததால் கவிஞருக்கு உணவு தெவிட்டத் தொடங்கி விட்டது.

விருந்து வைத்தவர் இதைப் பார்த்தார். அருகிலிருந்த ஊறுகாய்த் தட்டத்தைக் கவிஞர் அருகிலே நகர்த்தி வைத்து "முசியே!‡ இந்த ஊறுகாயைக் கொஞ்சம் சாப் பிடுங்கள்; சரியாகி விடும்!" என்றார்.

புளிப்புச் சுவையுள்ள ஊறுகாயைக் கவிஞர் சிறிது வாயில் எடுத்துப் போட்டுக் கொண்டார். சில விநாடிகள் கழித்து மீண்டும் கவிஞர் கோழியைச் சுவைக்கத் தொடங்கினார். திரு. உசேன் இதை மிக மகிழ்ச்சியோடு கண்டு களித்துக் கொண்டிருந்தார்.

கவிஞர் திடீரென்று "அட! கோழியை ஊறுகாய் வாழ வைத்துவிட்டதே!" என்றார். கவிஞர் சொன்ன கருத்தின் பொருள் விளங்காமல் விழித்தார் விருந்து வைத்த நண்பர்.

பாவேந்தர் இயற்கையெய்திப் பல ஆண்டுகள் கழித்து 22-4-68 இல் புதுவையில் நடைபெற்ற பாவேந்தர் நினைவு விழாவில் திருவாளர் உசேன் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார். அப்போது இவ்விருந்து நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து பின் கண்டவாறு கூறினார்.

"பாவேந்தர் கூறிய கருத்தின் பொருள் அன்று எனக்குப்


---

‡முசியே என்பது *Monsieur* என்ற பிரெஞ்சுச் சொல்லின் தமிழ் ஒலிப்பு. 'ஐயா' என்பதே அதன் பொருள்.

புரியவில்லை. சுமார் பத்து ஆண்டுகள் கழித்து இப்போது தான் புரிந்தது. செல்வர்கள் மட்டுமே உண்ணக் கூடிய நெய்யில் பொரித்த கோழிக் கறியைப் பெரும்பாலும் ஏழைகள் மட்டுமே உண்ணக் கூடிய ஊறுகாய் வாழ வைத்து விட்டதே என்றால்—செல்வர்களை ஏழைகளே வாழவைக்கிறார் என்பது அதன் பொருள். இக்கருத்தை விளக்கவே பாவேந்தர் அவ்வாறு கூறினார். உண்ணும் போதும் உறங்கும் போதும் கூட அவர் சம தர்மச் சிந்தனையோடு வாழ்ந்தார் என்பதற்கு இந்நிகழ்ச்சி சிறந்த சான்றாகும்.”

கீர்த்திகொள் போகப் பொருட்புவியே! உன்றன்
கீழிருக்கும் கடைக்கால்—எங்கள்
சீர்த்தொழி லாளர் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்!

●



திரு. மன்னர் மன்னன்

அச்சம்

—அவர் அறியாதது

○

இவர் பாவேந்தர் என்ற இலக்கியப் பேராற்றின் வடிகால்; புரட்சித்தென்றலில் பூத்த இளவேனில்; தேன் கவிதை தீட்டிய கனக சுப்புரத்தினத்தின் ஆண் கவிதை!

இவர் கவிதை மொழியான ஃபிரெஞ்சையும், கரும்பு மொழியான தமிழையும், கற்றுத்தெளிந்தவர். இவருக்கு பால்ஸாக்கையும் பிடிக்கும்; பரணரையும் பிடிக்கும்.

பாவேந்தர் தம் வாழ்க்கையில் காதலோடு தொகுத்த பாட்டுக் குறுந்தொகையான இவர், இன்று பாவேந்தரின் வாழ்க்கை வரலாற்றையும் படைப்புகளையும் தொகுத்துக் கொண்டிருக்கிறார்.

நான்கைந்து முத்துக்களைக் கோத்துக் கோத்துப் பாவேந்தர் நளினமாக எழுதிய உரைநடை, இவர் கையிலும் கொஞ்சி விளையாடுகிறது.

அச்சத்தை அறியாத பாவேந்தர் மாலையில், இக் கட்டுரை மணமிக்க ஒரு பிச்சிப்பூ!

○



நான்கு வயதுக் குழந்தையாக நானிருந்த போது, ''நீ சாமிக்குப் பயப்படுவாயா? எனக்குப் பயப்படுவாயா?'' என்று ஒரு பையன் என்னைக் கேட்டான். அதை நான் என் தந்தையாரிடம் சொன்னேன். உடனே ''எவனுக்கும் நான் பயப்பட மாட்டேன்'' என்று விடையிறுக்கச் சொல்லி எனக்கு மனவலிமை அளித்தவர் கவிஞர். நெஞ்சுரமிக்க அவரை நினைக்கும்போதெல்லாம் அவரின் எழுத்தாற்றலுக்கு வித்தாக அமைந்த நிகழ்ச்சிகள் இன்றும் என்னுள்ளத்தில் படமாடிக் கொண்டிருக்கின்றன.

○

தம் இளமைப்பருவ நண்பர்களைக் கண்டாலே கவிஞருக்கு எப்போதும் அளவிலா மகிழ்ச்சி. புதுவையில் நீண்ட காலத்துக்கு முன் வேலை நிமித்தமாகப் பிரிந்து விட்ட அரங்கநாதனை மீண்டும் நெட்டப்பாக்கம் சிற்றூரில் சந்தித்த போது துள்ளிக் குதித்தார் கவிஞர். அரங்கநாதன் இளைஞராக இருந்தபோது நாடகங்களில் அனுமன் வேடம் ஏற்பது வழக்கம். அதனால் 'குரங்கு ரங்கநாதன்' என்று நண்பர்களால் அவர் அன்புடன் அழைக்கப்பட்டார். இவ்வடைமொழிக்கு வேறு ஒரு காரணமும் உண்டு. கவிஞர் தம் குழாத்துடன் சிறுவயதில் செய்த துடுக்குத் தனங்களில் இந்தஅரங்கநாதனுக்கும் முக்கியப் பங்குண்டு.

நெட்டப்பாக்கத்தில் வருவாய்த் துறையைச் சார்ந்த கணக்குப் பிள்ளையாக அரங்கநாதன் வேலைபார்க்கும் சமயம், தமிழாசிரியராக வந்து சேர்ந்தார் கவிஞர். நாங்கள் அரங்கநாதனை மாமா என்றும், அவரின் துணைவியாரை அத்தை என்றும் அன்புடன் அழைப்போம். அந்த அம்மையாரின் பெயரும் சுப்புரத்தினம். மிக நெருக்கமாக அவர்களோடு எங்கள் குடும்பம் பழகிக் கொண்டிருந்தது. மாலைவேளையில், அரங்கநாதன் வீட்டுத் திண்ணையில் அரசு அலுவலர் உட்படக் கவிஞர் குழாம் சீட்டு ஆடுவது வழக்கம். புள்ளி ஒன்றுக்கு ஒரு தம்பிடி. கவிஞர் நன்குகவே சீட்டு ஆடுவார்; தம்பிடிக் காசாகவே ஒரு சிறு மூட்டை கட்டிக் கொண்டு வீடுவந்து சேருவார்.

ஒரு விடுமுறைநாள்— எல்லாரும் பிற்பகலிலேயே கூடி விட்டார்கள். மாலை மயங்கிப் பொழுது இருட்டத் தொடங்கிய நேரம். சுறுசுறுப்பாகச் சீட்டாட்டம் நடந்து கொண்டிருந்தது.

'"ஐயோ!' என்று குரல் எழுப்பி, மேலே எழும்பிக் குதித்தார் அரங்கநாதன். 'அங்க பாரு'...சுப்பு...பா...பா...!" என்று குழறினர். அவர் வாயிலிருந்து சொற்களே வெளி வரவில்லை. கவிஞர் திண்ணையிலிருந்து எட்டி உயரப் பார்த்தார். திண்ணையோரத்தில் சாய்ந்திருந்த பூவரச மரக்கிளையில் பச்சைப்பாம்பு ஒன்று நழுவிக் கொண்டிருந்தது.

பச்சைப்பாம்பைக் கண்டு அச்சமேலீட்டால், எழும்பிக் குதித்த அரங்நாதனை நோக்கிக் கவிஞர் "அந்தக்கால நாடகத்திலே கடலைத் தாண்டிக்குதிக்கறதா பச்சையா புளுகிப் பாடுவ. இப்ப, பச்சைப்பாம்பைப் பாத்துட்டு, எம்பிக்குதிக்கிறியே...சரியான அனுமாரப்பா நீ!'' என்று சொல்லிவிட்டுக் கலகல என்று நகைத்தார்.

அரங்கநாதனுக்குப் பழைய நினைவுகள் பளிச்சிட்டன. ''கணக்குப் பிள்ளையான எனக்கு இளம்பிராயத்திலே இருந்ததும் அச்சம்; இப்போதும் அச்சந்தான்! கவிஞ

ஞ்ன உனக்கு இளம் வயதிலிருந்தே அச்சம் என்பது இன்னதென்று தெரியாமல் போய் விட்டது,'' என்று கூறினார் அரங்கநாதன்.

○

'அச்சந்தவிர்' என்றார் பாரதி. 'அச்சத்தின் வேர் மடமை' என்றார் பாவேந்தர். பாடல்களில் மட்டுமல்லர்; வாழ்க்கையிலும் அச்சத்தை அறியாதவர் என்பதற்குப் பல சான்றுகள் உள. ஒரு நிகழ்ச்சி. பாவேந்தரே கூறுகிறார். கேளுங்கள்:

"புதுவையில் அடைக்கலமாகியிருந்த பாரதியார் குழாத்துக்கு அயல் நாடுகளிலிருந்து அடிக்கடி செய்திகள் வரும். என் மூலமாகத்தான் புரட்சி வீரர்க்குத் தகவல் போய்ச் சேரும். இதைப்பற்றி அன்றைய ஆங்கிலத் துப்பறிவாளர்க்கும் தெரியும். வந்த தகவல் என்ன என்பதை அறிந்துகொள்ளத் துடிப்பார்கள். அவர்களை மடக்கி அனுப்புவதுதான் எங்களுக்குப் பெரிய பொறுப்பாக இருந்தது.

மாடசாமி புதுவையில் தங்கியிருந்ததை அறிந்து கொண்டு துப்பறிவாளர்கள் புதுவையில் மொய்த்தார்கள். மாடசாமியைப் புதுவையிலிருந்து அயல் நாட்டுக்கு அனுப்பி விடுவது என்று முடிவு எடுத்தாகி விட்டது. ஆனால் அதுவரைக்கும் மாடசாமியைக் காப்பாற்றியாக வேண்டுமே!

மயூரேசன் என்பவர் அன்றைய வால்காட் கம்பெனியில் வேலை செய்தவர். ஆங்கிலத் துப்புத் துலக்கிகளுக்கு அவர் உளவு சொல்லிக்கொண்டிருந்தார். இந்த மயூரேசன் அரவிந்தர் வீட்டிலிருந்த புரட்சிக் கருத்துக்கள் அடங்கிய ஐந்து நூல்களை எப்படியோ களவாடிச் சென்று விட்டார். இந்த்விபரம் எனக்குத் தெரியும். ஒருநாள் நடராஜாச்சாரியின் நாடகம் பார்த்துவிட்டுத் திரும்பிய அரங்கநாதனும், நானும் சற்றும் எதிர்பாராமல் மயூரேசன் வீட்டில்

எட்டிப் பார்த்த போது அரவிந்தர் வீட்டிலிருந்து களவா டப்பட்ட புத்தகங்களும், பக்கத்தில் ஒரு கைத்துப்பாக்கி யும் இருக்கக் கண்டு, பளிச்செனத் தோன்றிய ஒரு தந் திரமாக, அவற்றை எடுத்துக் கொண்டு வந்து விட் டோம். மறுநாள் மாடசாமியிடம் அந்தத் துப்பாக்கி யைத் தந்து ஈஸ்வரன் தருமராஜா கோவில் தெருவி லிருக்கும் பாரதி வீட்டுக்குச் சென்றோம். துப்பறிவோரும் மயூரேசனும் தொடர்வது தெரிந்தது. எதிரிலிருந்த காமாட்சியம்மன் கோவிலில் புகுந்து அதற்கருகிலிருந்த ஒரு வீட்டில் மாடசாமியை ஒளித்துவிட்டேன். மீண்டும் காமாட்சியம்மன் கோவில் உட்புறம் நுழைந்து சுற்று மதிற்சுவர்மீது ஏறிப்பக்கத்தில் உள்ள தெருவில் குதித்து விட நினைத்தேன். கோவிலுக்குள்ளே வந்து விட்டான் மயூரேசன்.

கண் இமைக்கும் நேரம். மிகஉயர்ந்த மதிற்சுவரினின்று கீழே குதித்தேன். ஓட்டமாக ஓடிப் பாரதி வீட்டிற்குள் புகுந்தேன். வெகுநேரங் கழித்து மாடசாமியை மீட்டு வீடுவந்து சேர்ந்தேன்.

மறுநாள் பாரதி என்னைப் பார்த்து, "மீண்டும் இந்த உயரத்திலிருந்து உன்னால் குதிக்க முடியுமா? உனக்குள் கனன்று கொண்டிருந்த புரட்சி எண்ணம் உன் காலுக்கு வலிமையூட்டியுள்ளது!" என்று! கூறினார்.

O

மக்கள் நலனுக்கான கிளர்ச்சிகளை வெற்றிகரமாக நடத்துவதில் பாவேந்தர் மிகவும் துணிச்சலானவர்; எத் தகைய எதிர்ப்புக்கும் அஞ்சாதவர். இது தொடர்பாக ஒரு நிகழ்ச்சி என் நினைவிற்கு வருகிறது. தேவிகுளம் பீர்மேட்டைத் தமிழகத்தோடு இணைக்கவேண்டும் என் பதற்காக ஒரு கடையடைப்புப் போராட்டத்தைப் பாவேந்தர் புதுவையில் நடத்தினார். புதுவையில் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றுபடுத்திக் கிளர்ச்சி

அமைதியானமுறையில் நடைபெறத் திட்டம் வகுத்திருந்தார். அவரே வீதி வீதியாய்ச் சென்று ஏற்பாடுகளைக் கவனித்தார்.

"ஊர்வலம் செல்வதற்குப் போலீஸ்
வழங்கிய ஆணையில் சில வீதிகளைக்
குறிப்பிட்டு இருக்கிறார்கள் அந்த
வீதிகளில்தான் போக வேண்டும்."

—காவல் துறை அதிகாரி இப்படி எச்சரித்தார்.

"அப்படியே செய்வோம்" என்று கூறிவிட்டு ஒரு சிற்றுண்டி விடுதி நோக்கிச் சென்றார் பாவேந்தர்.

"நீங்கள் விதிமுறையை மீறி இப்போது போகிறீர்கள்," என்று மறுபடியும் சற்றுக் கண்டிப்பாகக் கூறிய அதிகாரி, தந்தையாரின் எதிரில் போய் நின்றார்.

பாவேந்தர் சொன்னார்: நான் வீதியில் நடக்கவும் கூடாதா?

அதிகாரி: நீங்கள் நடக்கிறீர்கள்...உங்களின் பின்னால் சில ஆயிரம்பேர் வருகிறார்களே?

பாவேந்தர்: அதற்கு நானென்ன செய்வது?

அதிகாரி: இது ஓர் ஊர்வலமாகிவிட்டது என்கிறேன் நான்.

பாவேந்தர்: ஊரிலிருக்கின்ற அத்தனை கடைகளும், நிறுவனங்களும் சாத்தப்பட்டிருக்கையில் ஒரே ஓர் ஓட்டல் மட்டும் திறந்திருப்பதைப் பார்க்க வருகிறார்கள் மக்கள்...

அதிகாரி: நீங்கள் இந்தப் பகுதியிலிருந்து போய் விட்டால் மக்கள் கூட்டம் கலைந்து போய்விடும்.

பாவேந்தர்: நான் ஒன்று சொல்கிறேன்...இந்த ஒரே ஒரு கடையும் மூடப்பட்டு விட்டால் மக்கள் கூட்டம் கலைந்துவிடும்.

அதிகாரி: கடையைத் திறந்து வைத்திருப்பது தனி யொருவரின் விருப்பம்.

பாவேந்தர்: அப்படியானல் தெருவில் நடப்பதும் தனியொருவரின் விருப்பம்.

காவல்துறை அதிகாரியுடன் கவிஞர் ஏதோ காரசார மாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்ட மக்கள், ஏதோ நடக்கப் போகிறது என்று கருதி இவர்களைச் சூழ்கிறார் கள்.

காவல் அதிகாரி ● இவரிடம் முறையின்றிப் பேச்சுக் கொடுத்துவிட்டதை உணர்கிறார். கவிஞர்பால் அந்த அதிகாரிக்கு ஈடுபாடு உண்டு. ஆனால் அவருக்கு இடப் பட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டுமே!

அவர் இதை யோசித்துக் கொண்டிருக்கையில், ''ஏம்பா...'' என்ற இடிக்குரலை எழுப்பிச் சிற்றுண்டி விடுதியில் நுழைகிறார் பாவேந்தர்.

கடை உரிமையாளர் கவிஞரின் நண்பர்தான்.

அவர் கேட்கிறார்: ''நான் கடையை மூடி விட்டால்... தேவிகுளம் பீர்மேடு பகுதியைத் தமிழ்நாட்டுடன் சேர்த்து விடுமா அரசாங்கம்? சொல்லேன் சுப்பு!''

பாவேந்தருக்குச் சினம் பொங்கிவிட்டது.

அடாவடிப் பேச்சன்றோ இது?

''நீயா சாத்தினு கிடைக்காது, நாங்க கேட்கிற உரிமை!

நான் சாத்திடு கிடைச்சிடும்! வீண்வம்பை வளர்க்கா தீங்க!'' என்று எச்சரிக்கை விடுத்தார் பாவேந்தர்.

கடை சாத்தப்பட்டுவிட்டது. மறுநொடியில் வெளியில் காத்திருந்த மக்கள், ஊரில் வேறு எங்காவது கடை திறந்து வைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிந்துவரக் கலைந்து சென்று விட்டனர்.

ஒரு சிறிய வெற்றிலை பாக்குக் கடையும் இல்லை...... மக்கள்நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தன வீதி கள்.

கடைகளைத் திறக்காவிட்டால் கடும் விளைவு ஏற்படும் என்று எச்சரித்து இரவோடு இரவாகக் கலகக்காரர் கள் சிலரை மாற்றுக் கட்சியினர் அமர்த்தியிருந் தனர்.

ஒருசிறிய கலகக் குறியும் இல்லாமல் கிளர்ச்சி நடை பெற வேண்டும் என்ற திட்டத்தில் இறங்கினர் பாவேந்தர்; அவ்வாறே நடைபெற்றது! "உரிமைக்குப் போராடுகின்றவர்கள், ஊர் அமைதியைக் குலைப்பதைத் தவிர்க்க வேண்டும்; ஒன்றுபட்டுக் குரல் எழுப்ப வேண் டும்; அது பொது நலனுக்காக மட்டுமே அமைய வேண் டும்'' என்பார் தந்தையார். அவர்படைத்த குடும்ப விளக்கு கூறுகிறது.


தலைவன் தலைவியர்கள்
 தங்கள் குடும்ப
அலைநீங் கியபின்—
 அயலார —நிலைதன்னை

நாடலாம் என்னுமல்
 நானிலத்தின் நன்மைக்குப்
பாடு படவேண்டும்
 எப்போதும் —நாடோ

ஒருதீமை கண்டால்
ஒதுங்கிநிற்றல் தீமை
...... ......
...... — இழுக்கொன்று

காணில் நமக்கென்ன
என்றுமல் கண்டஅதன்
ஆணிவேர் கல்லி
அழகுலகைப் — பேணுவதில்

நேருற்ற துன்பமெலாம்
இன்பம்! ....



முத்தமிழ்க் காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம்

பாவேந்தர் பற்றி...!

○

தமிழே பேச்சாகவும் மூச்சாகவும் கொண்டு வாழும் தமிழ்ப்பழம் முத்தமிழ்க் காவலர். சுரைக்கொடி கூரை யெல்லாம் ஓடிப்படர்ந்தாலும், அதன் வேர் நிலத்தில் இருப்பதைப் போல அரசியல் பொருளியல் சமூக வியல்களில் இவருடைய சிந்தனைகள் ஓடிப் படர்ந் தாலும் வேர் தமிழ் நிலத்தில் தான்!

'தமிழுக்காக எதையும் விட்டுக் கொடுக்கத் தயங்காத வர்!' என்ற பிடிவாத உணர்வே, இவருக்குப் பெருமை சேர்த்த அரசியல். வாழும் பெரியார்.

'எனது முதற்கவிதைத் தொகுப்புக்கு எத்தனையோ பேர் முன்னுரை வழங்கியிருக்கிறார்கள். அவற்றுள் கி. ஆ. பெ. கொடுத்தது தான் முன்னுரை' என்றார் பாவேந்தர். எனவே முன்னுரைக்கு மதிப்புரை பெற்ற தமிழறிஞர் இவர்.

'நான் பாரதிதாசன் கவிதைகளைக் கதைக்காக ஒரு முறை, கவிதைக்காக ஒருமுறை, கருத்துக்காக ஒரு முறை, கொள்கைக்காக ஒருமுறை, உணர்ச்சிக்காக ஒருமுறை, இனிமைக்காக ஒரு முறை, எழிலுக்காக ஒருமுறை படித்தேன். ஒவ்வொரு கவிதையும் ஒரு படித் தேன்!' என்று பாவேந்தர் எழுத்தைப் பழச் சாற்று வரிகளால் பாராட்டும் இவர், அவரைப்பற்றிய நினைவுகளை இக்கட்டுரையில் நிறுத்தியிருக்கிறார்.

○



ஐம்பது ஆண்டுகட்கு முன்பு ஈரோட்டிலே பெரியார் குடியரசுப் பத்திரிகையைத் தொடங்கி நடத்தி வந்தார். அப்பத்திரிகையில் மாதம் பதினைந்து ரூபாய் சம்பளத்தில் கல்கி கிருஷ்ணமூர்த்தி அச்சுத் திருத்தராகப் (Proof reader) பணிபுரிந்து வந்தார். சென்னை எஸ்.எஸ். வாசன் குடியரசுப் பத்திரிகையின் விளம்பர முகவராக (Publicity Agent) இருந்தார். நான் சுயமரியாதை இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தேன். பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பும்பாடல்களுக்கு முதன்மை கொடுத்துக் குடியரசில் அடிக்கடி வெளியிட்டு வந்தோம். பாவேந்தர் பாரதிதாசன் அப்போது அடிக்கடி ஈரோடு குடியரசு அலுவலகத்துக்கு வருவார்.

'பாரதிதாசன் கவிதைகள்' எனும் பெயரால் அவரது கவிதைகளிற் சிலவற்றைத் திரட்டி வெளியிடும் முதல் முயற்சியில் பங்கு பெற்றவன் நான் என எண்ணும் பொழுது என் உள்ளம் மகிழ்ச்சி அடைகின்றது. அதைவிட அதிக மகிழ்ச்சி உண்டாகிறது, அம் முதல் நூலுக்கு முன்னுரை வழங்கியதை எண்ணும்பொழுது. 'கதைக்காக ஒருமுறை, கவிதைக்காக ஒரு முறை, கருத்திற்காக ஒரு முறை, கொள்கைக்காக ஒருமுறை, உணர்ச்சிக்காக ஒரு முறை, இனிமைக்காக ஒருமுறை, எழிலுக்காக ஒருமுறை படித்தேன். ஒவ்வொருமுறையும், ஒவ்வொரு கவிதையும் ஒரு படித் தேனாகவே ருசித்தது' என்பதே அம்முன்னுரை. இந்நூல் நாட்டில் நல்ல பயனை விளைவித்தது.

29-7-46 இல் நானும், அன்பர் திரு. சி.என்.அண்ணாத் துரை அவர்களும் சேர்ந்து நாவலர் சோமசுந்தர பாரதி யார் தலைமையில் சென்னைப் பச்சையப்பர் பள்ளித் திட லில் பாவேந்தருக்கு ரூ.25,000 கொண்ட பொற்கிழி வழங்கினோம். பாவேந்தர் முன் கோபக்காரர். அதனால் பலரைப் பகைத்துக் கொண்டார் 'தமிழியக்கம் பாடி விட்டுத் திராவிட இயக்கப் பாடல்கள் ஏன் எழுதினீர்?' என்று நான் கேட்டேன். அதனால் என்மீதும் அவருக் குக் கோபம்.

1952ஆம் ஆண்டு அவருக்கு மணிவிழா எடுப்பதற்காகத் திருச்சியில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அமைப்புக் குழு வின் பொறுப்பாளராக நான் இருக்கவேண்டும் என்று கவிஞர் விரும்பினார். திருவாளர்கள் மதுரை முத்து, அன் பில் தர்மலிங்கம், புத்தனேரி சுப்பிரமணியம், திருலோக சீதாராம், நாகசுந்தரம், அரு. ராமநாதன் முதலியோர் அக்குழுவில் உறுப்பினர்களாக இருந்தனர். இம்மணி விழா அமைப்புக் குழுவின் செயலாளனாகவும், பொரு ளாளனாகவும் நானே பொறுப்பேற்றேன். உள்நாட்டி லும், இலங்கை, மலேயா முதலிய வெளிநாடுகளிலும் நிதி வசூலத்தொடங்கினேன். விழாவிற்கு நாளும் குறிப் பிட்டாகி விட்டது. திருச்சியில் நாங்கள் மணிவிழாஎடுக்க முடிவு செய்திருந்த அதே நாளில், நடிகர் யதார்த்தம் பொன்னுசாமி என்பவர், தஞ்சையில் பாவேந்தருக்கு மணிவிழா எடுக்கப் போவதாகச் செய்தி விளம்பரப் படுத் தப்பட்டிருந்தது. இச்செய்தியைப் பார்த்ததும் எனக்குப் பெரிய குழப்பமாக இருந்தது. உடனே புதுவை சென்று பாவேந்தரை நேரில் கண்டு இதைப்பற்றி அறிந்துவரச் சொன்னேன். அவர் சரியாகப் பதில் சொல்லவில்லை. அவர் ஏமாற்றப்பட்டிருக்கிறார் என்று தெரிந்தது. நான் விழாக்குழுவிலிருந்தே ஒதுங்கிக்கொண்டேன்.

திருச்சியில் ஒரு வாரம் பாவேந்தர் விழாவை நடந்த விழாக்குழுவினரால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நாடகங்கள் நடத்தி ஓரிலக்கம் ரூபாய் திரட்டி அவருக்கு

மணிவிழாவில் நன்கொடை வழங்கப்போவதாக அவரிடம் கூறியிருந்தார்கள். ஆனால் அவ்விழா திட்டமிட்டபடி நடைபெறவில்லை. நாடகம் நடத்தியவர்களுக்கும் இவருக்கும் மனக்கசப்புஏற்பட்டது. பாவேந்தர் கோபித்துக்கொண்டு திருச்சிக்கு அருகிலுள்ள திருவானைக் காவலுக்குச் சென்று அங்கு தங்கியிருந்தார். நாடகம் நடத்தியவர்களுக்கும் இவருக்கும் பண விஷயத்தில் தகராறு. இதை நடுவிலிருந்து சில நண்பர்கள் தீர்த்துவைக்க முயற்சி செய்தனர். முடியவில்லை. கடைசியில் நாடகம் நடத்தியவர்கள் ஏதும் தரவில்லை. நான் வசூலித்த ரூ. 1500ஐயும் விழாக்குழுவினர் கையில் கொடுத்தேன். மணிவிழா மிகச்சுருக்கமான அளவில் திருவானைக்காவல் சத்திரத்தில் நடத்த ஏற்பாடு செய்தார்கள். நான்வந்து பொன்னாடை போர்த்தவேண்டும் என்று விரும்பிப் பாவேந்தர் சொல்லியனுப்பினார். நான் மறுத்து விட்டேன். 'புலமை வேறு; உலகியல் அறிவு வேறு' என்பதற்கு இம் மணிவிழா நிகழ்ச்சி சிறந்த எடுத்துக்காட்டு.

தமிழகப் புலவர் குழுவின் இரண்டாவது கூட்டத்தைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் நடத்தினேன். புலவர் பெருமக்கள் நாற்பத்தெண்மரும் தேரேறி ஊர்வலம் வர, கூட்டத்தலைவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் யானை மீது அமர்ந்து தஞ்சை அரச வீதிகளில் உலா வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சி! தஞ்சை நகரமே விழாக்கோலம் கொண்டிருந்தது. வழிநெடுகத் தண்ணீர்ப்பந்தல்! வாழையும் கமுகும் நாட்டப்பட்ட அலங்காரப் பந்தல்! மக்கள் பூவும் கற்கண்டும் வாரி இறைத்தனர். திலகர் திடலில் விழா நடைபெற்றது. இனி அக் காட்சியை......?

பாரதிதாசன் தோற்றமே தமிழனின் தோற்றம். அவரது வீரம் தமிழனின் வீரம். அவரது உடம்பில் ஓடிய இரத்தமும் தமிழ் இரத்தம். அவரது உணர்ச்சி தமிழுணர்ச்சி. சுருக்கமாகக் கூறவேண்டுமானால் அவர் மூச்செல்லாம் தமிழ் மூச்சு எனக் கூறிவிடலாம். இவையனைத்தும்

நிறைந்த கவியே புதுவைக் கவி! அன்று புதுமைக் கவி! நேற்று முதுமைக் கவி! இன்று......?


தமிழகத்தின் மண்ணுக்கே ஒரு தனி வீரத்தைக் கற்பித்த வர் பாரதிதாசன் அவர்கள். 'கோழியும் தன் குஞ்சு தனைக் கொல்லவரும் வான்பருந்தைச் சூழ்ந்தெதிர்க்க அஞ்சாத தொல்புவி' என்பது அவரது கவிதை. 'உயிரி னும் சிறந்தது தமிழ்' என்பது அவரது கொள்கை.

தமிழ் தோன்றிய காலந்தொட்டு எத்தனையோ தமிழ்ப் புலவர்கள் இத் தமிழ் மண்ணில் தோன்றியிருக்கிறார்கள். ஆனால், 'தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்' என்று கூறிய புரட்சிச் சொற்களைப் புரட்சிக் கவிஞரிடம் தான் கேட்டேன். இம்மண்ணில் இவர் போன்ற புலவர்கள் பலர் இனித்தோன்ற வேண்டும் என்பது என் விருப்பம்.

பாரதிதாசனை ஒரு தமிழ் மன்னன் எனலாம். இத்தகைய மன்னனை இந்தத் தமிழகம் வாழ்ந்தபோதும் சரியாக அறிந்து போற்றவில்லை; மறைந்தபோதும் சரியாக உணர்ந்துவருந்தவில்லை. இரண்டோர் இரங்கற் செய்தி களோடு அவரது வரலாற்றை முடித்துவிட்டது. இறந்த வர்கள் மீது கவிபாடி வெளியிடுவதற்காகவே சில பத்திரி கைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இறந்தவர் களுக்கு இரங்கற் செய்திகளைச் சொல்வதற்கென்றே சில பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்நிலைகள் திருந்திப் புலவர்கள் வாழும் காலத்திலேயே அவர்களை வாழ்த்த—போற்றத் தொடங்கிவிட்டால் தமிழகம்...?

பாவேந்தர் தமிழுக்குத் தொண்டர்! தமிழர்க்கு அன்பர்! புலவர்க்கு நண்பர்! புலவர் குழுவிற்குத் துணைவர்! கவி ஞர்களுக்கு வழிகாட்டி! புரட்சிக் கவிஞர்களுக்குத் தந்தை! சீர்திருத்த வாதிகளுக்குத் தலைவர்! தமிழ்ப் பகைவர் முன்னே தோள்தட்டித் தொடைதட்டி நிற்போ ரெல்லாரும் அவர் உறவினர்.

●



பேராசிரியர்
மயிலை. சிவமுத்து

# நான் அறிந்த பாரதிதாசனார்

○

தமிழ்நாட்டில் 'தமிழ்த்தாத்தா' என்ற முதிர்ந்த பட்டத்துக்கு உரியவர் இருவர். ஒருவர் டாக்டர் உ.வே.சா;. மற்ருெருவர் பேராசிரியர் மயிலை. சிவ முத்து.

பாவேந்தர் தமிழர்க்குச் சொத்துப்பாடல் இயற்றியவர்; இவர் முத்துப்பாடல் இயற்றியவர்.

தமிழுக்கு வாழ்ந்தவர்; இந்தியை எதிர்த்தவர்; தமிழாசிரியர் பணிக்குப் பெருமை சேர்த்தவர்; தள்ளாடும் பருவத்தில் தமிழால் நடந்தவர்.

தமிழே சிவம்! சிவமே தமிழ்!

பாவேந்தர் பற்றிய தம் பழுத்த அனுபவங்களை இக் கட்டுரை மூலம் நம் சிந்தனைக்கு விருந்தாக்கியிருக்கிருர்.

○



“முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்,
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்,
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்,
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்”

என்று நாவுக்கரசர் நவின்ற தாண்டக அடிகளுக்கு ஏற்ப நான் முதன்முதலில் பாரதிதாசனார் தம் புதுமைப் பாடல்களைத் தான் படித்துப் பார்க்க நேர்ந்தது. நான் அவரைப் பாராமலேயே அந்தப் பாவேந்தர் மீது பேரன்பு கொள்ளலாயினேன். ஏறத்தாழ இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பு என்று நான் எண்ணுகின்றேன். அப்போது அறிஞர் குத்தூசி குருசாமியார் திருவல்லிக்கேணியிலே ஒரு சுவடியை வைத்துக்கொண்டு அச்சுப்பிழைபார்த்துக் கொண்டிருந்தார். அதிலுள்ள யாவும் பாடல்களாகவே இருந்தன. ‘அவை என்ன பாடல்கள்?’ என்று நான் அந்த அறிஞரை வினவினேன். அவர் உடனே பிழை திருத்துவதை நிறுத்திக் கொண்டு அதை என்னிடம் கொடுத்தார். அதிலுள்ள பாடல்கள் தமிழைக் குறித்தனவாகவும் சீர்திருத்தக் கருத்துக்கள் கொண்டனவாகவும் இயற்கைக் காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டுவனவாகவும் கலந்திருந்தன. நான் அந்த அற்புதப்பாடல்களைப் படித்துப் பார்த்து விட்டு இவை பாரதியார் பாடல்களையும் விஞ்சியனவாக இருக்கின்றனவே! இவைகளைப் பாடியவர்’ யாவர்? என வினவினேன். அப்போது அவர் ‘‘இந்தப் பாடல்களைப் பாடியவர் பாரதியாரின் மாண

வரேஆவர். கனக சுப்புரத்தினம் என்பது அவர் தம் இயற்பெயர். பாரதிதாசர் என்னும் புனைபெயரால் இவை களை அவர் பாடியிருக்கிருர். இன்னும் இரண்டொரு நாளில் சுவடியாக வந்துவிடும்,''என்று அவர் கூறினர்.

இந்தி எதிர்ப்புக் காலத்தில் அந்தப் புரட்சிப் பாடல்களே எங்களுக்குப் பெரிதும் உதவின. 1937—இல் ஸ்டாலின் ஜெகதீசன் கட்டாய இந்தி ஒழியவேண்டும் என்று உண்ணுவிரதம் இருந்து வந்தார். அவருடைய உண்ணு விரதம் முதலில் சி.டி.நாயகம் அவர்கள் தம் இல்லத்தில் தான் துவங்கியது. முதலில் ஒரு சில நாட்களேனும் அவர் உண்ணுவிரதம் இருந்திருக்கலாம். அப்போது சில அன்பர்கள் இந்தி எதிர்ப்புக்காக ஸ்டாலின் ஜெகதீசன் உண்ணுவிரதம் இருந்து வருதலைத் தெரி வித்துச் சிவஞானம் பூங்காவில் ஒரு கூட்டம் போட வேண்டும் என்றும், அதற்கு வேண்டிய அறிக்கையினைத் தாங்கள் அச்சடித்துக் கொடுப்பதாகவும் கூறினர்கள். அதற்கு இரண்டொரு வாரத்திற்கு முன்பு ஈ.வெ.ரா. பெரியார் கட்டாய இந்தியைக் கண்டித்து எழுதியதோடு ''கூட்டம் போட்டு இதைக்கண்டிப்பதற்கு எந்தப்புல வனும் முன் வரவில்லையே!'' என்றும் மனம் வருந்தி எழுதியிருந்தார். அந்தக் கட்டுரை என்னுள்ளத்தைப் பெரிதும் கவர்ந்ததால் சிவஞானம் பூங்காவில் ஒரு கூட்டம் போட்டுக் கண்டிப்பதாக ஒப்புக் கொண்டேன்.

அப்போது தியாகராய நகரிலுள்ள இராஜாஜி வீட்டு வாயிலில் சில தமிழ் அன்பர்கள் மறியல் செய்தனர். அந்த மறியலைக் கண்ட இராஜாஜி அவர்கள், "இந்தி மொழியை எங்கே கற்பிக்கின்றுர்களோ அங்கே சென்று மறியல் செய்யுங்கள். என் வீட்டு வாயிலில் மறியல் செய்வது சிறிதும் பொருந்தாது," என்று கூறினர். அப் போது இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளியில் கட்டாய இந்தி வகுப்பு, ஒரு முன் மாதிரியாக நடந்து வந்ததால் அங்கே ஊர்வலமாகச் சென்று அந்தப்பள்ளி யின் வாயிலிலேயே மறியல் செய்ய வேண்டும் என்னும்

தீர்மானம் ஒன்றை எழுதிச் சிவஞானம் பூங்காவில் நடந்த பொதுக் கூட்டத்தில் கொண்டு வருவதற்காக அன்று தலைமைதாங்கிய பேராசிரியர் மோசூர்கந்தசாமி முதலியாரிடம் காட்டினேன். அவர் நீங்கள் முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக இருப்ப தால் இராசகோபாலாச்சாரியார் உங்கட்குப் பலவிதத் திலும் தொல்லை தருவார், 'நான் பச்சையப்பன் கல்லூரி யில் தமிழ்ப் பேராசிரியஞக இருப்பதால் என்னை அவ ரால் ஒன்றும் செய்ய இயலாது 'என்று கூறித்தாமே அதில் கையெழுத்திட்டு அந்தத் தீர்மானத்தை ஒருமன தாக நிறைவேற்றிஞர். அப்போது சி. டி. நாயகம் ஸ்டாலின் ஜெகதீசன், அறிஞர் அண்ணு, சுவாமி அருணகிரிநாதர், முதலிய பலரும் இருந்தனர். அண்ணு அவர்களும், சுவாமி அருணகிரிநாதர் அவர்களும் மிக வும் வன்மையாகக் கண்டித்துப் பேசினர். அதன் காரண மாகத்தான் அண்ணு அவர்களும், சுவாமி அருணகிரி நாதரும் முதன்முதலில் சிறை புக நேர்ந்தது.

பிறகு தொடர்ந்து வாரந்தோறும் காசி விஸ்வநாதர் ஆலயத்திலிருந்து ஒரு பெரிய ஊர்வலம் புறப்பட ஆரம் பித்தது. அந்த ஊர்வலங்களை எல்லாம் நானே மறை முகமாக இருந்து நடத்தி வந்திருக்கின்றேன். அவ்விதம் நான் மறைமுகமாக இருந்து நடத்தி வரவேண்டும் என்று என்மீது பேரன்பு வைத்திருந்த என் மாணவர் களும் நண்பர்களுமே கேட்டுக் கொண்டனர். ஆதலால், அந்த ஊர்வலங்களில் இறுதியில் நான் நடந்து வருவது வழக்கம். அப்போது மிகவும் கம்பீரமான தோற்றத் துடன் என்னைத் தொடர்ந்து ஒருவர் வந்துகொண்டு இருந்தார். அவர் தம் மிடுக்கான பார்வையும் பெரு மிதம் வாய்ந்த நடையும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. ஆதலால் என்னுடன் வந்த என் நண்பர்களுள் ஒருவரை நோக்கி 'இவர் யார்?' என வினவினேன். ''இவர்தான் பாரதிதாசன் என்பவர்; ஒரு சிறந்தகவிஞர்; இவருடைய பாடல்களைத்தான் நமக்கு முன்னே செல்கின்ற தாய்

மார்களும் பிறரும் பாடுகின்றனர்'' என்றாள், நான் இவ ருடைய அருமை பெருமைகளையெல்லாம் பல அறிஞர் கள் மூலம் கேட்டிருக்கின்றேன் எனினும் அன்றுதான் நேரில் கண்டேன். கவிஞருக்கு இருக்கவேண்டிய முகப் பொலிவு முற்றும் பொருந்தியிருத்தலைக்கண்டு நான் மிக வும் வியந்தேன்; எனினும் நான் அவரிடம் கலந்துரை யாடவே இல்லை.

டாக்டர் தருமாம்பாள் அம்மையாரும், வ.பா. தாம ரைக்கண்ணி அம்மையாரும் ''செந்தமிழைக் காப்பதற் காகவே சேனை ஒன்று வேண்டும்'' என்னும் பாரதிதாச ரின் பாடலைப் பாடிக்கொண்டே இந்தி எதிர்ப்புக்காக மாபெரும் சேனையைத் திரட்டினர். சென்னையில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாடுகளில் பாவேந்தராகிய பாரதி தாசனாரின் பேச்சுத்திறனைக் கேட்டு வியந்திருக்கின் றேன். ஆதலால்,

> ''நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
> நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
> திமிர்ந்த ஞானச் செருக்கும்''

கொண்ட அவர் தம் தோற்றப் பொலிவு என் நெஞ்சில் நிலைத்து நின்று விட்டது.

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை மாட்ட நினைக் கும் சிறைச்சாலை' என்னும் பாடலைப் பாடிக்கொண்டே, டாக்டர் தருமாம்பாள்அம்மையாரும், மலர்முகத்தம்மை யாரும் இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு 1938ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் நாளன்று சிறை புகுந் தனர். அதன் பிறகு நான் புதுவைக்கு அடிக் கடி சென்று கூட்டங்களில் தலைமை தாங்கிச் சொற் பொழிவாற்றி இருக்கின்றேன். எனினும் நான் பாரதி தாசர் தம் இல்லம் சென்று அவரைக் கண்டதில்லை. தமி ழைப் பழிப்போரைத் தாக்கிப்பேசும் அவருடைய கடுமை யான பேச்சிலிருந்து அவர் ஒருகால் முரடராய் இருப் பாரோ என்று நான் ஐயம் கொண்டதே அதற்குக் கார ணம். எனினும் நான் பேசும் கூட்டங்களில் அவருடைய

மாணவர்கள் பெரும்பாலோர் வந்து என் பேச்சைக் கேட்டு மகிழ்வதுண்டு.

நான் ஒருநாள் ஓய்வாக இருந்தபோது அவருடைய மாணவர்களுள் ஒருவர் என்னிடம் வந்து பாரதிதாசனர் இளமையிலே முருக பக்தராக இருந்தபோது பாடிய பாடல்களை எல்லாம் என் முன்னிலையில் இசையோடு பாடிக்காட்டினர். அவை மிகவும் உருக்கமான பாடல் களாக இருந்ததைக் கண்டு நான் வியந்தேன். வேருெரு கூட்டத்தில் புதுவையிலே நான் தலைமை வகித்துப் பேசியபோது, 'பாரதிதாசரைக் குறித்து உங்கள் எண் ணம் என்ன?' என்று ஒருவர் கடிதம் மூலம் கேட்டு எழுதி யிருந்தார்.

''நம் பாவேந்தரைப் போற்ருத தமிழன் நம் நாட்டில் இருக்கமாட்டான். அவ்விதம் இருந்தால் அவன் தமிழ னல்லன்! 'தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்!' என்று பாடியுள்ள ஒரு வீரத்தமிழ்க் கவிஞ ருக்கு என் பாராட்டு எந்த மூலை! எனினும் சீர்திருத்தச் செம்மலாகிய இவர், அடிமை மனப்பான்மையைக் குறிக் கும் 'தாசன்' என்னும் பெயரை வைத்துக் கொண்டது தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. பாரதியார் நாட்டு விடுதலைக்காகப் பாடினர். நமது புரட்சிக் கவிஞர் தமிழர்கட்காகவும், தமிழுக்காகவும் பாடினர். ஆதலால் நம் பாவேந்தர் பாரதியாருக்கு எந்தவகையிலும் குறைந்தவரல்லர் என்பது என் எண்ணம்'' என்று நான் அவருக்குத் தெரிவித்தேன்.

புலவர்குழு திருச்சியிலும் தஞ்சையிலும் நடந்தபோது நான் அந்தக் கூட்டங்களுக்குச் செல்லவே இல்லை. முத் தமிழ்க் காவலராகிய கி.ஆ.பெ. விசுவநாதம் சென்னை வந்திருந்தபோது 'நீங்கள் என் இரண்டு கூட்டங்களுக் கும் வரவில்லை? நீங்கள் வந்திருந்தால் பாரதிதாசரைப் போல உங்களையும் யானையின் மீது ஏற்றி ஊர்வல மாகக் கொண்டு வந்து இருப்பேன்' என்ருர். நீங்கள்

அவருக்குச் செய்ததுதான் சிறப்பு. நான் அவருக்கு ஓராண்டு இளையவன்' என்று கூறினேன். அடுத்த கூட்டம் மதுரையில் நிகழப்போகின்றது. அதற்கு நீங்கள் அவசியம் வரவேண்டும் என்று கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் நேரில் தெரிவித்ததோடு கடிதம் மூலமாகவும் எனக்கு நினைப்பூட்டினர். நான் அவ்விதமே மதுரைக்குச் சென்றிருந்தேன். அங்கே சோமசுந்தர பாரதியாருக்கு 70ஆம் ஆண்டுவிழா நடந்தது. அங்கே சோமசுந்தரபாரதியாரைப் பாராட்டிப்பேசினேன். அதற்கு அடுத்துச் சென்னையிலும் பிறகு சிதம்பரத்திலும் குழுக் கூட்டங்கள் நடந்தன. சிதம்பரம் கூட்டத்தில் தான் நான் முதன் முதலில் பாரதிதாசரைக் கண்டு பேசி அளவளாவினேன். பிறகு நடந்த புலவர் குழுக்கூட்டங்கட்கு எல்லாம் நானும் பாரதிதாசனும் பெரும்பாலும் சென்றிருக்கின்றோம். நாங்கள் அப்போதெல்லாம் ஒருவருக் கொருவர் அளவளாவி எங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுதலுண்டு. நாங்கள் கோவைக்குச் சென்றிருந்த போது திரும்பி வருவதற்கு எனக்கும் அவருக்கும் இரண்டாம் வகுப்புப் பயணச்சீட்டு கிடைக்கவில்லை. பாவேந்தர் ஏறி அமர்ந்திருந்த மூன்றும் வகுப்புப் பெட்டியிலேயே நானும் ஏறுவதற்குச் சென்றேன். சன்னல் பக்கமாக அமர்ந்திருந்தவர் என்னைக் கண்டதும் எனக்கு அந்த இடத்தைக்கொடுத்துவிட்டார். நான்எவ்வளவோ மறுத்தும் அவர் கேட்கவில்லை. பிறகு அவர் எனக்குப் படுத்துக் கொள்வதற்கும் இடம் தந்துவிட்டு அவர் உட்கார்ந்த வண்ணமே இருந்தார். அவருடைய 'கட்டளை'க்கு நான் இணங்க வேண்டியவனாகவே இருந்து விட்டேன். இந்த ஒரு நிகழ்ச்சியிலிருந்தே அவர் என் மீது வைத்திருந்த பேரன்பினை நான் தெரிந்து கொண்டேன். அவருடைய பெருந்தன்மை வாய்ந்த குணமும், எனக்கு நன்கு தெரியவந்தது. 'குயில்' பத்திரிகை ஆரம்பிக்கும் போது அவர் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில் கண்டிருந்தபடி நான் எனக்குத்

தெரிந்தவர்களையெல்லாம் 'குயில்' இதழின் உறுப்பினர் களாகச் சேர்த்து உதவினேன்.

இன்னும் எனக்குத் தெரிந்த எத்தனையோ செய்திகளை நான் இந்தச் சுருங்கிய கட்டுரையில் தெரிவிப்பதற் கில்லை. அவர் படக்காட்சித் துறையில் இறங்காமலிருந் திருந்தால் நூற்றாண்டுகட்குமேலும் வாழ்ந்திருக்கலாம். அவருடைய உடற்கட்டும், உள்ள உறுதியும் அத்த கையன. "நான் எந்தக் கட்சியினையும் சார்ந்தவனல் லன்" என்று அவர் தம்முடைய இறுதிக் காலத்திலேயே தெரிவித்திருந்தார். அவர் நம் தமிழ் நாட்டுக்காகவும், தமிழுக்காகவும் இதுவரையில் புரிந்துள்ள தொண்டுகளே என்றும் அழியாமல் நிலைத்து நிற்கக்கூடியனவாக உள் ளன. தமிழ் நாட்டார் அனைவரும் அவருக்குக் கடமைப் பட்டவர்கள் ஆகின்றார்கள். தம் கருத்துக்களைப் படக் காட்சிகளின் மூலம் நம் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அவர் எண்ணியிருந்தார். படத்தொழி லில் ஈடுபட்டுள்ள பேரன்பர்கள் 'பாண்டியன் பரிசு' என் பதனைப் படமாக எடுக்க முன்வந்தால் அவருடைய இறு திக்கால எண்ணத்தை நிறைவேற்றி வைத்தவர்க ளாவார்கள்.

அவர் சென்னையிலே 'கவிஞர் மாநாடு' ஒன்றினைக்கூட்ட எண்ணியிருந்தார். இராசீபுரக் கவிஞர் அரங்கசாமி என்பவர் அதற்காகவே சென்னைக்கு வந்திருந்தார். தலைவர், திறப்பாளர், பேச்சாளர், மாநாடு நிகழ்த்த வேண்டிய நாள், முதலிய பலவற்றையும் கவிஞர் அரங்கசாமி அவர்களைக் கொண்டு பாவேந்தர் முடிவு செய்து வைத்திருந்தார். அந்த மாநாட்டினை மாணவர் மன்ற நிலையத்திலேயே நடத்துவது என்றும் நம் பாவேந்தர் எண்ணியிருந்தார். அந்த எண்ணம் நிறை வேறுவதற்குள் நம் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் நம்மைவிட்டு மறைந்து விட்டார்.

பாவேந்தருக்கு இறுதிமரியாதை புரிவதற்காக மாணவர் மன்றச்சார்பில் நான் சென்றிருந்தேன். அப்போது அவர்

தம் அருந்தவச் செல்வராய மன்னர் மன்னன் என்னைக் கட்டிக்கொண்டு அழுதபோது என்னுள்ளம் பெரிதும் கரைந்து விட்டது. அவருக்கு எத்தகைய ஆறுதலையும் கூற அப்போது என்னால் இயலவில்லை.

மே† மாதம் முதல் தேதியன்று நாங்கள் இரங்கற் கூட்டம் ஒன்று கூட்டி எங்கள் துயரத்தை அங்கு வந்திருந்த மக்களுக்குத் தெரிவித்தோம். மன்னர் மன்னனுக்கும் ஆறுதல் கடிதம் ஒன்று வரைந்து அனுப்பினோம். அந்த அருந்தவச் செல்வரையும் அவர்தம் குடும்பத்தாரையும் ஆதரித்து ஆவன புரிய வேண்டுவது தமிழ் மக்கள் அனைவரது கடமையாகும். அவர் பெயரால் புதுவை மாநகரிலே ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்தினால், அது பலருக்கும் பயன்படும்.

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள் "வால்ட் விட்மன்" என்று பாரதிதாசனாரைப் பாராட்டியுள்ளார். 'பொதுமைப்பொழில்-புதுமை மலர்-தமிழ்த்தேன்-பாச் சுவை' என்று திரு.வி.க. அவர்கள் பாவேந்தரைப் பாராட்டி மகிழ்ந்துள்ளார்.

நம் கவிஞர் பெருமானை உலகமாபெரும் கவிஞர்களுள் ஒருவராகவே மக்கள் என்றும் மதிப்பர். அவர் அயல் நாட்டில் பிறந்திருந்தால் தம் வாழ்நாளிலேயே நம் புரட்சிக் கவிஞர் 'நோபல்' பரிசினைப் பெற்றிருக்கலாம்.

அவர் தம் பொன்னுடலம் மறைந்தாலும் புகழுடம்பு மறையாது. அவர் தம் பாக்கள் தேனினும் இனியவை. அவருடைய தமிழ்நடை மக்கள் உயிரையும் உடலையும் வளர்ப்பன அவர்தம் புரட்சிக் கருத்துக்கள் உறங்கும் மக்களையும் விழிப்படையச் செய்வன. அவர்தம் நூற்கள் யாவும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க பெருமை வாய்ந்தன. அவரை நாம் மறந்தாலும் நம் தமிழ்மொழி மறவாது.

பாவேந்தர் பாரதிதாசர் தம் திருப்பெயர் வாழ்க!

† 1—5—1964



டாக்டர் திருமதி
தே. தியாகராசன் எம்.ஏ.,பிஎச்.டி.

## நினைவுத் துளிகள்

தமிழ் இலக்கிய ஆய்வுக் களத்தில் முதன் முதலாக 'டாக்டர்' பட்டம் பெற்ற பெண்மணி திருமதி தே. தியாகராசன் அவர்கள். இடையருது வீசியதம் புலமைத் தென்றலால் மதுரை டோக் பெருமாட்டி கல்லூரியை என்றும் இளவேனிலாக்கிக் கொண்டிருந் தவர்.

சுவிசேஷக் குடும்பத்தில் பிறந்து சுயமரியாதைக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டவர். மலர்ந்த முகத் தோடு இன்சொல்லைப் படைத்து, விருந்தோம்பும் பண்பினர். இவரும் இவர் கணவரும் பாவேந்தர்பால் உள்ளார்ந்த அன்பு படைத்தவர்கள்.

கடல்கடந்தும் தமிழ்பரப்ப செக்கோசுலேவியா புறப் பட்ட அன்று, இக்கட்டுரையை அனுப்பி விமானம் ஏறினுர். சாலைவிபத்து அவரைச் சடலமாக்கித் தமிழகத்துக்கு அனுப்பிவைத்தது. பாவேந்தர் பற்றிய துணிச்சலான கருத்துக்களை இவர் தூய தமிழில் படைத்திருக்கிருர்.



1941 ஆம் ஆண்டு திருச்செங்கோடு கழக உயர்நிலைப் பள்ளியில் நான் பத்தாம் வகுப்பு பயிலுங்கால், அங்கு எனக்குத் தமிழாசிரியராக இருந்தவர் திரு.உலகஊழியர். பாரதியார் பாடல்ஒன்றில் எனக்கு ஐயமேற்பட்டபோது, அவரிடம் நான் பாரதியார் கவிதைகளைத் தருமாறு கேட்டேன். அதற்கவர் 'பாரதியாரைத் தூக்கி விழுங்கும் கவிஞர் தோன்றியுள்ள இந்நாட்களில் நீ பாரதியாரைத் தேடுகிறாயே!'என்றார்.அவர் குறிப்பிட்ட கவிஞர் யாரென நான்வினவிய போது, அவர் பாரதிதாசனைக் குறிப்பிட்டார்.அவரது கவிதைகள் முதற்றொகுதியையும் கொண்டு வந்து கொடுத்தார். அன்றுதான் நான் புரட்சிக் கவிஞர் பற்றித் தெரிந்து கொண்டேன் பின்னர் பள்ளியில்நடந்த போட்டிகளில் பங்கு பெற்றேன். அவற்றிற்கான பரிசுகளில் பாரதிதாசன் கவிதைகளையும் பரிசாகப்பெற்றேன். அவர் கவிதைகள் மிகப் புரட்சியுடையனவாகவிருந்தன. அப்பருவத்தில்விளங்காத கவிதைகளும் அத்தொகுதியில் இருந்தன. திரு.உலகவூழியர் தந்த ஊக்கத்தால் நானப்போது கவிதை புனையவாரம்பித்தேன். நானெழுதிய சிலபாடல்களைப் பார்த்துவிட்டு அவர் 'என்னம்மா புரட்சிக் கவிஞர் படித்ததின் விளைவு புலப்படுகின்றதே!' என்பார்.

பின்னர் கல்லூரியில் சேர்ந்து படிக்கும்போதும் இவர் நூல்களைப் படிப்பதுண்டு. அந்நாட்களில் எனக்குப் பிடித்தமான வரிகள்,

இதய மெலாமன்பு நதியினில் நனைப்போம்
இது என தென்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்
என்பன.

பட்டம் பெற்றபின் மதுரைக்கு வேலைக்கு வந்தேன். டோக்பெருமாட்டி கல்லூரியில் பணியாற்றத்தொடங்கிய பின் அவரைநான் நேரில் சந்தித்தேன் எங்கள் கல்லூரிக்கும் பலமுறை வந்திருக்கிருர். புரட்சிக்கவிஞர் கனல் கக்கும் சொற்களை முழக்கமிட்டுப் பேசுவாரென எதிர் பார்த்த எனக்கு அவர் குரல் புதிதாக இருந்தது. பேசுங் கால் அவர்கருத்துக்கள் புரட்சியானவைதாம். அவற்றை ஆழமாகவும் ஆணித்தரமாகவும் கூறுவார். ஆனல் மெல்ல, நகைச்சுவை ததும்பக்குரலை எடுத்தும் படுத்தும் கூறிக் கேட்பவர்க்கும் புத்தறிவூட்டுவார்.

எங்கள் வீட்டிற்கு அவர் 1955 இல் முதன் முதலாக வந்தார்.அதற்குப் பின்னர் பலதடவை வந்திருக்கிருர். அவரை விருந்திற்கழைக்குங்கால் அவருக்குப் பிடித்த மான உணவு வகைகளைக் கேட்டு அதன்படி சமைத்துத் தருவேன். ஒரு சமயம் அவர் தமக்குப் புரு சமைத்துத் தரச்சொன்ஞர். பல்லிற்கு வருத்தம் வராதிருக்க அதை அம்மியிலிட்டு அறைத்துச் சமைக்குமாறு கூறிஞர். பல்லிற்கு ஊறுவராமல் பக்குவம் செய்ய வேறுவகை களுண்டென்று கூறி அதனை நன்கு மெதுவாகும்படி தயாரித்து மிளகிட்டுச் சமைத்துத் தந்தேன். மிகச் சுவை யோடிருந்ததாகக் கூறி உண்டார். இரசம்(மிளகுச்சாறு) கூட அவருக்குக் கொஞ்சம் காரமாக இருக்க வேண்டும். அந்த முறையில் நான் அவருக்குச் செய்து கொடுத்திருக் கிறேன்.

உணவுண்டபின் பேசிக் கொண்டிருப்பார். நான் கவிதை கள் எழுதுவதை அவரறிவார். எனவே என்னையழைத்து "ஆமாம் நன்கு உணவிட்டாய்! எங்கே கவிதையைக் காட்டாமல் மறைத்துக் கொண்டாயே ஏன்? கொண்டு வா, நான் பார்க்க வேண்டும்"என்பார், உலகமாகவிஞர்

களுள் ஒருவரான அவரிடம் உடனே என் கவிதையைக் காட்டுவதெங்ஙனம்? காட்டவும் விருப்பமிருக்கும்; தயக்கமுமிருக்கும். பின்னர்க்காட்டுவேன். சுவையாகவுள்ளதைப் பாராட்டுவார். தொல்காப்பியம் எவ்வாறு யாப்பிலக்கணம்கூறுகிறது என்பதைக் கூறுவார். ஒரு தந்தை மகளின்பாடலைக் கண்டு மகிழ்வதுபோல் மகிழ்வார்.

ஒருசமயம் அவரவ்வாறு கேட்டபோது நான் ஒரு கவிதையை அவரிடம் கொடுத்தேன். மதுரையில் 'பிராமணர் இளைஞர் சங்கம்' டாக்டர் உ.வே.சாமிநாத அய்யருக்கு நூற்றாண்டுவிழா வெடுத்தபோது என்னைக் கவியரங்கேற அழைத்தார்கள். நானும் 'தமிழ்த்தாத்தா' மீது நான்மணிமாலை பாடினேன். பாடல்களை இசையோடும் பாடினேன். அவ்விழா முடிந்த பின்னர் ஒருநாள் கவிஞர் அவர்கள் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களிடம் அந்தக் கவிதையைக் கொடுத்தேன். அவர் முன்னால் என் பாடல்கள் எம்மாத்திரம்? அவர் அப்பாடல்களில் திருத்திக் கொடுத்தபடி என்னிடம் உள்ளது.

கவிஞன் தன்னைப் பிறர் கட்டுப்பாடு செய்வதை விரும்பான் என்பதவர்க்கு நன்கு பொருந்தும். எங்கள் கல்லூரியிலும் பிற கல்லூரிகளிலும் ஒரேநாளில் பேச இசைந்து வருவார். நேரங்குறிப்பிட்டு அழைப்பிதழில் அச்சிட்டிருக்கும். விரும்பிய இடத்தில் விரும்பியஅளவு நேரம் பேசுவார். யார் அவரிடம் என்ன சொல்ல முடியும்?

அவருடன் ஒரே மேடையில் பேசும் நற்பேறு பெற்றுள்ளேன். அவர் தலைமையில் உரையாற்றும் அரும் வாய்ப்பும் அடைந்துள்ளேன். அவர் வாயால் பாராட்டுப் பெறும் பெரும்பேறும் கிட்டியுள்ளது. சான்றாக பாரதியார் விழாவை அவரது பிறந்த நாளில் மதுரையில் கொண்டாடினார்கள். அந்த விழாவில் அவர் தலைமையில் பேசி அவர் வாயால் பாராட்டுப்பெறும் நல்ல வாய்ப்பையும் பெற்றுள்ளேன்.

1938ஆம் ஆண்டு மதுரையில் சுயமரியாதை மாநாடு

ஒன்று நகரதூதன் ஆசிரியர் திருமலைசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் பேரறிஞர் அண்ணா அவர்களும் அதில் கலந்துகொண்டார்கள். அவ் விழாவிற்குப் புரட்சிக் கவிஞரும் வந்தார். அம் மாநாட்டில் என் மாமனார் இராவ்சாகிப் ஆறுமுகநாடார் அவர்கள் பெரும்பங்கு கொண்டார்கள். அவருக்கு இவ்விருவரையும் நகரதூதன் ஆசிரியர் அறிமுகம் செய்துவைத்தார். உடனே கவிஞர் தமது கவிதைத்தொகுதி முதற் பாகத்தைத் தம் கையெழுத்திட்டு அன்பளிப்பாக என் கணவருக்குத் தந்தாராம். அன்றுமுதல் என் கணவருக்கும் புரட்சிக் கவிஞருக்கும் பழக்கம் ஏற்பட்டதாக என் கணவர் என்னிடம் கூறியிருக்கிறார்.

'நாய்ஸ்' ஆங்கிலப் பள்ளியில் மூன்றும்வகுப்பில் தமிழ்ப் பாடம் நடந்துகொண்டிருந்தது. அன்று புரட்சிக் கவிஞரின் நிலாப்பாட்டை ஆசிரியர் கற்றுத் தந்தார். அவர் குழந்தைகளிடம் இப்பாடலைப் பாடியவர் பாரதிதாசன் என்று கூறினார். 'அவர் யார் தெரியுமா?' என்று வினவினார். உடனே வகுப்பிலிருந்த என்மகள் 'ஏழிசை' ஆசிரியரிடம் "ஓ! எனக்குத் தெரியுமே! அவர் எங்கள் தாத்தா!" என்று கூறினாள். ஏனென்றால் அவள் அவரை அப்படித்தான் அழைப்பாள். ஆசிரியர் வியந்தபடி 'உன் தாத்தாவா?' என்று வினவ அவள் "ஆமாம்! எங்கள் தாத்தாதான். எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவார். வரும்போது உங்களிடம் கூறுகிறேன்" என்றாள்.

அதற்குப்பின் கவிஞர் எங்கள் வீட்டிற்கு வந்தார். என் மகள் அவரைப் பார்த்துத்"தாத்தா! அந்த நிலாப்பாட்டு நீங்களே எழுதியதா?" என்று கேட்டாள். என்னே அவளறியாமை! உடனே அவளை வாரி எடுத்துக்கொண்டு, "நல்ல கேள்விகேட்டாயே என்னை! எந்தெந்தப்பயலோ என் கவிதைகளையும் கருத்துக்களையும் திருடுகிறான் என்றுநான் வழக்காட வேண்டியிருக்க நீ என்னையே ஐயுற்றாயே!" என்று நகையாடினார்.

ஒருநாள், "பலமுறை நான் உங்கள் வீட்டிற்கு வந்துள்ளேன். நீங்கள் சென்னைக்கு வரும்போது கட்டாயம் எங்கள் வீட்டிற்கு வரவேண்டும்''என்று அன்புடன் அழைத்தார். அவ்வண்ணம் நாங்கள் சென்னை சென்றபோதவர் வீட்டிற்குப்போனேம்.அப்போது பாண்டியன்பரிசு என்ற அவரது காப்பியத்தைப் படமாக்கும் திட்டம் நடந்து வந்தது. படமெடுக்க ஆகும் செலவிற்கு ஒருவர் பெருந் தொகை கடன்தர இருந்தார். அவரால் அனுப்பப்பட்ட ஆள் பத்திரத்தைக் கவிஞரிடம் கொண்டுவந்தார். அவரைப் பார்த்துக் கவிஞர், ''சரி. பத்திரம் வந்துவிட்டதா? நான் கையெழுத்திட்டுத் தந்து விடுகிறேன். இதோ! தம்பி (என் கணவரைச்சுட்டி) வருவார். அவரிடம் அத் தொகையைக் கொடுத்தனுப்புங்கள்'' என்று சூதுவாதறியாமற் கூறினர். இதைக்கேட்ட என் கணவர் ''ஐயா! உங்கள் வழக்கறிஞரைக் கலந்து கேட்காமல் இப்படித் திடீரென முடிவிற்கு வரல் சரியன்று. எனவே அவரைக் கலந்து முடிவிற்கு வாருங்கள்'' என்று கூறினர்கள். யாரையும் நம்பும் அத்தகைய வெள்ளையுள்ளம் குழந்தையுள்ளம் அவர்க்குண்டு.

ஒருமுறை அவர் மதுரைக்கு வந்திருந்த போது அவரது இசையமுதைப் பற்றிப் பேசினேம். நானவரிடம் "உங்களிசையமுதிலுள்ள பாடல்களுக்குச் சுரமமைத்தால் என்ன?'' என்றேன். "இன்னபண், இன்னதாளம் என்றும் குறிப்பிடலாமல்லவா?" என்றேன். அதற்கவர் "ஏனம்மா பாடுவோன் கற்பனைக்கு எல்லைகட்ட வேண்டும்? பாடுபவன் ஆற்றலுக்கேற்பப் பாடிப் பழகட்டும்'' என்ருர். இது அவரது பரந்த மனப்பாங்கிற்குச் சான்று.

அவர் மேடையில் பேசுங்கால் புரட்சியும் புதுமையும் பேச்சில் பொங்கித் ததும்பும். சான்ருக, மதுரை தியாகராசர் கல்லூரியில் நான் பணியாற்றும்போது அவரங்கு பேசினர். அப்போது அவர் ''லவனும் குசனும், இராமன் பகைவனை இராவணன் குழந்தைகள். அதனல் தான் அவர்கள் சிறுவரேயாயினும் இராமன் அனுப்பிய

யாகக் குதிரையையும் இழுத்துக்கட்டி இராமனையும் எதிர்த்து வீழ்த்தினார்கள்'' என்று கூறினார். கேட்டவர் வாயடைத்திருந்தனர். இது அவர் அஞ்சாமைக்குச் சான்று.

இப்படி எவ்வளவோ கூறலாமவரைப்பற்றி. வஞ்சனை யறியா உள்ளம் படைத்தவர். அவரது பண்புகளில் பல நானறிய வாய்ப்பில்லை. ஆனால் நானறிந்த மட்டும், அவர் ஓர் ஒப்பற்ற புரட்சிப் பாவேந்தர்,இலக்கியஉலகில் அவர் எவ்வளவோ அறிந்தவர். ஆனால் உலகியலில் அவர் எவ்வளவோ அறியாதவர்; அறியக் கவலைப்படா தவர். அதனால்தான் உலகியலும் உலகும் அழியுமட்டும் அவர் தமிழர் உள்ளத்தில் வாழவிருக்கிறார்.

●



திரு. மு. செல்லப்ப ரெட்டியார்

# இன்ப இரவு

பாவேந்தருக்குப் பொற்கிழி அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அரும்பு இவர்; பேரறிஞர் அண்ணு மலர்.

'ரெட்டியார்' என்று பாவேந்தரால் பெருமதிப்போடு அழைக்கப் பட்டவர். இவரைப் 'பாவேந்தரின் சேலம் மாவட்டக்கிளை' என்று சொன்ஞல் கூடப் பொருந்தும். பாவேந்தரின் இயல் இசை நாடக வரலாற்ருேடு பின்னிப் பிணைந்த முத்தமிழ் நண்பர் இவர்!

ஆங்கிலக் கவிஞன் ஷெல்லி கையெழுத்திடும் போது அடைப்புக்குறிக்குள் 'நாத்திகன்' என்று போடும் வழக்க முடையவன். இவரும் தம்மைப் 'பகுத்தறிவு வாதி' என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படு பவர்.

எழுபது வயதை எட்டிப்பிடித்திருக்கும் இவர், வாழ் நாள் முழுவதும் பாவேந்தரின் சிந்தனையோடு வாழ்ந்து வருபவர்.

பாவேந்தரின் புகழைப் பரப்புவது—
இவர் தொழில் (Profession)
பாவேந்தர் பற்றிய பழைய நினைவுகளை
அசைபோடுவது—இவர்பொழுது போக்கு (Hobby)
பாவேந்தர் பரம்பரையோடு பழகுவது—
இவர் கேளிக்கை (Entertainment)

இசைப் புலவரான இவர் பாவேந்தரோடு பழகிய நாட்களில், அப்பாட்டு வீணையில் எழுந்த சில மெல்லிய அதிர்வுகளை இக்கட்டுரை நாடாவில் பதிவு செய்திருக் கிருர்.



என்னுடைய இருபதாவது வயதிலேயே பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் சுயமரியாதை இயக்கக்குடியரசு வார இதழைப் படித்தேன். அதனால் தன்மான இயக்கக் கொள்கைகள் என் உள்ளத்தைக் கவர்ந்தன. மேலும் ஜீன்ஸ் மெஸ்லியர் மரணசாசனம்(மூன்றுபாகம்), இங்கர்சால் புத்தகங்கள், பெரியாரின் தத்துவ விளக்கம், பிரகிருதவாதம் முதலிய நூல்களைப் படித்தேன். சாதி, மதம், கடவுள், முக்தி, நரகம் முதலியவைகளில் எனக்கு நம்பிக்கை அறவே அற்றுப்போயிற்று. நாத்திகவாதத்தில் நல்ல தெளிவும், ஆழ்ந்த நம்பிக்கையும் எனக்குண்டு. எவ்வளவு நல்ல எண்ணத்தோடு, விருப்பு வெறுப்பு இல்லாமல் பல ஆயிரம் தடவை சிந்தனை செய்தாலும், 'கடவுள் உண்டு' என்பதற்கு என்னால் ஆதாரம் காண இயலவில்லை. ஆகவே, நான் ஒரு 'நல்ல பகுத்தறிவுவாதி' என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

முதலில் செய்தித்தாள்களில் வெளியான சில பாரதிதாசன் கவிதைகளைப் படித்தேன். பின்பு திருமதி.குஞ்சிதம் குருசாமி அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட பாரதிதாசன் கவிதைகளைப் படித்தேன். ஒவ்வொரு கவிதையும் இனித்தது. ஆயினும் சாதி, மதம், கடவுள்களைப் பற்றிய கவிதைகள், எல்லாக் கவிதைகளையும் விட என் உள்ளத்தில் இடம் பெற்றன. இதன் பயனாகப் பாரதிதாசன் அவர்களைக்காணவும், பேசவும் வேண்டுமென்ற விருப்பம் என் உள்ளத்தில் பதிந்தது.

பாவேந்தர் அவர்களை என் சொந்த ஊரான நாமக்கல் போடிநாய்க்கன்பட்டிக்கு அழைத்து வந்தேன். நாமக்கல் தமிழர் சங்கக்கட்டிடத்தில் பெரியபுராணம்,இராமாயணம் பற்றி ஒரு சொற்பொழிவு ஆற்றினார்கள். பாவேந்தரின் நூல்களை அச்சிடுவதற்காகவும், அவர் எழுதிய நாடகங்களை நடத்துவதற்காகவும் 'முத்தமிழ் நிலையம்' என்ற அமைப்பை உருவாக்க நானும் என் நாமக்கல் நண்பர்களான திருவாளர்கள் என்.கிருஷ்ணராஜ், கா. கருப்பண்ணன், கா.பெருமாள் ஆகியோரும் ஒரு முடிவுக்கு வந்தோம். பிறகு பாவேந்தர் அவர்களை ஊருக்கு அனுப்பிவைத்தோம்.

15நாட்கள் கழித்துச்செட்டிநாடு கானாடுகாத்தானுக்குப் புறப்பட்டுவரும்படி கவிஞரிடமிருந்து எனக்கு ஓர் அவசரக் கடிதம் வந்தது. கானாடுகாத்தான் தனவணிகர் திரு.வை.சு.சண்முகமும் அவர் மனைவியார் திருமதி மஞ்சுளாபாயும் பாவேந்தருக்கு மிகவும் வேண்டியவர்கள்.வை.சு.சண்முகம் செட்டியார் அப்போது செல்வச் செழிப்போடு வாழ்ந்து கொண்டிருந்தார். அவர் வீடான 'இன்பமாளிகை'க்கு நான் சென்றேன். பாவேந்தரும் எனக்கு முன்பே அங்கு வந்து காத்திருந்தார்கள். முத்தமிழ் நிலையத்தைத் தொடங்குவது பற்றிய செய்திகளை அங்கு ஆராய்ந்தோம். அதற்கு அங்கு சிறிது ஆதரவும் இருந்தது.

திரு.வை.சு.சண்முகம் அவர்கள் இல்லத்தில் நான் தங்கியிருந்தபோது மலேயாத் தமிழ் முரசில் வெளியாகியிருந்த கவிஞரின் 'தென்றல்'† என்றபாட்டைப்பார்த்தேன். மிகச் சுவையான பாடல்!குளித்தலைக்குப் பாவேந்தரோடுநான் சென்றிருந்தபோது,அங்குவந்திருந்த இளந்தாடி நெடுஞ்செழியனிடம் அப்பாட்டைப் படித்துக்காண்பித்தேன்; மிக

†பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதியில் இடம் பெற்றுள்ளது இத் தென்றல்

மிகச் சுவைத்தார். பிறகுசென்னைக்குநான் சென்றபோது முல்லை,திரு.முத்தையாவிடம் அப்பாடலைக் கொடுத்து மீண்டும் முல்லையில் வெளியிடுமாறு சொன்னேன். அவர் களும் அவ்வாறே வெளியிட்டார்கள்.

ஒரு திங்கள் கழித்து நானும் பாவேந்தரும் மீண்டும் கானாடுகாத்தான் சென்றோம். ஆனால் முத்தமிழ்நிலையத் துவக்கத்துக்கு அங்கு போதிய ஆதரவு கிடைக்கவில்லை. ஆயினும், அன்று கூட்டத்திற்கு வந்திருந்த கோனாப் பட்டு முருகு. சுப்பிரமணியம் (பொன்னி ஆசிரியர்) ஆத் தங்குடி அரு. பெரியண்ணன் (முருகு. சுப்பிரமணியத் தின் மாமன்) அ.பழ. பழனியப்பச்செட்டியார், முருகப்பா முதலியவர்கள் கோனாப்பட்டில் ஆதரவு இருப்பதாக வும், அங்கு வந்தால் ஆவன செய்வதாகவும் கூறி, எங்கள் இருவரையும் கோனாப்பட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். பன்மொழிப் புலவர் க. அப்பாதுரையவர் கள் கோனாப்பட்டு உயர்நிலைப் பள்ளியில் அப்போது ஆசிரியராக இருந்தார். கோனாப்பட்டில் முத்தமிழ் நிலைய விதிமுறைகளைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்தோம். ‘முத்தமிழ் நிலையம்— கோனாப்பட்டு’ என்ற பெயரில் கோனாப்பட்டுத் தோழர்கள் பாதித் தொகையும், போடி நாய்க்கன்பட்டி— நாமக்கல் தோழர்கள் பாதித் தொகை யும் போடுவதாக முடிவு செய்து, முதலில் நாடகம் அரங் கேற்றுவதும், அதன் பிறகு புத்தகங்கள் வெளியிடுவதும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

நானும் பாரதிதாசனும், நண்பர் கிருஷ்ண ராஜுவும் நடிக—நடிகையர், நாட்டிய—இசையாசிரியர் முதலிய வர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டுச் சென்னை சென் றோம். அங்கே டாக்டர். ஏ. கிருஷ்ணசாமி பார்—அட். லாவினுடைய ‘லிபரேட்டர்’ பத்திரிகை அலுவலகத்தில் (மவுண்ட் ரோடு) தங்கியிருந்து ஆக வேண்டிய காரியங் களைக் கவனித்தோம். இரண்டு நாட்களுக்குப்பிறகு கோசல்ராம், எஸ் ஆர். ஜானகி ஆகியோர் வீட்டில் தங்கியிருந்து சில நடிகர் நடிகைகளைப் பார்த்தோம்.

பின்பு நாட்டிய ஆசிரியரான நடராசன், ஆடலரசியான சகுந்தலா வீட்டில் ஒரு தேநீர் விருந்து வைத்து, அவர்களுடைய நாட்டியக் கலையை எங்களுக்கு நடத்திக் காட்டினார்கள். அன்று கவிஞர் கம்புதாசன் முதலியவர்கள் அங்கு இருந்தார்கள். திரு. நடராசன்—சகுந்தலா நாட்டியம் மிக உயர்ந்த முறையில் இருந்தது. ஆயினும் அவர்கள் மாதம் ஒன்றிற்குக் கேட்ட தொகை அதிகமாக இருந்த காரணத்தால், அவர்களை ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

சென்னையில் சாந்தோம் நெடுஞ் சாலையில் கடலோரம் ஒருபெரிய கட்டிடத்தை வாடகைக்கு அமர்த்தி முத்தமிழ் நிலையத்தை அதில் தோற்றுவித்தோம். முத்தமிழையும் வளர்ப்பது இந்நிலையத்தின் நோக்கமாகும். இசைவல்லுநர் எம்.எஸ்.ஞானமணி, பரதநாட்டிய ஆசிரியர் திரு. இராமசாமிப்பிள்ளை, கல்கத்தா ஓரியண்டல் நாட்டிய ஆசிரியர் தேவி பிரசாத், கவிஞர் சுரதா, திரு. வேணுகோபால் சர்மா, திரு. கிருஷ்ணமராசு, செல்விகள் சரசுவதி, இராதாமணி, இரத்தினம், சுலோசனுபாய், வல்லிக்கண்ணு ஆகியோர் முத்தமிழ் நிலையக் கலைஞர்கள் ஆவர்.

பாவேந்தரின் புரட்சிக்கவி நாடகத்தை முதலில் அரங்கேற்றுவது என முடிவு செய்தோம். நாடகத்திற்கு 'இன்ப இரவு' அல்லது 'பாரதிதாசன் எண்ணங்கள்' என்ற பெயர் சூட்டப்பட்டது. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் ஓர் இரவில் ஒருங்கே நடத்துவது என முடிவு செய்தோம். 'இன்ப இரவு' நாடகத்துக்கான ஒத்திகை சுறுசுறுப்பாக நடத்தப்பட்டது. 2-1-44இல் முத்தமிழ் நிலையக் கட்டிடத்தில், நிலையத்தின் சார்பாகத் தந்தை பெரியாருக்கு ஒரு வரவேற்பு வழங்கப்பட்டது. அச்செய்தி 8-1-44 குடியரசு இதழில் விரிவாக வெளியிடப்பட்டது. அச்செய்தியும்,வரவேற்புக்கு நன்றிகூறிப் பெரியார் பேசிய பேச்சும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

***செய்தி:***

சென்னை சென்தோம் ஐரோடில், புதுவை பாரதிதாசன்

அவர்களது ஆதரவில் தோழர்கள் பா.மு.சு.முருகு.சுப்பிர மணியம் செட்டியார், மு செல்லப்ப ரெட்டியார், கா. கப்ருபண்ணன் முதலிய அறிஞர்களால் துவக்கப் பட்டிருக்கும் 'முத்தமிழ் நிலையம்' என்னும் பெயர் கொண்ட கழகத்திற்கு வந்து தங்களுடைய மரியாதை யைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று பெரியார் ஈ.வெ.ரா அழைக்கப்பட்டார். அதற்கிணங்க 2-ஆம் தேதி பகல்,பெரியார் முத்தமிழ் நிலையத்துக்குக் சென்றார். அங்கு நிலையத்தைச் சேர்ந்த தோழர்கள் அவரை அன் புடன் வரவேற்று விருந்தளித்தார்கள்.விருந்தில் தோழர் கள் சிந்தனைச்சிற்பி மா.சிங்காரவேலு, 'லிபரேட்டர்' பத்திரிகையின் துணையாசிரியர் க.அப்பாதுரை எம்.ஏ., ஆகியவர்களும் மற்றும் நடிகையர் அரங்க நாயகி, முனி ரத்தினம்மா, இராதாமணி, சுலோசனுபாய் முதலிய வர்களும், பரதநாட்டியம் பயிற்றும் தோழர் இராமசாமிப் பிள்ளை அவர்களும், ஓரியண்டல் நாட்டியம் பயிற்றும் வங்காளத்தைச் சேர்ந்த தேவிபிரசாத் அவர்களும், இசைப்புலவர்ஞானமணி அவர்களும், புதுவை பாரதி தாசன் அவர்களும் கலந்து கொண்டனர். விருத்திற்குப் பின் மேற்கண்ட நடிகையர்களாலும், ஆசிரியர்களாலும், பாரதிதாசன் அவர்களின் கவிதைகள் நடனமாக நடித்துக் காட்டப்பட்டன. சில வாலிபர்களால் வடநாட்டு உதய சங்கர்அவர்களின் நாட்டியமும் நடத்திக்காட்டப்பட்டது. இவைகளில் மூடநம்பிக்கைப் பாட்டுக்களோ, ஆபாச வார்த்தைகள் கொண்ட பாட்டுக்களோ இல்லாமல் கவிதைகள் பெரிதும் அறிவுக்கு விருந்தாகவும், படிப் பினைக்கேற்றதாகவும் இருந்தன. இவை முடிந்ததும் தோழர் சின்னராசு அவர்கள் பெரியாரைப் பேசுமாறு கேட்டுக் கொண்டார்.

*பெரியார் பேச்சு:*

"அன்புள்ள தோழர் பாரதிதாசன் அவர்களே! மற்றும் நடிகையர், நடிகர், பண்டிதர், ஆசிரியர், சொந்தக்காரர் அவர்களே!

இன்று உங்கள் மத்தியில் இருக்கவும் உங்கள் சங்கத்தின் கருத்துக்களையும், நோக்கங்களையும்,வேலைமுறைகளையும் உணரவும் வாய்ப்புக் கிடைத்ததற்கு நான் மிகுதியும் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பொழுது பாடப்பட்ட பாட்டுகளும் அவற்றிற்கு நடித்த நடிப்புகளும் எனக்கு மிகுதியும் மகிழ்ச்சியும் திருப்தியும் அளித்தன. இவை எனது நோக்கத்துக்கும் எதிர்பார்த்திருப்பவற்றிற்கும் பொருத்தமானதாக இருக்கின்றன. நீங்கள் செய்திருக்கும் இந்தமாதிரி ஏற்பாடு உண்மைத் தமிழர்களால் மிகவும் வரவேற்கப்பட வேண்டியதுமாகும். பாட்டுகளும் நடிப்புகளும் கடவுள்களையும் கலவித்துறையையும் பற்றிஇருப்பது காட்டுமிராண்டிக் காலத்தைக் குறிப்பதேயாகும். இன்றைய காலத்தையும் அவை குறிக்கும்' என்று சொல்லப்படுமானல், அது பிறர் உழைப்பில் வாழும் வஞ்சகக் கூட்டமான பார்ப்பனர் (பூதேவர்) களுக்கும், பாமர மக்களைச் சுரண்டிப் போக போக்கியமனுபவிக்கும் கொள்ளைக் கூட்டமான (லட்சுமிபுத்திரர்களான) செல்வவான்களுக்கும் மாத்திரமே சொந்தமானதாகும்.

பார்ப்பனீயக் கொடுமையும்,பணக்காரத் திமிர்த்தொல்லையும் ஒழிக்கப்படவேண்டும் என்று கருதுபவர்கள் கடவுள்களையும் கலவியையுமே உள்விஷயமாகக் கொண்டகதை, காவியம், கலை, சங்கீதம், நாட்டியம், இலக்கணஇலக்கியம் முதலியவற்றைக் கண்டிப்பாய் ஒழிக்க வேண்டும்.

நம்முடைய இந்த இரண்டு வேலைக்கும் மேற்கண்ட இரண்டுகூட்டமும் தடையாகவேஇருக்கும் என்பதோடு, நமக்குள் புகுந்துகொண்டே நம்முயற்சி வெற்றிபெருமல் போகச் சூழ்ச்சி செய்வார்கள்.

இதை நான் 26-11-28 இல் சென்னையில் V.P. ஆலில் என் தலைமையில் கூட்டப்பட்ட சீர்திருத்த மகாநாட்டுத் தலைமைச் சொற்பொழிவில் தெளிவாய்ச் சொல்லி இருக்கிறேன்.

நம் கலைகள், இலக்கணங்கள், இலக்கியங்கள் என்பவை இன்று நமக்குக் கேடாகவும், நம் இழிவுக்கும், மடமைக்கும், அடிமைத்தனத்துக்கும் ஆக்கமும்ஊக்கமும்தருவன வாகவும் இருப்பதற்குக் காரணம் அவை பார்ப்பனர்களாலும், மதவாதிகளாலும், இராஜாக்கள், செல்வவான்கள் ஆகியோர்களாலும் தோற்றுவிக்கப்பட்டவையும் கையாளப்பட்டவையுமேயாகும்.

மற்றும் இவர்களைப் பற்றிய விபரங்களையும், நாம்செய்ய வேண்டியவைகளையும் ஒரு மாதத்திற்குமுன் 'குடி அரசி'ல் நான் எழுதியிருப்பதுபோல் சமீபத்தில் கூட்டப் படப்போகும் முத்தமிழ் நுகர்வோர்—அதாவது இசை நுகர்வோர், நடிப்பு நுகர்வோர், பத்திரிகைவாசிப்போர் ஆகியவர்கள் மகாநாட்டில் தெளிவுபடுத்த இருக்கிறேன்.

நீங்கள் ஆரம்பித்திருக்கும் இந்தக் காரியத்திற்கு, தமிழினிடத்தில் உண்மைப்பற்றும், தமிழும் தமிழர்களும் மேன்மை அடையவேண்டும் என்ற உண்மைக்கவலையும் உள்ள ஒவ்வொரு சுத்தமான தமிழ்மகனும் ஆதரிக்கக் கடமைப்பட்டவனாவான்.

உங்களுக்கு நண்பர் பாரதிதாசன் அவர்கள் கிடைத்திருப்பது உங்கள் நல்வாய்ப்புக்கும் உங்கள் வெற்றிக்கும் அறிகுறியாயிருக்கும். இன்று, இந்த நாட்டில் தமிழும், தமிழ்க் கவியும், தமிழ் இசையும், தமிழர்களுடைய முன்னேற்றத்துக்கும், தன்மானத்துக்கும் பயன்படும்படி மக்கள் உணர, உழைக்க ஏற்ற கவிகள் செய்து மக்களை ஊக்குவிக்க அவர் ஒருவரே என் கண்ணுக்குத் தென்படுகிறார். அவரை நாம் பயன்படுத்திக் கொள்வதில்தான் நம் வெற்றியின் தன்மை இருக்கிறது.

உங்கள் கழகம் வெற்றி அடையத் தளரா முயற்சி, ஒற்றுமை, கட்டுப்பாடு என்பவைகளோடு ஒழுக்கம், நாணயம் என்பவைகளும் தக்கபடி கவனித்துப் பின்பற்ற வேண்டியதாகும். இம்மாதிரி பணிகளுக்கு என்னால் ஆன உதவியைச் செய்ய எப்போதும் காத்திருக்கிறேன்.

தமிழ்நாட்டு இளைஞர்களும், நாட்டுப்பற்று, மொழிப் பற்று,தன்மானப்பற்று உண்மையாய்க் கொண்டசெல்வ வான்களும் உங்களுக்கு உதவ வேண்டியது அவர்களது கடமை ஆகும்'' என்று கூறினர். பிறகு பெரியாருக்கு மாலையிட்டுத் தோழர் முருகு.சுப்பிரமணிய செட்டியார் வாழ்த்துக் கூறி வழியனுப்பினர்கள்.

முத்தமிழ் நிலையத்திற்கு வருகைதந்து, பெரியார் பாராட்டிச் சொற்பொழிவாற்றிய அன்று, தாங்கள் நிலை யத்திற்கு ஏதாவது பொருளுதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். பெரியார் அவர்கள் ஆவன செய் வதாகச் சொன்னர்கள், பெரியாரின் வருகைக்குப்பின் முத்தமிழ் நிலையம் புத்துணர்ச்சியோடு செயல்படத் தொடங்கியது.

இன்ப இரவு நாடகம் ஒரு கற்பனைச்சோலை; கலைக்களஞ் சியம். அதுபோன்ற ஒரு கலைநிகழ்ச்சியை இந்நாளில் காண முடியாது. ''வாழியவே சீரோங்கியதமிழகம்'' என்ற வாழ்த்துப் பல்லவியுடன் 'இன்ப இரவு' துவங்கும். இது சிம்மேந்திரமத்திபராகம், தாளம், பல்லவி, இரண் டாவது கல்யாணி ராகத்தில் ''நீலவான் மீது தோன்றும் கோலமென்ன சொல்வேன் தோழி'' என்ற பாட்டு. அது முடிந்ததும் வள்ளிக்கண்ணு என்ற பெண்மணியின் 'கர்னடக சதுர் அலாரிப்பு' நிகழ்ச்சி இடம்பெறும்.

நடிகர்கள் ஒப்பனை செய்யச் சிறிது நேரமாகும் போது திரு.வேணுகோபால் சர்மா† மேடையில் தோன்றி விகடம் செய்வார். அதாவது பாபநாசம் சிவன், விளாத்திகுளம் சாமி முதலிய இசைப்புலவர்கள் பாடுவதுபோலப்பாடி

---

† திரு. வேணுகோபால் சர்மா இன்று புகழ் பெற்ற ஓவியர், மத் திய அரசின் பரிசைப் பெற்ற திருவள்ளுவர் ஓவியம் இவரால் வரையப்பட்டது. நுட்பமான இசையறிவும், போலச் செய்யும் ஆற்றலும் (mimicry) மிக்கவர். பாவேந்தரோடு நீண்ட நாள் நெருக்கமாகப் பழகியவர்.

யும், பிடில், மிருதங்கம், கடம் முதலிய பக்கவாத்தியங்களை வாயிலேயே இசைத்தும் மக்களை மகிழ்விப்பார்

முதலில் சிக்கல் இராஜகோபாலன் (இன்றைய கவிஞர் சுரதா) அவர்கள் ''மாடுமேய்ப்பவனிடம் எனக்கென்ன வேலை?'' என்ற பாடலை உரைநடையாகச் (இயல்) சொல்வார். அடுத்து ஞானமணி அதையே இசையோடு பாடுவார். T.V இராதாமணி என்ற பெண் அப்பாட்டுக்கு அபிநயம் பிடித்து அடுத்தாற்போல் ஆடுவார். இஃது முதலில் துவங்கும் முத்தமிழ் நிகழ்ச்சி.

பின்னர் கீழ்க்கண்ட பாவேந்தர் பாடல்களுக்குப் பரத நாட்டியமும், ஓரியண்டல் நடனமும் நடைபெறும்,

''அதோ பாரடி அவரே என்கணவர்''
''மாடுமேய்ப்பவனிடம எனக் கென்ன வேலை''
''கூடைமுறங்கள் முடித்து விட்டோம் காடை இறக்கை போலே''
''பாண்டியன் என் சொல்லைத் தாண்டிப் போனுண்டி''
''சோலையில் ஓர்நாள் என்னையே தொட்டிழுத்து முத்தமிட்டான்''
''உவகை, உவகை உலகத்தாயின் கூத்து''

திருவாளர் ஞானமணி† இசை அமைப்பதிலும் பாடுவதிலும் தன்னிகரற்ற மாமேதை என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழகத்தில் எத்தனையோ இசைப்புலவர்கள் பாடுவதையும், இசை அமைத்திருப்பதையும் கேட்டிருக்கிறேன். ஆனால் ஞானமணிபோல் திறமைமிக்க இசைப்புலவர் சொற்பம்.

''மாடுமேய்ப்பவனிடம் எனக்கென்ன வேலை—வஞ்சி என்றழைத்தான் ஏனென்றேன் மாலை'' என்ற பாடலை

†திருவாளர் எம. எஸ். ஞானமணி தற்போது சென்னையில் இருக்கிறார். தெலுங்குப்படங்களுக்கு இசையமைத்துக் கொண்டிருக்கிறார். 21—1—72 ஆம் நாள் வெளியான ஆனந்த விகடனில் இன்றைய தமிழக முதலவர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் 'நான் ஏன் பிறந்தேன?' என்ற பெயரில் எழுதிய தன்வரலாற்றுக் கட்டுரையில் பாராட்டி எழுதியிருக்கும இசைப் புலவர் ஞானமணி 'இவரே'

ஞானமணி பியாகடை ராகத்தில் பாடும்போது, ஆயிரம் முறை கேட்டாலும் ஆசை தீராது. அப்படியே ஒவ்வொரு பாடலும்.

"வெய்யில் தாழவரச் சொல்லடி-இந்தத்
தையல சொன்னதாகச் சொல்லடி"—

என்ற பாடலின் கடைசியில் உள்ள

"தாய் அயலூர் சென்று விட்டாள் நாளை-சென்று
தான் வருவாள் இன்று நல்லவேளை
வாய் மணக்கக் கள்ளொழுகும் பாளை-நாள்
மாறி விட்டால் ஆசை எல்லாம் தூளே"

என்ற அடிகளை சங்கராபரணம் ராகத்தில் ஞானமணி பாடுவதும், இரத்தினம் என்ற பெண் அபிநயம் பிடிப்பதும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். நண்பர்கள் சிலர் இந்தப்பாடலைத் திரும்பத் திரும்பப் பாடும்படி ஞானமணியை வற்புறுத்திக் கேட்பார்கள்.

"பாண்டியன் என் சொல்லைத் தாண்டிப் போனுண்டி" என்ற பாடல் கல்யாணிராகம். அதற்கேற்பப் பரதநாட்டியம் நடைபெறும். 'உவகை உவகை' என்று தொடங்கும் பாடலுக்கு ஓரியண்டல் நடனம் ஆடுவார்கள்.

கடைசி நிகழ்ச்சியாக புரட்சிக்கவி நாடகம் நடைபெறும். காப்பியமாக இருந்த புரட்சிக்கவியை அழகிய மேடை நாடகமாக மாற்றி எழுதினார் பாவேந்தர். ஞானமணி புரட்சிக்கவி உதாரனுக நடித்தார். செல்வி சரசுவதி என்ற பெண் அமுதவல்லியாக நடித்தாள். அப்பெண்ணுக்கு அப்போது 17 வயதிருக்கும். இளமை அழகு இசை, நடிப்பு ஆகிய எல்லாம் ஒருங்கே அப்பெண்ணிடம் அமைந்திருந்ததாகப் பாவேந்தரே அடிக்கடி பாராட்டிப் பேசுவார். முதலில் உதாரனுக நடிக்க மறுத்த ஞானமணி கூட, அப்பெண்ணின் அழகைக் கண்டு மீண்டும் நடிக்க ஒப்புக் கொண்டார்.

இன்ப இரவுக்கான விளம்பரத் தட்டிகள், திரைச்சீலைகள் யாவும் சென்னையைச் சேர்ந்த சிறந்த ஓவியர்களைக்

கொண்டு எழுதப்பட்டன. இன்ப இரவு நாடகத்தை முதன் முதலில் சென்னை நகரிலேயே அரங்கேற்ற முயற்சி செய்தோம். அங்கு 'தியேட்டர்' கிடைக்காத காரணத்தால் சேலம் சென்ட்ரல் தியேட்டரில் இன்ப இரவை அரங்கேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 31—1—44 ஆம் நாள் நடிக-நடிகையர்கள் எல்லாரும் சேலம் வந்து சேர்ந்தார்கள்.

5—2—44ஆம் நாள் சேலம் நீதிக் கட்சிப் பிரமுகரும், சுவர்ணும்பிகா உந்து வண்டி உரிமையாளருமான இராவ்சாகிப் பி. இரத்தினசாமி அவர்கள் தலைமையில் இன்ப இரவு நாடகம் முதன்முதலாக அரங்கேறியது. அதன் பின்னர் சேலம் கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டர், தோரமங்கலம் புலவரேறு அ.வரத நஞ்சைய பிள்ளை, இராவ் சாகிப் குமாரசாமிபிள்ளை ஆகியவர்கள் தலைமையில் தொடர்ந்து நடைபெற்றது. கடைசியாக 9—2—44ஆம் நாள் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது. பாவேந்தர் பாரதிதாசன் அவர்களும் 31—1—44 லிருந்து 10—2—44 வரை சேலத்தில் தங்கியிருந்தார்.

பிறகு இன்ப இரவு நாடகக்குழு சேலத்திலிருந்து நாமக் கல்லுக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அங்கு ஒருநாள் தான் நடைபெற்றது. நாடகத்துக்கு நல்ல வசூல் என்றாலும் எனக்கு அதைத் தொடர்ந்து நடத்தவிருப்ப மில்லை. காரணம் ஒரு நாடகக் குழுவைக் கட்டிக் காப்பது என்பது எவ்வளவு கடினமானது என்பது எனக்கு முதலில் தெரியாமல் போய்விட்டது. நடிகர்கள் நடிகைகள், இசைக்குழுவினர் நாட்டியக்காரர், ஒப்பனைக்காரர் உட்பட ஏறக்குறைய இருபத்தைந்து பேர்களுக்குமேல் இருந்தார்கள் அவர்களையெல்லாம் இழுத்துக்கொண்டு தமிழகமெல்லாம் சுற்றித் திரிவது எனக்குப் பெரும் மலைப்பாக இருந்தது. எனது அனுபவக்குறைவே இதற்குக் காரணம் என்பதை அறிந்தேன். பலமுறை சிந்தித்

துப் பார்த்தேன். மேலும் தொடர்ந்து நடத்த என்னல் இயலாது என்பதை முடிவாக உணர்ந்துகொண்டநான் முருகு சுப்பிரமணியத்திடம் ''விருப்பமானல் நீங்களே நடத்திக்கொள்ளுங்கள்'' என்று சொன்னேன். அவர் களாலும் இயலாது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே இன்ப இரவு நாடகக்குழு கலைக்கப்பட்டது. கலைஞர்கள் தங்களுக்குரிய ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியாக ஊர் திரும்பினர்.

இந்த இன்ப இரவு நாடகம் நடத்தியதில் எனக்குப் பொருள் இழப்பு ஏற்பட்டாலும், கவிஞர் சுரதா, வேணு கோபால் சர்மா, ஞானமணி போன்ருேரோடு நெருங் கிப் பழகும் நல்ல வாய்ப்பினைப் பெற்று மகிழ்ந்தேன். இவர்களுடைய மேதாவிலாசம் அப்பொழுதே எனக்குப் புலப்பட்டது.

கவிஞர் சுரதாவுக்கு அப்போது இருபது வயதிருக்கும். சுறு சுறுப்பாகவும் துடிப்பாகவும் காணப்படுவார். அப் போதே கவிதை எழுதிக் கொண்டுவந்து பாவேந்தரிடம் காண்பிப்பார். பாட்டின் நுட்பத்தைப் படித்துணர்ந்த பாவேந்தர் 'சுரதாவுக்கு இணை சுரதாதான்' என்று வாயாரப் பாராட்டியதை என் காதாரக் கேட்டு மகிழ்ந் திருக்கிறேன். அப்போது கவிஞர் சுரதா எழுதிப் பாவேந் தரிடம் காட்டிப் பாராட்டுப் பெற்ற சிலவரிகள் இன்றும் என் நினைவில் இருக்கின்றன. அவ்வரிகள் வருமாறு:

''தின்னும் இதழ் பூரிக்க நிலா முற்றத்தில்
சீக்கிரமாய்ப் போயமர்ந்தேன்; வஞ்சி வந்தே
என்ன அத்தான் ஊர்ச்சேதி? அம்மா அப்பா
எல்லாரும் நலந்தானு?

"வேர்த்துப் புழுங்காத மார்கழியில் குளிருக்குப்
போர்த்துத்தான் வந்தது புத்தேடு."

***சரசுவதி திருமணம்:***

இன்ப இரவு நாடக ஒத்திகை சென்னையில் நடந்து கொண்டிருந்தபோது, என் சொந்த அலுவல் காரண

மாக நான் போடிநாய்க்கன்பட்டிக்குத் திரும்பவேண்டி யிருந்தது. நாடகப் பொறுப்புகளை முருகு. சுப்பிர மணியத்திடம் ஒப்படைத்து விட்டு நான் ஊருக்குத் திரும்பினேன். நான் சென்றமுறை காரைக்குடிகாத்தான் சென்றிருந்தபோது பாவேந்தரின் மூத்த மகளான சரசு வதியின் திருமணம் பற்றிப் பேச்சு நடந்தது. திரு. வை. சு. சண்முகம் செட்டியாரும் அவர் மனைவி மஞ்சுளாபாய் அம்மையாரும் சரசுவதிக்கு மாப்பிள்ளை பார்க்கும் வேலை யில் தீவிரமாக இருந்தனர். வேலூர் கண்டர் உயர் நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து கொண் டிருந்த தமிழாசிரியர் புலவர். கண்ணப்பன் அவர்களே அந்த வரன். திருப்பூர் திராவிடர்கழகத் தோழரும் புர வலருமான திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம் வீட்டில் புலவர் கண்ணப்பனும், மஞ்சுளாபாயும் எதிர்பாராமல் சந்தித்துப் பேசிய போது இந்தத் திருமணப் பேச்சுத் துவங்கியது. பிறகு வை. சு. சண்முகம் தம்பதியர் இத் திருமண முயற்சியில் முன்னின்று எல்லா ஏற்பாடுகளும் செய்தனர்.

நான் என் சொந்த ஊரான போடிநாய்க்கன்பட்டியில் இருந்தபோது 8—1—44 ஆம் நாள் பாரதிதாசன் சரசு வதியின் திருமணம் பற்றிஎனக்கு ஒரு கடிதம் எழுதி யிருந்தார். அக்கடிதம் வருமாறு!

புதுச்சேரி
8—1—44

அன்புள்ள திரு. ரெட்டியார்
அவர்களுக்கு வணக்கம்,

நானும், வை. சு. வும், கோனப்பட்டார்களும் திருமண விஷயமாகப் பேசி முடிவு செய்த திட்டப்படி, இன்று வை சு. வுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளேன். அந்தக் கடிதத்தின் நகலை இதில் வைத்திருக்கிறேன், இதை மன தில் வைத்துக் கொண்டு, தயவு செய்து தாங்கள் கரூருக்கு நேரில் மாப்பிள்ளை இருக்கும் இடம் தேடிச்

சென்று, நான் தங்களை அனுப்பியதாகச் சொல்லிப் பேசவும், அதில் சொல்லியுள்ள திட்டங்களை அவர்களிடம் (கண்ணப்பரிடம்) கூறிப் பதில் தெரிந்து எழுதவும். ஏன் தங்களை அனுப்புகிறேன் என்றால் வை. சு. மூலமாகத் தான் மணமகனுடைய கருத்து எனக்குத் தெரிவிக்கப் பட்டது. நேரில் என்னிடம் திருமணப்பேச்சு நடக்கவில்லை. ஆதலால் ஒருவருக்கிருவராகக் கலந்து பேச வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

**பாரதிதாசன்**

கவிஞரின் கடிதப்படி நான் கரூர் சென்று கழகத்தோழர் திரு. இரத்தினம் (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்) அவர்களைத் தேடி அடைந்தேன். அவர் வீட்டில் மாப்பிள்ளை கண்ணப்பர் அவர்களும், மஞ்சுளாபாய் அம்மையாரும், ஈரோடு திரு. சண்முக வேலாயுதம் அவர்களும் இருந்தார்கள். பாவேந்தர் என்னை அனுப்பிவைத்திருப்பதாகச் சொல்லி, விபரங்களையும் சொன்னேன். அன்று மாலை நாங்கள் எல்லாரும் மாப்பிள்ளை ஊரான கட்டிப் பாளையத்திற்கு சென்றோம். அன்றிரவே என்னைத் தவிர மாப்பிள்ளை உட்பட, அவர்கள் நால்வரும் பாவேந்தர் அவர்களைக் காணச் சென்னை முத்தமிழ் நிலையத்துக்குச் சென்றார்கள்.

நான் நேராகப் போடிநாய்க்கன்பட்டி வந்து, மாப்பிள்ளை எனக்குப் பிடித்திருப்பதாகவும், கடிதத்தில் குறிப்பிட்டிருந்த திட்டங்களுக்கு அவர்கள் ஒத்துக்கொண்டதாகவும் பாவேந்தருக்கு எழுதினேன். பாவேந்தரிடமிருந்து உடனே எனக்குக் கீழ்க்கண்ட கடிதம் வந்தது.

புதுச்சேரி
19—1—44

தோழர்கள் செல்லப்ப ரெட்டியார், கருப்பணன், கிருஷ்ணராஜ் அவர்களுக்கு,

தங்களுக்கு நான் எழுதினேனென்று முருகு இருந்து விட்ட விஷயமும், முருகு எழுதினாரென்று நான் இருந்து

விட்ட விஷயமும் இன்று விளங்கிற்று! திருமணத்தில் தாலிகட்ட மறந்தது போல் இருக்கிறது இந்த விஷயம். தோழர் கா. பெருமாளுக்கும் தெரிவிக்க. பிறருக்கும் தெரிவிக்க. 75 அழைப்பிதழ் அனுப்பியுள்ளேன்.

பெண்ணுடன் 20-1-44ஆம் தேதி இரவு புதுவையில் இரயிலேறி, 21-1-44ல் திருச்சி ஜங்சனில் இறங்கி நேரே (காலை) வேதாசலம் வக்கீல் வீட்டில் இறங்கி -அங்கு- ரிஜிஸ்டர் முடித்து, உடனே மத்தியான சாப் பாடு கே. ஏ. பி. வீட்டில் முடித்துக்கொண்டு—மாலை கருணாநிதி* பார்க்கில் காபி சாப்பிட்டு—இரவு சாப்பாட் டிற்கு உடனே அதாவது 21-4-80ஆம் தேதி இரவு கட்டிப்பாளையம் நோக்கிப் புகலூர் போகவேண்டியது. இந்தத்திட்டம் திருச்சியில் அனைவர்க்கும் தெரிவித்தாய் விட்டது.

நாமக்கல் நம் தோழர்கள் இவைகளைஅறியும்படி செய்க. தாங்கள் மூவரும் திருச்சிக்கு வந்து அங்கிருந்து கட்டிப் பாளையத்திற்கு வந்து, திருமணத்தைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள
*பாரதிதாசன்*

கடிதம் 21—1—44ஆம் தேதிதான் கிடைத்தது. ஆத லால் உடனே நானும், கிருஷ்ணராஜ், கா.கருப்பணன், திருச்செங்கோடு என்.கே.பி.வேல், கா. பெருமாள் முத லிய தோழர்களும் மாலை 6 மணிக்குக் கட்டிப்பாளையம் போய்ச் சேர்ந்தோம். மறுநாட்காலை (22-1-44) 9. மணிக்குச் சேலம் கல்லூரி முதல்வர் திரு. இராமசாமிக் கவுண்டர் தலைமையில் மணமக்களுக்குப் பாராட்டுக் கூட் டம் நடைபெற்றது. பெரியார், அறிஞர் அண்ணா ஆகி யோர் பேசினார்கள். முத்தமிழ் நிலையப் பங்குதாரர்க ளாகிய முருகு சுப்பிரமணியம் முதலிய தோழர்களும் வந்திருந்தார்கள். மக்கட் கூட்டம் நிறைந்திருந்தது.

*இது திருச்சிராப்பள்ளிக்கழகத் தோழர் சங்கரன் வீடு.

பாராட்டுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. அன்று பெரியார் அவர்களை இடைவேளையில் பார்த்து ஏதாவது முத்தமிழ் நிலையத்துக்குப் பொருளுதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். ஊருக்குப் போய்க் கவனிப்பதாகச் சொன்னார்; 30-1-44 ஆம் தேதி தாம் சொன்னபடியே பாவேந்தர் முகவரிக்கு ரூ. 250/–க்குக் காசோலையொன்று அனுப்பிவைத்தார்.

### பாரதிதாசன் நிதி:

1945ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 10ஆம் நாள். பாரதிதாசனுக்கு நிதி சேர்த்துக் கொடுக்கவேண்டும் என்ற நினைவு எனக்கு எதிர்பாராமல் திடீரென்று வந்தது. அந்த விபரத்தை என் நாமக்கல் நண்பர் கா.கருப்பணன் அவர்களிடம் சொன்னேன். 'செய்யலாம்' என்று சொல்லி என் எண்ணத்திற்கு அவரும் ஆதரவு காட்டினார். 25-2-1945 ஆம் நாள் நான் சென்னைக்குச் சென்று பெரியார் ஈ.வெ.ரா. அவர்களைப் பார்த்து, பாரதிதாசன் அவர்களுக்கு நிதி சேர்த்து அளிக்க விரும்புவதாகச் சொல்லி, அவர்களது சம்மதத்தைக் கேட்டேன். அதற்குப் பெரியாரவர்கள் ''நல்ல காரியம்; ஆனால் என் பொறுப்பில் அதை வைத்துக்கொள்ள முடியாது. என்னலான எல்லா உதவிகளையும் 'செய்கிறேன்' என்று கூறித் தம் சம்மதத்தைத் தெரிவித்தார்கள். பெரியார் இவ்வாறு சொன்னதைக்கேட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்தேன், பெறற்கரிய பேறு பெற்றதைப்போல.

மறுநாள் திருவாளர்கள் எஸ்.இராமநாதன், டாக்டர். ஏ. கிருஷ்ணசாமி, எஸ்.இலக்குமிரதன் பாரதி முதலியவர்களைக்கண்டு நிதிக்குழுவில் உறுப்பினர்களாக இருக்க ஒப்புதல் கேட்டேன்; அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். மற்றும் அறிஞர் அண்ணா, பேராசிரியர் அன்பழகன். சர்.ஆர்.கே.சண்முகம் செட்டியார், முன்னாள் அமைச்சர் முத்தையா முதலியார், சேலம் கல்லூரி முதல்வர் அ. இராமசாமிக் கவுண்டர் ஆகிய எல்லாருக்கும் குழுவில்

உறுப்பினராக இருக்கும்படி கோரி கடிதம் எழுதினேன். எல்லாரும் ஒப்புதல் அளித்தார்கள். எங்கள் ஊரான போடிநாயக்கன்பட்டி என். கிருஷ்ணராஜ் நிதிக்குழுத் தலைவராக நியமிக்கப்பட்டார். பின்னர் நிதிக்குழு கீழ்க் கண்டவாறு ஒரு வேண்டுகோள் வெளியிட்டது:

திருவாளர்களான பெரியார் ஈ.வெ.ரா., சர். ஆர்.கே. சண்முகம், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, மாஜிமந்திரி எஸ்.ராமநாதன், மாஜிமந்திரி எஸ். முத்தையா முதலியார். சி.என். அண்ணாதுரை, என்.அர்ச்சுணன், அ. இராமசாமிக் கவுண்டர், எஸ்.எல்.பாரதி, எஸ்.ஆர். சுப்பிரமணியம், என். சங்கரன், வி.டி. ஆதிலட்சுமி அம்மாள், இந்திராணி பாலசுப்பிரமணியம், ஏ. திருநாவுக்கரசு, என். கிருஷ்ணராஜ் ரெட்டியார், கே.கருப்பண்ணன், எம்.செல்லப்ப ரெட்டியார், ஏ.வி.பி.ஆசைத் தம்பி, எஸ்.வேதரத்னம். மணவை ரெ. திருமலைசாமி (நகரதூதன் ஆசிரியர்) ஆகியோர் விடுக்கும் அறிக்கை:

தமிழ்நாட்டின் ஒப்புயர்வற்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ்ச்சமூகத்திற்கும் பெரும் சேவை செய்திருக்கிறார்கள். அவர்களுடைய பெருந்தொண்டிற்கு நன்றி செலுத்தும் பான்மையோடு ஒரு நிதி திரட்டிக் கவிஞர் அவர்கட்குக்கூடிய விரைவில் அளிப்பதெனத் தீர்மானித்துள்ளோம். இந்தக் காரியத்தை நாம் நிறைவேற்றினோமானால், கவிஞரின் சேவைக்கு ஓரளவு நாம் நன்றியும் பாராட்டும் செய்தவர்களாவோம். ஆதலால் தமிழ் அன்பர்கள் அனைவரும் இந்த நிதிக்குத் தாராளமாக நன்கொடைகள் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிதிக்கு பணம் அனுப்பும் அன்பர்கள் பாரதிதாசன் நிதிக்காக என்று குறிப்பிட்டுக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கக் கோருகிறோம்.

என். கிருஷ்ணராஜ் ரெட்டியார்
நாமக்கல் (சேலம் ஜில்லா)

சென்னையிலிருந்து முல்லை ப. முத்தையா அவர்கள் நூறு இரசீதுப்புத்தகங்கள் (ஒவ்வொன்றும் நூறு இரசீதுகள் அடங்கியது) நன்கொடையாக அனுப்பி வைத்தார். குடியரசு முதலிய எல்லாச் செய்திதாள்களுக்கும் நிதி வேண்டுகோள் அனுப்பிவைத்தேன். தமிழகமெங்கும், பல நகரங்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும், மற்றும் இலங்கை சிங்கப்பூர் முதலிய நகரங்களிலிருந்தும் இரசீதுப் புத்தகங்கள் அனுப்பிவைக்கும்படி கடிதங்கள் வந்தன. அவ்வாறே எல்லா ஊர்களுக்கும் அனுப்பி வைத்தேன். சில ஊர்களுக்கு நானே நிதிவசூலுக்குச் சென்றிருந்தேன், வெளியூர்களிலிருந்து பணவிடையில் வரும் பணத்தை வாங்கிக் கா. கருப்பணன் அவர்கள் பாரதிதாசன் நிதிக்கணக்கில் வங்கியில் போட்டுவைப்பார்.

பெரியார் ஈ.வே. ரா. அவர்களிடமிருந்து என் பெயருக்கு 15-6-45 ஆம் நாள் ரூ 352/-க்கு காசோலை ஒன்று வந்தது. அக்காசோலையோடு கீழ்க்கண்டவாறு ஒரு குறிப்பும் வந்தது.

| | | |
|---|---|---|
| பெரியார் ஈ வெ.ரா. நன்கொடை | ரூ. | 150 00 |
| திரு. மத்திரன் அவர்கள் (திண்டுக்கல்) | ரூ. | 101 00 |
| திரு.ஜீ. இலக்ஷுமணன் (கல்வார்ப்பட்டி) | ரூ. | 101 00 |
| | ஆக ரூ. | 352 00 |

திரு. மத்திரன் அவர்களும், திரு இலக்ஷுமணன் அவர்களும் பெரியார் பெயருக்கு நன்கொடைகளை அனுப்பி வைத்த காரணத்தால், பெரியார் அவர்கள் தமது தொகையையும் சேர்த்து அனுப்பி வைந்தார்.

இராசிபுரம் 'பாரதிதாசன் நிதி நாடகக் குழுவினர்' காலஞ்சென்ற சலகை ப. கண்ணன் அவர்களால் தீட்டப் பட்ட 'வீரவாலி' நாடகத்தை நடத்தி, அதன்மூலம் வசூலான ரூபாய் 1084ஐயும், பாவேந்தர்அவர்களிடமே 22-11-45 ஆம் நாள் கொடுத்தனர். அதன்பின்னர் என்

உடல்நலக் குறைவால் நிதிவசூல் சிறிது மந்தமாக இருந்தது.

உடல் நலம் பெற்றவுடன் நான் சென்னை சென்றேன். சலகை ப.கண்ணன் அவர்கள் அவ்வமயம் சென்னையில் இருந்தார். திருவாளர்கள் ப. கண்ணன், என்.வி. நடராசன், டி.என். இராமன் ஆகியவர்களிடம் நிதி விஷயத்தைச் சொன்னேன். அதாவது சென்னையில் ஒருவிழா ஏற்பாடு செய்து வசூலான நிதிப்பணத்தை வழங்கிவிடலாம்என்றும், இல்லையேல் நாமக்கல்லிலேயே கொடுத்துவிடுகிறோம் என்றும் சொன்னேன். அதற்கு அவர்கள் அறிஞர் அண்ணா தலைமையில் நிதி ஆதரவுக் கூட்டம் போட்டு மற்ற கட்சியினரையும் அழைத்து ஆவனசெய்து விரைவில் நிதி கொடுத்துவிடலாம் எனக் கூறினர். அண்ணாவுக்கும் இது விபரத்தைக் கடிதம் எழுதிக் கேட்கலாமென்றும் சொன்னார்கள். அவ்வாறே கடிதம் எழுதி அண்ணாவின் சம்மதம் பெற்றோம். 1946ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12ஆம் நாள் மாலை 5-30 மணிக்குக் கோகலே மண்டபத்தில் பாரதிதாசன் நிதி ஆதரவுக் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் அறிஞர் அண்ணா, எஸ்.எல்.பாரதி, டாக்டர்ஏ.கிருஷ்ணசாமி பார்-அட்-லா கி.வ.ஜகன்னாதன், கம்பதாசன் ஆகியோர் பேசினார்கள். அறிஞர் அண்ணா பேசும்போது. இங்கு வந்துள்ள பெரியவர்கள், அவரவர்களுடைய நன்கொடைத் தொகையை இங்கேயே கூறிவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தம்முடைய அன்பளிப்பு ரூ 150/ என்று சொன்னார். பிறகு டாக்டர் ஏ.கிருஷ்ணசாமி ரூ 150ம் கவிஞர் கம்பதாசன் ரூ 500/ம் கி.வ.ஜ. ரூ 25/ம் நன்கொடை தருவதாகச் சொன்னார்கள். மற்றவர்களின் தொகை என்ன என்பது இப்பொழுது எனக்கு நினைவில்லை.

பாவேந்தர் நிதிவிஷயத்தில் அறிஞர் அண்ணாவின் தலையீடு ஏற்பட்டவுடன், புதுமுறுக்குடன் எல்லாரும் செயல்பட்டனர். நிதி வேகமாக வந்து குவியத்தொடங்கியது. 29-7-46 ஆம் நாள் பாவேந்தரின் நிதியளிப்புவிழா

சென்னை பச்சையப்பர் திடலில் நடைபெற்றது. நாவலர் ச. சோமசுந்தரபாரதியார் எம்.ஏ.,பி.எல்., அவர்கள் விழாவுக்குத் தலைமைதாங்கினார். அறிஞர் அண்ணா தமிழக மக்கள் சார்பில் பொன்னாடை போர்த்தி பாவேந்தருக்கு ரூ.24,300/- ‡ (இருபத்து நான்காயிரத்து முந்நூறு ரூபாய்) அடங்கிய பொற்கிழியை வழங்கினார். தமிழ்மக்கள் வெள்ளம்போல் திரண்டிருந்தனர். சலகை ப. கண்ணனும், டி.என். இராமனும் நிதியளிப்புவிழா மலர் ஒன்று வெளியிட்டனர். தமிழ் நாட்டின் சிறந்த அறிஞர் பலர் அதில் பாவேந்தரைப்பற்றிக் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

நான் நாமக்கல்லில் நிதிக்குழுவைத் தொடங்கியதிலிருந்து, சென்னையில் பாவேந்தருக்கு நிதிகொடுத்த வரையில் எனக்கென்று ஏற்பட்ட எந்தச்செலவுக்கும் என் கைப்பொறுப்பில்தான் செலவு செய்தேன். நாமக்கல் திரு. கா. கருப்பணன் அவர்கள் நிதியளிக்கும் விஷயத்தில் எனக்கு உதவியாக இருந்து தொண்டாற்றினார்கள். பாவேந்தருக்கு நிதி கொடுக்கும் விஷயத்தில் பெரியாருக்கு உடன்பாடு இல்லை என்று பின்னர் பலரால் பேசப்பட்டது. பாவேந்தர் கூட இது விஷயத்தில் பெரியார் மீது ஐயங்கொண்டிருக்கலாம். பெரியார் துவக்க காலத்தில் தாமே ரூ. 150/- நன்கொடை வழங்கியதோடு, ஊக்கம் காட்டினார். ஆனால் 'பாவேந்தர் நிதி' இருபத்தையாயிரம் ரூபாயை எட்டிப் பிடிக்கும் என்று அவர் நினைக்கவில்லை. அந்த நாளில் கால் இலக்கம் என்பது மிகப் பெரிய தொகை. (நாமக்கல் கவிஞருக்கே அந்நாளில் ரூ. 1200/- தான் வழங்கினார்கள் வசதிமிக்க பேராயக் கட்சியார்).

---

‡ பாவேந்தருக்கு வழங்கிய பொற்கிழி ரூ. 25,000 என்று பொதுவாக எல்லாரும் குறிப்பிடுவதுண்டு, உண்மையாகக் கொடுத்த தொகை ரூ. 24,300/. தான்.

இவ்வளவு பெரிய தொகையை ஒரு நல்ல கவிஞர் கையில்கொடுத்து அவரைச் சோம்பேறி ஆக்குகிருர்களே என்று பெரியார் அன்று கருதினர். ஆனல் நிதிவசூலுக்கு அவர் எப்போதும் தடைகூறியதில்லை.

பாவேந்தருக்கு நிதியளிப்புவிழா ஏற்பாடு செய்த நேரத்தில் 'குயில்' என்ற கவிதை ஏடு ஒன்றினைத் துவங்க வேண்டும் என்று திரு. டி.என்.ராமனும் பாவேந்தரும் திட்டமிட்டனர். அது சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபடுவதற்காக நானும் பாவேந்தரும் 10-12-46 இல் புதுவையிலிருந்து புறப்பட்டுச் சென்ருேம். அப்போது நான் ஏற்கெனவே எழுதிவைத்திருந்த 'நான் கண்ட காதல்' என்ற ஒரு கட்டுரையை அவரிடம் தந்தேன். பாவேந்தர் அதைப் படித்துப்பார்த்து, மிகவும் நன்ருக இருப்பதாகச் சொல்லிப்பாராட்டி, அக்கட்டுரையின் தலைப்பில் 'கனக சுப்புரத்தினம் கவிஞர் கழகத்தைச் சேர்ந்த நாமக்கல் மு. செல்லப்பன்' என்பதாக எழுதி அக்கட்டுரையை குயிலில் வெளியிட்டார்கள். அதை என்னுடைய பெறற்கரிய பேறு என்று கருதிப் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் அடைந்தேன்; இன்றும் அடைகிறேன்.

1943ஆம் ஆண்டு பாவேந்தருக்கு வயது 53. எனக்கு வயது 33. நான் அவர்களைவிட இருபது ஆண்டு இளையவன், என்ருலும் பாவேந்தர் என்னிடத்தில் அளவிலா அன்பும் பெருமதிப்பும் வைத்திருந்தார். 'ஐயா' அல்லது 'ரெட்டியார்!' என்றுதான் என்னை எப்போதும் அழைப்பார். எவ்வளவு கோபமாய் இருந்தாலும் நான் சொன்ஞல் பாவேந்தர் கேட்பார்; மறுத்து ஒன்றும் சொல்ல மாட்டார்.

'நீங்கள் நிதி விஷயத்தைத் துவக்காமலிருந்தால், வேறு யாரும் துவக்கியிருக்கமாட்டார்கள்' என்று என்னைப் பாராட்டிக் கூறுவர்

'யாரோ நாமக்கல் ரெட்டியாராம்; அவரால் சுப்புரத்தினத்துக்கு நல்லகாலம் வந்து விட்டது' என்று புதுவை மக்கள் பேசிக்கொள்வதாகப் பாவேந்தர் என்னிடம் பெருமையாகச் சொல்வார்.

வாரத்திற்கு ஒரு கடிதமாவது புதுவையிலிருந்து எனக்கு வரும்; அவ்வாறே நானும் எழுதுவேன். அவரது புதிய கவிதைநூல் அச்சாகி வந்தால் உடனே எனக்கு அன்பளிப்பாக அனுப்பி வைப்பார். பாவேந்தர் எப்போது பணத்திற்கு எழுதினாலும், உடனே தந்தி மணியார்டரில் பணம் அனுப்புவதுதான் என் வழக்கம்.

பாவேந்தரை நினைக்கும்போதெல்லாம், ''தமிழ்த்தாய் அணிந்திராத அணியையெல்லாம் சூட்டி, அவளை அலங்கரித்தவர். இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற கவிஞராக வாழ்ந்த மாமேதை" என்றுநான் எண்ணிஎண்ணி மகிழ்வதுண்டு. முதுமையடைந்துவிட்ட என் உள்ளத்தில் பாவேந்தர் நினைவு இன்னும் பசுமையாக இருக்கிறது.

வளர்க பாவேந்தர் புகழ்!



கவிஞர்
திருலோக சீதாராம்

# கவியரசர்
# பாரதிதாசன்

கவிஞர் திருவையாறு லோகநாத சீதாராம் அவர்கள் —தாமோதரனும், தாயுமானவரும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையும் வாழ்ந்த திருச்சிராப்பள்ளியில் வாழ்ந்தவர்.

தரணியின் முதுகு நெளியப்படை நடத்தித் தஞ்சாவூர்வரை முற்றுகையிட்ட சிவாஜியின் பேரால் தமிழ் ஏடு நடத்தி வந்தவர்; மாம்பலக் கவிச்சிங்கம் போல மனப்பாடக் கவிஞர்.

பாவேந்தரின் நம்பிக்கைக்குரிய பார்ப்பன நண்பர்கள் இருவர். ஒருவர் ஓவியர் வேணு கோபால சர்மா; மற்றொருவர் இந்தத் திருலோகம். பாரதியார் குடும்பத்தோடும் இவருக்கு நெருக்கமான தொடர்புண்டு.

'வாழ்நாள் முழுதும் சருகரிக்க முடிந்ததே தவிர குளிர்காய முடியவில்லை' என்று கூறிவிட்டுச் சஞ்சலத்தோடு கண்மூடியவர்.

'கந்தர்வகானம்' பாடிய இக்கவிஞர் மக்கள் கானம் பாடிய பாவேந்தர் பற்றிய நினைவலைகளை, இக்கட்டுரையில் கரையிட்டுக் காட்டுகிறார்.



புதுவையில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வீட்டைப் பொது நினைவுச் சின்னமாக்கி, கவிஞரின் மனைவியாருக்கு மானியமும் உதவி, புதுவை அரசாங்கம் பெரும் சிறப்புச் செய்திருக்கிறது. தமிழ்மக்கள் பெரு மகிழ்வு கொள்ளும் இந்த ஏற்பாட்டில் தமிழ்நாடு அரசும் பங்குகொண்டிருக்கிறது.

பாரதிக்குப் பின்னர் பாரதிதாசன் மரபு ஒன்றும் தமிழ்நாட்டில் உருவாகி, அவர் வழியில் இளங்கவிஞர் தலைமுறையொன்று வளர்ந்தும் வருகிறது. பாரதிக்குத் தாசன் என்று அவர் தம்மை அழைத்துக்கொண்ட போதிலும், பாரதியை சந்திப்பதற்கு முன்னமே புதுவை கனக சுப்புரத்தினம் பெரும் புலவராகவும் கவிஞராகவும் விளங்கியவர் தாம். பாரதியின் தொடர்பாலும் அவரிடம் சுப்புரத்தினம் கொண்டிருந்த பக்தியினாலும், பாரதிதாசன் எளிய இனிய தமிழ்க் கவிதைகள் எழுதும் பழக்கத்தை மேற்கொண்டார். அதில் வெற்றியும், பாரதியின் நேரிடையான பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்றவரானார்.

சமூக சீர்திருத்தக் கருத்துக்களில் பாரதியும் பாரதிதாசனும் ஒத்த கருத்துடையவர்களாக இருந்தது அவர்களுடைய நட்பின் அடிப்படையாகும். புதுவையில் பாரதியாரின் மெய்காவல் பொறுப்பையும் மேற்கொண்ட வீரர்களின் தலைவராக விளங்கிய கனக சுப்புரத்தினம் பாரதிதாசனாக மலர்ச்சியடைந்தது இயல்பு.

சுத்தச் சுயமரியாதை இயக்கக் கவிஞராக பாரதிதாசன் பிரசித்தமடைந்தபோது, ஒரு பார்ப்பனருக்குத் தாசன் என்று தம்மை அவர் அழைத்துக் கொள்வதை இயக்கப் பிரமுகர்கள் சிலர் ஆட்சேபித்தபோதும்கூட, பாரதி தாசன் தம் பெயரை மாற்றிக்கொள்ள ஒப்பவில்லை. பாரதியை இனத்தின் பெயரால் யார் இழிவு கூறுவதை யும் பொறுக்காத உணர்ச்சி வேகத்துடன் அவர்களின் மடமையைச் சாடும் நேர்மை அவரிடமிருந்தது.

பாரதிதாசன் பார்ப்பனீய எதிர்ப்பாளர் என்பது நாட றிந்த உண்மை. ஆயினும் அவருடைய அந்தரங்க நட் பிற்கும் மதிப்புக்கும் உரிய பார்ப்பனர் பலர் உளர். அவர்களிடையில் இந்தக் கட்டுரையாளருக்கும் ஒரு சிறப்பான இடம் இருந்து வந்தது.

புரட்சிக்கவி என்ற மகுடமிட்டு பில்ஹணை காவியத்தைப் புரட்சித் திருப்பத்துடன் அருமையான தமிழில் அவர் இயற்றியிருக்கிறார். இப்படைப்பால் பாரதிதாசனுக்கே 'புரட்சிக்கவி' என்ற கீர்த்தி நிலைத்துவிட்டது.

கவியரசர் பாரதிதாசனை முதன் முதலில் நான் சந்தித்தது விழுப்புரத்தில். 1938-ல் பாலபாரதம் என்ற மாதப் பத்திரிகையை அங்கிருந்து நடத்திக்கொண்டிருந்தேன். பாரதிதாசனுடைய கவிதைகள் முதல் தொகுதி சில மாதங்களுக்கு முன்புதான் வெளிவந்திருந்தது. பேரா சிரியர் கே. ஸ்வாமிநாதன் தினமணி ஆண்டுமலரில் பாரதிதாசன் ஒரு சிறந்த கவிஞர் என்ற சிறிய அறிமுகக் கட்டுரை எழுதியிருந்தார். தேசீய வாதிகளிடையிலும் அக்கிரகார வாசிகளிடையிலும் பொதுவாகப் பாரதி தாசனைப் பற்றிய அர்த்தமற்ற ஒரு கசப்பு நிறைந்திருந் தது. பெரியாரின் கட்சிக்காரராகவும், ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்களிடை மட்டும் அதிகம் பழகி வந்தவராகவும் இருந்தபடியால் காங்கிரஸ்காரர்களுக்கு அவரைப் பிடிக்காது சுயமரியாதைக் கருத்துக்களையும் பார்ப்ப னத் துவேஷக் கருத்துக்களையும் பலமாக அவர் பிரசா

ரம் செய்துவந்த காரணத்தினுல் அக்கிரகாரம் இவரைப் புறக்கணித்திருந்தது. இந்தனையும் மீறி அவருடைய அற்புதமான கவித்திறன், உண்மையான ரசிகர்களைக் கவர்ந்திழுத்தது. இந்த வகையில் அவரைப் புறக்கணிப்பது தமிழுக்கு நஷ்டம் என்ற செய்தியை அக்கிரகார அறிஞர்கள் சிலர், பேராசிரியர் கே. ஸ்வாமினுதன், ஏ.வி. சுப்ரமண்ய அய்யர் போன்றவர்கள் துணிவுடன் எடுத்துரைக்கத் தயங்கவில்லை.

1944 ல் வானொலிக் கவியரங்கில் பாரதிதாசன், ச. து. சு. யோகியார், ந. பிச்சமூர்த்தி இவர்களுடன் நானும் பங்குபெற்றேன். இது வானொலி நடத்திய இரண்டாவது கவியரங்கு.

1946ல் பாவேந்தருக்குப் பொற்கிழியளிப்பதற்காக ஒரு திட்டத்தை அறிஞர் அண்ணுதுரை மேற்கொண்டு மிகவும் சிறப்பாக நிறைவேற்றி பல்லாயிரங்கள் நிதிதிரட்டிக் கொடுத்தார். இது சம்பந்தமாக பிஷப் ஹீபர் மைதானத்தில் நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டத்தில் நானும் கலந்து கொண்டு பாரதிதாசன் கவிதை நயங்களை விமர்சித்துப் பேசியதைக் கேட்ட அறிஞர் அண்ணுதுரை அக்கிரகாரத்து அதிசயப் பிறவிகளில் ஒருவன் என்று என்னை மிகவும் பாராட்டினுர். திராவிடநாடு வெளியிட்ட சிறப்பு மலரில் பாவேந்தரைப் பற்றிய ஒரு பாடலை எழுதுமாறு கேட்டு வாங்கிப் பிரசுரித்தார்.

1951ல் பாரதிதாசனுக்கு மணிவிழா. பல மாவட்டங்களைச் சேர்ந்த ரஸிக நண்பர்கள் சிலர் புதுவை சென்று, மணிவிழா ஏற்பாடுகளுக்குப் பாவேந்தரிடம் அனுமதி கேட்டனர். திருச்சியில் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களையும் என்னையும் கலந்து கொண்டு திட்டமிடும்படி சொல்லியனுப்பியிருந்தார்.

ஓர் அமாவாசை தினம். காலையில் அனுஷ்டானங்களுக்குத் தயாராக இடுப்பில் பஞ்சகச்சமும், கையில் தர்ப்பையுமாக நின்று கொண்டிருந்தேன். வாசலில்

ஐந்தாறு கறுப்புச் சட்டைக்காரர்கள் வந்து 'திருலோக சீதாராம் வீடு இது தானு?' என்று விசாரித்தார்கள். முதலில் நான் திகைத்துப்போனேன். இந்தக் கூட்டத்தார் எதற்காக நம்மைத் தேடி வந்திருக்கிருர்கள்என்று.

'ஆம் இந்த வீடுதான். நீங்கள் விசாரிக்கும் ஆசாமியும் நான்தான். என்ன வேண்டும்?' என்று நான் கேட்டதும் அவர்களும் திகைத்துப் போனுர்கள், தவருன விலாசத்துக்கு வந்திருக்கிரேமோ என்று.

'திருலோக சீதாராமைச் சந்திக்கும்படி பாரதிதாசன் சொல்லியனுப்பினுர். தாங்கள்தானு?' என்று கேட்டார்கள்.

'வாத்தியார் அனுப்பியிருக்கிருரா? அப்படியானுல் நான்தான். கொஞ்சம் மேலே சென்று அமருங்கள். நான் அனுஷ்டானம் முடித்துக் கொண்டு வருகிறேன்' என்றேன். வந்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்தோம். நிதிக்கு வேண்டுகோளும் விடுக்கப் பட்டது. தொகையும் வசூலாகிக் கொண்டிருந்தது குழுவிற்கு நான் செயலாளன். காதல் ஆசிரியர் ராமநாதன் பொருளாளர். அன்பில் தர்மலிங்கம், பராங்குசம் ஆகியோர் எங்களுடன் விழாக் குழுவில் இருந்தனர்.

திடீரென்று ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. நாங்கள் குறித்திருந்த அதே நாளில் மணிவிழா தஞ்சையில் ராமநாதன் செட்டியார் ஹாலில் நடைபெறுமென்றும், புரட்சிக் கவிஞர் நேரில் விஜயம் செய்வார் என்றும். அப்போது நிதியளிப்பும் பொன்னுடை போர்த்தலும் நடைபெறும் என்றும் யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளையின் பேரால் தினத்தந்தியில் ஒரு விளம்பரம் வெளியாயிற்று.

நாங்களோ திருச்சி தேவர்மன்றத்தில் விழா ஏற்பாடு செய்து, தீவிரமான நிதி வசூலிலும் ஈடுபட்டிருந்தோம்.

திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் விடுத்த அறிக்கையை எதிரொலித்து மலேயா முதலிய இடங்களிலிருந்தும் பணம் வந்து. கொண்டிருந்தது. இந்த நிலேயில் புதிய விளம்பரத்தைக் கண்டு எங்கள் குழுத்தலேவரும் நானும் அதிர்ச்சியடைந்தோம்.

ஒரே நாளில் இரண்டு இடங்களில் விழாவா? கவிஞர் அன்று தஞ்சையில் நேரில் இருப்பார் என்றும் போட்டிருக்கிறதே. அப்படியானல் திருச்சி விழாவின்கதி என்ன? விளம்பரம் உண்மையா? கவிஞர் இதற்கு ஒப்புதல் கொடுத்திருப்பாரா? என்றெல்லாம் குழப்பம் ஏற்பட்டது. கவிஞருக்கு எங்கள் குழுத்தலேவரிடமிருந்து விபரம் கேட்டு ஒரு கார்டும் அதற்கு விடை வராதபடியால் தந்தியும் பறந்தன. ஒரே மௌனம்.

கி.ஆ.பெ.வி. அவர்களுக்கு இதெல்லாம் பிடிக்காது. ஒழுங்கு மீறிய செய்கையை அவரால் ஒப்ப முடியாது. அதற்குப் பணிந்துபோகவும் அவரால் இயலாது.உடனே தாம் தலேவர் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்வதாக ஒரு கடிதம் எனக்கு அனுப்பி விழாக் குழுவில் வைக்கும்படி சொன்ஞர். இச் சங்கடமான நிலேமையில் அவர் மேற்கொண்ட முடிவு நியாயமென்று எனக்குப்பட்டபடியால் நானும் எனது ராஜிநாமாவுடன் சேர்த்துப் பொருளாளர் ராமநாதனுக்கே அனுப்பி விட்டேன். தலேவர், தாம் இந்தக் குழுவிலிருந்து விலகிக் கொண்ட அறிக்கையை முன்னர் நிதியனுப்பியவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பி விட்டார் என்று அறிந்தேன். குழுவினர் 'காதல்' அலுவலகத்தில் கூடி நிலேமையைப் பரிசீலித்தனர். இதற்குள் பராபரியாகச் சிலஉண்மைகள் எங்களுக்கு நிச்சயமாகத் தெரிந்து விட்டன.

விளம்பரம் உண்மை தான் என்றும், யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளே கவிஞரைச் சந்தித்துத் திசை திருப்பி விட்டார் என்றும், பத்து நாடகங்கள் போட்டு 60 ஆயிரமாவது வசூலித்து விடாலாமென்று கவிஞரிடம்

இவர் சொல்லி அவருடைய அனுமதியைப் பெற்றிருப்ப தாகவும் தெரிந்தது.

கவிஞர் எடுப்பார் கைப்பிள்ளை. எளிதில் யாரையும் நம்பி விடுவார். கடைசி வரையிலும் இந்தச் சுபாவத் தால் அவர் பட்ட அவதிகள் எண்ணில. மணிவிழா விஷயத்திலும் அவர் பல துன்பங்களுக்காளானார்.

விழாக்குழு முழுமையும் ராஜீநாமா செய்து விட்டது. இந்தச் செய்தியைக் கவிஞரிடம் நேரில் சென்று தெரி வித்து அது வரையுள்ள கணக்குகளையும் ஒப்புவித்து விடுவது என்று முடிவாயிற்று. என் தலைமையில் ஒரு தூதுக் குழு புதுச்சேரி செல்வதென்று முடிவு செய்யப் பட்டது. என்னுடன் ஒரு சில நண்பர்கள் உடன் வந் தனர். இப்பொழுது அவர்கள் அனைவர் பெயரும் என் நினைவில் இல்லை. அன்பில் தர்மலிங்கம் இருந்தார்; நண்பர் பராங்குசம் இருந்தார் என்று நினைவு.

தமது வீட்டு முற்றத்தில் சாய்வு நாற்காலியில் சிங்கம் படுத்துக் கிடப்பதுபோல் கவிஞர் சாய்ந்திருந்தார். நண்பர்கள் என்னை முதலில் உள்ளே போகச் சொன்னார் கள். வாசற்படியில் நுழைந்து இடைகழியில் சென்று அவரைப் பார்த்தவாறு நேரில் நின்று விட்டேன். கிட்டே போகத் துணிவில்லை. சாய்ந்திருந்த கவிஞர் நிமிர்ந்து உட்கார்ந்தார். பிறகு 'ரிஸைன் பண்ணிட்டியில்லே' என்று கேட்டார். 'ஆமாம்; ரிஸைன் பண்ணிட்டன்' என்றேன். 'அப்ப, வச்சுடு, போ,— என்றார். கையில் வைத்திருந்த விழாக்குழு சம்பந்தமான தாள்களையெல் லாம் அப்படியே வைத்துவிட்டு வாசற்பக்கமாகச் செல் லத் தொடங்கினேன்.

'முட்டாளு, இங்கேவா! உன்னையா போகச் சொன் னேன். உன்னை அப்படிச் சொல்வேனா? இந்த விஷயத் திலிருந்து நீ வெளியே போ என்று தான் சொன்னேன். நீ உள்ளே வா; இப்படி உக்காரு' என்று அருமையுடன் அழைத்தார். உள்ளே போனேன். தமது சாய்வு நாற்

காலியின் கைப்பிடியில் என்னை உட்கார்த்தி வைத்துக் கொண்டார். இன்னும் யாரெல்லாம் வந்திருக்கிறார்கள் என்று கேட்டார். சொன்னேன். அனைவரையும் உள்ளே அழைத்து உட்காரச் சொன்னார். பிறகு என்னிடம் 'ஆமாம், கி. ஆ. பெ. விசுவநாதத்தை உனக்கு முதலில் தெரியுமா? அல்லது என்னை முதலில் தெரியுமா?' என்று கேட்டார். 'ஏன்? உங்களைத்தான் முதலில் தெரியும்' என்றேன். "அப்போ, அவர் விலகிக் கொண்டால் நீயும் அவரைப் பின்பற்றி ஏன் விலகிக் கொண்டாய்? ஒரு வேளை உனக்கு நெல் அனுப்ப மாட்டாரா?'' என்றார். ''உள்ளூர்க்காரர், பெயரி மனிதர். ஒருவேளை எனக்கு அனுப்பும் படியை நிறுத்தி விடவும் கூடும்'' என்று பதில் சொன்னேன். இதற்கு மேல் பேச அவரிடம் பேச ஒன்றுமில்லை. சற்றுப் பொறுத்து ''நான் இப்பொழுது பேசலாமா?'' என்று கேட்டேன். ''பேசு'' என்றார்.

''யாரை முதலில் தெரியுமென்றல்லவா கேட்டீர்கள். உங்களையும் எனக்கு முதலில் தெரியாது. உங்கள் கவிதைகளைத்தான் முதலில் தெரியும். அதைத் தெரிந்து கொண்ட காரணத்தால் தான் உங்களைத் தெரிந்து கொண்டேன். ஆகையால் எனக்கு யாரும் படியளக்க வேண்டியதில்லை. உங்கள் தயவும் எனக்கு வேண்டிய தில்லை. விசுவநாதம் எழுதிய கடிதங்களுக்கு நீங்கள் ஒரு விடையும் தராமல் வாளாவிருந்து விட்டீர்கள். மனம் நொந்த அவர், குழுவிலிருந்து விலக முடிவு செய்தது மிகவும் சரியென்றும், விழாக் குழுவையே நீங்கள் அவ மதித்து விட்டீர்கள் என்றும் எனக்குப்பட்டது. எனவே நாங்கள் அனைவரும் இதிலிருந்து விலகிக் கொள்வது என்று முடிவு செய்தோம். ஆயினும் உங்கள் கவிதைகள் என்னிடம் உள்ளன. அவற்றை நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது. உங்களைக் காட்டிலும் உங்கள் கவிதைகளே எனக்கு அதிகம் மதிப்புடையவை'' என்று வேகமாகப் பேசினேன்.

சாய்வு நாற்காலியிலிருந்து கவிஞர் துள்ளியெழுந்தார்.

வழக்கம் போல் முழங்கால் வரையிலும் வேட்டியைச் சுருக்கிப் பிடித்துக் கொண்டார். சுற்றியிருந்தவர்களைப் பார்த்துச் சொன்னார்.

''அவண்டா தமிழன்—நீ வேண்டியதில்லை, உன் கவிதை எனக்குப் போதும் என்று சொல்கிறானே. அவன் மறத் தமிழன். அவன் அஞ்சா நெஞ்சுடையவன்" என்றார். மறுபடியும் என்னை இழுத்து அருகில் அமர்த்திக் கொண் டார்

பாவேந்தர் என்னுடன் உணவருந்தினார். தாழ்வாரத்தில் ஒரு பாயைக் கொண்டு வந்து போட்டு இளைப் பாறச் சொன்னார். சிவாஜியின் பதினேழாவது ஆண்டு மலர் வெளியாக வேண்டிய தருணம். அதற்கு ஒரு கவிதை எழுதித் தருமாறு கேட்டுக் கொண்டேன். 'சரி நீ கொஞ் சம் தூங்கு. நான்கு மணிக்கு எழுப்புகிறேன்' என்றார்.

உதட்டில் சூடுபட்டு விழித்துக் கொண்டேன். என் தலை மாட்டில் இடது கால் மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டு, தமது இடது கையால் என் கழுத்தில் கை கொடுத்துத் தூக்கி காப்பி நிறைந்த கோப்பையை என் உதடுகளில் வைத்துப் பருக வைத்தார். ''கழுதை! என்ன இப்படி ஒரேடியாத் தூங்குகிறாயே! அரவிந்தாச் ரமம் போக வேண்டுமென்று சொன்னாய், உடனே போய் வந்து விடு. நேரமாகி விட்டால் கதவு மூடி விடு வான்'' என்று வாசலில் தயாராக இருந்த வண்டியில் என்னை அனுப்பி வைத்தார்.

திரும்பி வந்த போது மாலை 6 மணியாகி விட்டது. ''பாட்டு வேணுமிண்ணு கேட்டியே இந்தா" என்று ஒரு தாளை நீட்டினார். அதில் என்னையும் சிவாஜியையும் பாராட்டி எழுதியிருந்தார். ''நான் மலருக்குக் கவிதை கேட்டால், என்னைப் பற்றி எழுதியிருக்கிறீர்களே!'' என் றேன்.

''முட்டாளு! உனக்கு என்ன பஞ்சம் தெரியுமா? பணப் பஞ்சமில்லே, புகழ்ப் பஞ்சம். உன் பெருமை ஒரு பயலுக்

கும் தெரியாது. நான் தாண்டா அதை நாலு பேர் அறியச் சொல்லனும். சும்மாப் போடு. என் கையெழுத்தில்லே போட்டிருக்கிறேன்" என்றார். அவரது குழந்தை மனத்தையும் அன்பின் பெருமையையும் கண்டு மெய் சிலிர்த்தேன்.

சிவாஜியின் பதினேழாவது ஆண்டு மலரில் வெளியான அந்தப் பாடல் பின்வருமாறு:

எழுத்தெல்லாம் புதியநடை
எண்ணமெலாம் தன்னுடைமை
எனவே நாட்டின்

பழுத்தபொதுத் தொண்டு செய்வான்
திருலோக சீதாராம்
பரப்பும் ஏடு

வழுத்துமோர் சிவாஜியெனல்
வண்டமிழ்நா டறியுமந்த
மைந்த னுக்குத்

தழைத்ததுவாம் பதினேழாண்
டென்றுரைத்தால் மகிழாத
தமிழ ருண்டோ?

இவனுயர்ந்தான் அவன் தாழ்ந்தான்
என்னும்இன வேற்றுமையோர்
அணுவும் இல்லான்

எவன் பொதுவுக்கு இடர் சூழ்ந்தான்
அவன் தாழ்ந்தான் அஃதில்லான்
உயர்ந்தான் என்று

நுவல்வதிலே திருலோகன்
அஞ்சாநெஞ் சன்தக்க
நூற்கள் ஆய்ந்தோன்

அவனெழுதும் சிவாஜியெனும்
வாரத்தாள் வாழிய பல்
லாண்டு நன்றே.

பல்லேடும் கூடியொரு
பழந்தமிழின் சீர்த்தியினை
மறைக்கு மாயின்

வில்லோடும் அம்போடும்
வரும் பகையைத் தனிநின்று
வீழ்த்து வான்போல்

சொல்லோடும் பொருள்சிறக்கத்
தூய் தமிழின் சீர் சிறக்க
எழுது கின்ற

நல்லேடாம் சிவாஜிக்கு
நல்லாசான் திருலோகன்
நாளும் வாழ்க!

மணிவிழா நாங்கள் அஞ்சிய படியே ஆயிற்று. தஞ்சா வூரில் எதுவும் நடக்கவில்லை. திருச்சி தேவர் ஹாலுக்கே மாற்றி விட்டார் யதார்த்தம். நாடகங்கள் போட்டார்கள். வசூல் ஒன்றும் சரியாக இல்லை. பாரதிதாசன் குடும்பத் தோடு அசோக் பவனில் முகாமிட்டார். பரிவாரங்கள் அதிகம். ஹோட்டல் செலவுக்கே வசூலாகவில்லை. பாரதி தாசன் மனவேதனைப்பட்டார். ஓட்டலைக் காலி செய்து விட்டுத் திருவானைக் காவல் ரெங்கூன் ரெட்டியார் சத்திரத்துக்கு வந்து விட்டார்.

விழாவுக்கு மூன்றே நாட்கள் இருக்கின்றன. பாரதி தாசனுடைய புதல்வர் மன்னர் மன்னனும், மருகர் கண்ணப்பரும் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களிடம் சென்று நிலைமையைக் கூறினார்கள். அவர் இவ் விஷயத் தில் மேலும் கலந்து கொள்வது இயலாத காரியமென் பதைத் தெரிவித்து விட்டார்.

'பின்னர் கவிஞரிடம் என்ன போய்ச் சொல்வது?''என்று கேட்டார்கள். "கவிஞனாக இருப்பது வேறு; மனிதனாக இருப்பது வேறு- என்று, விசுவநாதம் கூறுகிறார் என்று

போய்ச் சொல்லுங்கள்'' என்று கூறி விட்டாராம். விழாக் குழுவிலிருந்து தாம் விலகிக் கொண்டதாக முன்னமே அறிக்கை விட்டிருந்த படியால், மறுபடியும் இதில் கலந்து கொள்வது பொது மக்களிடையே தம்மைப் பற்றிய முரண்பட்ட கருத்துக்களுக்கு இடம் கொடுக்குமென்று எண்ணியிருக்க வேண்டும். கவியரசரிடம் முத்தமிழ்க்காவலர் கொண்டிருந்த எல்லையற்ற மதிப்பும் பரிவும் நாடறிந்தவை. எனினும் மணிவிழாவில் அவர் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது, அவருக்கே வேதனையாக இருந்திருக்கும்.

இதற்கு மேலும் பார்த்துக் கொண்டிருப்பது என்றால் இயலவில்லை. அரு.ராமநாதன் அவர்களைச் சந்தித்துப் பேசினோம். விழாவை எப்படியாவது சிறப்பாகக் கொண்டாடி விடுவது என்று தீர்மானித்தோம்.

உடனே அவசர அவசரமாக அழைப்பிதழ் அச்சிட்டு வழங்கி, முன்னர்த் திரட்டிய நிதியில் ஆயிரத்துக்குச் சற்று அதிகமாகவே தொகை எங்களிடம் இருந்ததை அவருக்குக் காணிக்கையாக்கிப் பொன்னாடைபோர்த்திச் சிறப்புடன் விழாவைக் கொண்டாடினோம்.

குழந்தையைப் போன்ற இனிய எளிய சுபாவம் படைத்த பாவேந்தர், முன்கோபமும் உடையவர். கோபம் வந்து விட்டால் யாரும் எதிரில் போக முடியாது. அனுசரித்துப் போக மாட்டார். இதனால் இவரை அணுகிப் பாராட்ட முன் வந்த பலர் பின்னர் இவரை விட்டுப் பிரியும் சந்தர்ப்பங்களும் வந்ததுண்டு. புதுவை அரசியலில் முக்கியமான பங்கும் பெற்றிருந்தார். ஆண்டுதோறும் பாரதி விழா நடத்தினார். ஒரு சமயம் பாரதியாரின் புதல்வியரும் நானும் அந்த விழாக்களில் சென்று கலந்து கொள்ளும்படி செய்தார்.

பாரதியாரைப் பற்றிய அவரது நினைவுகளை நான் கைந்து—'பதினைந்து நிமிஷப் பேச்சுக்களாகத்' திருச்சி வானொலியில் ஒலிப்பதிவு செய்து வைத்திருக்கிறார்கள்.

பாரதியின் பெருமை யை விளக்கிப் பேசுவதற்கு அவரை விடச் சிறந்த விமர்சகர் யாரும் இல்லை. 'பாரதி உலக கவி' என்ற பாடல் ஒன்று போதும். அவருடைய பிற் கால எழுத்துக்கள் பிரசார நோக்கம் கொண்டவை. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, எதிர்பாராத முத்தம் போன்ற வை அழியா வரம் பெற்ற உயர்ந்த கவிதைகள்.

உலகியலில் ஒத்துப் போகத் தெரியாததால் இறுதிக் காலத்தில் பாரதிதாசன் மகிழ்ச்சியுடன் இருக்கவில்லை. வழக்கம் போல் கவிஞர் மறைந்த பின் பெருஞ்சிறப்புக் கள் நடைபெறுகின்றன. அவர் மறைந்த பின் சாகித்ய அகாடெமி அவரது நூலுக்குப் பரிசு வழங்கிற்று. இதோ அவருக்குப் புதுவை அரசாங்கம் நினைவுச் சின்னம் எழுப்புகிறது. அவரது துணைவியாருக்கு ஓரளவு உதவி யும் செய்கிறார்கள். தமிழ் மக்கள் நன்றியுள்ளவர்கள்.



கவிஞர்
மணிவேலன் எம்.ஏ.,

# பாவேந்தருடன்
# ஒரு நாள்

அதிகன் ஆண்ட தகடூர் நாட்டு அரூரில் ஆசிரியர் பணிபுரியும் கவிஞர் மணிவேலர் குழந்தைக் கவிதை யும் குமரர் கவிதையும் கைவரப் பெற்றவர். இனிக்கப் பேசும் தனித்தமிழ் நண்பர்; இலக்கிய ஆராய்ச்சி செய்து வருபவர்.

ஆங்கிலமேதை ஜான்சனோடு பாவேந்தரை இவர் ஒப்பிடும் அழகு படிக்கப் படிக்கச் சுவை பயக்கிறது. பாவேந்தரோடு தாம் பழகிய ஒருநாளை, இக்கட்டு ரையில் திருநாளாக்கிக் காட்டியிருக்கிறார்.



''நான் ஒருநாள் காலை விழித்தெழுந்தேன்: நான் புகழ் பெற்றுவிட்டேன் என்பதை அறிந்தேன்'' (I awoke one morning and found myself famous.) என்று கூறினன் ஆங்கிலப் பாவலன் பைரன். அவன் எழுதிய நூலாகிய Childe Herold வெளியானவுடன், எல்லா ஏடுகளும் பைரனைப் பற்றியும் அவன் நூலைப் பற்றியுமே எழுதி யிருந்தன! எனவே அவனுடைய நூல் எப்படியிருக்கும்—நடை எவ்வாறு கவரும் என்பதை யாவரும் அறிந்து கொள்ளலாம். இந்தப் பாவலனின் நடையில் எளிமை யும் உணர்ச்சி யோட்டமும் கைகோத்துச் செல்வதைக் காணலாம். அவனுடைய பாக்கள் உள்ளத்தைக் கவருவதைப் போலவே அவன் தோற்றமும் கவரும்!

தமிழிலே, 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற நூல் வெளி வந்தது. தமிழகத்தின் பட்டி தொட்டிகளிலெல்லாம் அவர் புகழ்பரவிவிட்டது. இந்தக் காலத்தில் 'நான் இத்தனைப் புதினங்கள் எழுதியுள்ளேன்' என்று எண்ணிக் கையைக் காட்டித் தம்மைத்தாமே விளம்பரப் படுத்திக் கொண்டாலும் சிலரை மக்களுக்குத் தெரியாது. பாவேந்தரின் நடையழகும் உடலழகும் போட்டி போடும்.

இந்த இரண்டு பாவலர்கள் மீதும் எனக்கு அளப்பரிய

காதல். இந்தக் காதலுக்கு 'ஒருத்திக்கு ஒருவன்' என்ற வரையறை இல்லை.

சில பாட்டி கதைகளில், இளவரசி ஏதாவது ஓர் இள வரசனின் வில், வாள்திறமையைக் கேட்ட அளவிலேயே காதல் கொண்டு விடுவதுண்டு. அதே போன்று பாவேந்தரின் பாடல்களை இளமையிலேயே படித்துப் படித்துக் காதல் அரும்பக் கூடாத பருவத்திலேயே எனக்கு அரும்பிவிட்டது.

1952 ஆம் ஆண்டு! பாவேந்தர் சேலம் 'மாடர்ன் தியேட் டர்ஸ்' நிறுவனத்துக்காகத் திரைப்பட உரையாடல் எழுதவந்து தங்கியிருந்தார். 'மார்டன் கேஃப்' என்ற விடுதியில் தங்கியிருப்பதாகக் கேள்விப்பட்டு நானும் சில நண்பர்களும் அவரைக் காணச் சென்றோம். நாங்கள் அவர் தங்கியிருந்த அறையை நெருங்கிக் கொண்டி ருந்தோம். உண்மையிலேயே பாசுவல் (Boswell) என்பவர் சாமுவேல் சான்சன் (Samuel Johnson) என்ற அறிஞரைப் பார்க்க எதிர்பார்த்துக் கொண்டு டேவிசு (Davies)என்பவருடன் இருந்தபொழுது அவர் மனநிலை எப்படியிருந்ததோ அப்படியே இருந்தது. எனக்கும்! சான்சன், இவர்கள் இருந்த இடத்தை நோக்கி வரு வதைப் பார்த்து டேவிசு......ஆம்லத் நாடகத்தில் ஒரே சியோ (Horatio) ஆம்லத்தின் தந்தையுடைய ஆவியை அவனுக்குச் சுட்டிக் காட்டிக் கூறுவதுபோல்'LooK, my lord, it comes' என்று நாடக முறையில் கூறியதாகக் கூறுவதுண்டு. அதே போன்று நாங்கள் அவருடைய அறையை நெருங்கும்போது திடுமென வெளிப்பட் டார்; எங்கோ வெளியில் புறப்பட்டு விட்டார்.' டேவிசு கூறியதைப்போல என் நண்பர், 'அதோ... அதேதான்!' என்றார். என்நண்பர் இப்படிக் கூறியது எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! அவர் விளக்கஞ் சொன்னார்.

"எல்லாப் புலவர்களுமே கிறுக்குப் பிடித்தவர்கள்தாம்! ஆங்கிலப் புலவனும் இதற்கு விதி விலக்கல்லன்! போப் என்ற புலவரைப்பற்றிப் போலிங் புரூக் என்ற அம்மை யார் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா? "அவர் சில வேளைகளில் அமைதியே உருவாக இருப்பார்; வேறுசில வேளைகளில் குரைப்பார்!'' (Sometimes he is polite and sometimes barks like a dog.)

"அப்படியானால் பாரதிதாசனும் நாம் போய்ப்பார்த்தால் எரிந்து விழுவாரா?''— இது என் ஐயவினா.

''அத்தோடு விட்டால் போதும்!''—இது என்நண்பரின் விளக்கம். இது நடந்த பின்னும் அவரைப் பார்த்துப் பேசிப் பழக வேண்டும் என்ற எண்ணம் மட்டும் குறை யவே இல்லை, 'ஆசை வெட்கமறியாது' என்று நாட்டுப் புறத்தில் ஒருபழமொழி உண்டன்றோ?

1962மே16 ஆம் நாள்! சென்னைத் தியாகராயநகர் இராமன் தெருவில் குடியிருந்த வீட்டுக்கு அவரைப் பார்க்கக் கிளம்பினேன். பத்தாண்டுகளுக்கு முன்னர் என்நண்பர் காட்டிய 'பூச்சாண்டி' என் மனத்திரையில் நிழலாடியது. பாசுவல் தம்மை முதன் முதலில் சந்திக்க வந்தபோது சான்சன் அவரை எவ்வளவு மானக் கேடடையச் செய்தார்! ஆனால் அவர் விட்டாரா? அவருடைய உயிருக்குயிரான நண்பராக, அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதும் ஆசிரியராக பாசுவல் மாறிவிடவில்லையா? இந்த வரலாற்றைப் படித்திருந்த துணிவு 'பூச்சாண்டி'யின் மீது மின்னொளியைப் பாய்ச்சியது.

நான் புறப்படும் போது என் உறவினர்ஒருவர் 'எதற்கும் தெரிந்தவரை அழைத்துப் போங்கள்;அவர்ஒருமாதிரி...'' என்று சொன்னார். நான் காதில் போட்டுக் கொள்ள வில்லை. திடீரென்று மழைபிடித்துக் கொட்டத் தொடங்

கியது. பாதி நனைந்து ஒதுங்கி நின்றேன். மழை சிறிது நின்றதும் வீட்டை நோக்கி நடந்தேன். வீட்டு முகப்பில் 'பாரதிதாசன் பிக்சர்ஸ்'என்று பெயர்ப்பலகை தொங்கிக் கொண்டிருந்தது! —அதாவது தூக்குப்போட்டுக் கொண் டிருந்தது.

வீட்டின் தாழ்வாரத்தில் ஒருவர் 'குயில்' ஏடுகளை முகவரி எழுதி விடுப்பதில் முனைந்திருந்தார்.

'பாதிக் குளியலுடன்' வந்து நின்ற என்னைப் பார்த்து ''நீங்கள் யார்? என்ன வேண்டும்?'' என்ருர் அந்த இளைஞர்.

"என்பெயர் மணிவேலன்..." சொற்ருெடரை முடிக்க வில்லை.

"நீங்களா அது?குயிலில் 'தென்னைப்பெண்ணே! என்ற பாடலை எழுதியிருக்கிறீர்களே...அவரா?''

''ஆமாம்!''

''நான்தான் பொன்னடியான்; பாவேந்தரின் உதவி யாளன்.''

"இங்கேயே சிறிது நில்லுங்கள்; பாவேந்தர் விழித்துக் கொண்டிருக்கிருரா என்று பார்த்துவிட்டு வருகி றேன்''—பொன்னடியான் உள்ளே சென்ருர்.

எனக்கு வியப்பு! நான் எழுதிய பாடலைக் கூட நினைப்பு வைத்திருக்கிருரே இந்த இளைஞர்! பாவேந்தர் அந்தப் பாட்டைப் படித்திருப்பாரோ? அந்தப்பாடலை மீண்டும் நினைவுக்குக்கொண்டுவந்தேன். தான் பெற்ற குழந்தை யின் முகத்தை எத்தனைமுறை பார்த்தாலும் தாய்க்குச் சலிப்பதில்லை! அப்புடித்தானே பாவல னுக்கும்?

ஓலையெனும் கூந்தலினை விரித்து விட்டே
உலர்த்துகிற தென்னையெனும் பெண்ணே! நீதான்
காலையிலே குளித்தெழுந்து நிற்கின் றாயோ?
கன்னியர்கள் சிலபேர்கள் நாக ரீகச்
சேலையெனும் பெயராலே அங்க மெல்லாம்
தெரிகின்ற மெல்லாடை உடுத்தல் கண்டோ
சோலையிலே வெட்கமின்றி பன்னா டையைச்
சுற்றிக்கொண் டிருக்கின்றாய்! நாண மில்லை?

என் நினைவிலே இப்பாடல் வரிவரியாக வந்து கொண்டிருந்ததைப் படித்துச் சுவைத்துக் கொண்டு (என்முதுகில் நானே தட்டிக்கொண்டு) இருந்தபோது பொன்னடியான் 'உள்ளே வாருங்கள்' என்றார்.

'உள்ளே' போகச் சொன்னாலே சிலபேருக்கு வரும் நடுக்கத்தை நான் நன்கு உணர்ந்தேன்.

பாவேந்தர் அமர்ந்திருந்தார்! அவரைப் பார்த்தேன்! ஆமாம் பார்த்தே விட்டேன்! சான்சனை நேரில் முதல் முதல் பார்த்ததைப்பற்றிப் பாசுவெல், "பூதத்தை அதன் குகையிலே பார்த்தேன்!" (I found the giant in his den) என்று இவருக்கு முன்னரே மறைத்திரு பிளேயர் கூறிய அதே சொற்களைக் கூறினார்! அதே போன்று தான் நானும் கூறுகிறேன்.

அவரைப் பார்த்தேன்! அடுத்து அவருடைய மிசைப் பலகையைப் பார்த்தேன்! மருந்து மாத்திரைகள்வெண்; சுருட்டுகள்; மூக்குக்கண்ணாடி; தூவல்; பொடிப்பேழை; மற்றும் பல. பாவேந்தரே உரையாடலைத் தொடங்குகிறார்:

"தம்பி! நீ எங்கிருந்து வருகிறாய்?"—

"நான் தருமபுரி மாவட்டத்திலிருந்து..."

''தருமபுரியா? நான் வந்திருக்கிறேன்...உட்கார்.'' நான் தயங்கிக் கொண்டே அமர்கிறேன்.

''பொன்னடி சொன்னான், உன்பெயர் மணிவேலன் என்று! நீ எழுதிய 'தென்னைப்பெண்ணே' என்றபாடலைப் படித்தேன்; அப்படித்தான் எழுதவேண்டும். இப்பொழுது நிறையபேர் கவிதை எழுதுகிறார்கள், முன்பெல்லாம் எல்லோரும் கடவுளைப்பற்றியே எழுதினார்கள்; இப்பொழுது எல்லோரும் காதலைப்பற்றியே எழுதுகிறார்கள். நீ தான் இயற்கையைச் சுவைத்து எழுதியிருக்கிறாய். கழுதையைப் பற்றி எழுதினாலும் காப்பியச் சுவையோடு இருக்க வேண்டும்.''

நான் தலையை மட்டுமே ஆட்டினேன்.

''நூல்கள் ஏதாவது எழுதியிருக்கிறாயா?''

ஆகா! இந்தக் கேள்வியைக் கேட்டதும் பாலில் பழம் நழுவிய கதையாக இருந்தது எனக்கு. ஏனெனில் 'மழலை இன்பம்' என்ற கையெழுத்துப்படியைச் சிறப்புரை பெறவே எடுத்துச் சென்றேன்.

கையிலிருந்த—இல்லை, பையில் மறைத்து வைத்திருந்த ஏட்டை நீட்டினேன். மூக்குக்கண்ணாடி ஏறியது; அதில் என் பிழை 'உருப்பெருக் காடியில் தெரிவது போல் தெரியப் போகிறது! நண்பர்கள் சொன்னபடி நமக்கு மரியாதை நடக்கப் போகிறது' என்று அவர் முகத்தையே படித்துக் கொண்டிருந்தேன்.

''நன்றாக எழுதுகிறாயே!...ஆனால் இதோ...இங்கேபார் ...குற்றியலுகரத்தைப் பிரித்துப் போட்டிருக்கிறாய். புணர்ச்சியில் ஓரசை குறைகிறது. இதுதவறு. இப்படி வரும்போது ஏகாரத்தைச் சேர்த்துவிடு!''

தலையைமட்டும் சாமியாட்டைப்போல் ஆட்டினேன்.

"வல்லெழுத்துக்கள் மிகும்இடங்கள் இன்னும் உனக்குச் சரியாகத் தெரியவில்லை: (சில நூற்பாக்களைக்கூறி) இவற்றைப்படி; பெயரெச்சத்தில் வல்லெழுத்து மிகாது; ஆனால் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் மிகும்..."

ஆகா! நான் பெற்ற பேறுதான் என்னே! எனக்கு ஆசிரியராய் இலக்கணம் கற்பிக்கிறார்! நான் கற்கிறேன்! இதை மறக்க முடியுமா?

"நீ கையெழுத்தேட்டைக் கொண்டுவந்ததுதான் சரி! அப்பொழுதுதான் பிழைகளைத் திருத்தி உண்மையான சிறப்புரை வழங்கமுடியும்..இதைப்பார்! ...ஒரு நூலை எடுத்துக் கொடுக்கிறார்; நான் வாங்கிப் பார்க்கிறேன் ஒரு தமிழ்ப்பேராசிரியர் எழுதிய பாடல் தொகுப்பு. அச்சிடப்பட்டுள்ளது... (பெயரைக் குறிப்பிடவிரும்ப வில்லை)

'இவன் தமிழ்ப் பேராசிரியன்! எவ்வளவு பிழைகள்! அச்சிட்ட பின் எப்படித் திருத்துவது? சிறப்புரை கொடுக்க வில்லையானால் 'இவன் பெரிய பாவேந்தன்!...முரடன்!' என்பான்?"

என்னுடைய நூலைப் படித்துத் திருத்தி விட்டார்.

"தம்பி! குயிலில் சேர்ந்து பணிசெய்கிறாயா?"

"எனக்குக் குடும்பம் இருக்கிறது."

"......(சிறிது மோனநிலை) முழுநேரத் தமிழ்த்தொண்டனாக நீ மாற வேண்டும்......

......சிறப்புரை எழுதி உனக்கு அனுப்பி விடுகிறேன்... நீபோ...ஆனால்..."

நான் திகைத்தேன், என்ன நடக்கப்போகிறதோ என்று,

“நீ இனிமேல் யாரிடமும் முகவுரைக்காக அலையாதே...! முடவனுக்குத்தான் ஊன்றுகோல் தேவை!”

இதைச் சொன்னவுடன் நான் விடை பெற்றுக் கொண்டேன். உண்மையிலேயே தமிழக அரசு நடத்தும் பரிசுச் சீட்டில் ஓரிலக்கம் உருபா எனக்குக் கிடைத்திருந்தாலும் அவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்காது! அப்படித் திரும்பினேன்!

“நீ முழு நேரத் தமிழ்த் தொண்டனாக மாற வேண்டும்” —இது என் செவியில் இன்னும் எதிரொலிக்கிறது! நான் கண்டிப்பாக இன்னும் மாறவில்லை! காரணம் எனக்கு வயிறு என்று ஒன்று இருக்கிறது! அதுமட்டும் இருந்தால் கூடத் தாழ்வில்லை! என் மனைவி மக்களுக்கும் வயிறுண்டு!!



டாக்டர்
தி. முருகரத்தனம்

# இழந்த செல்வம்

○

பரபரப்புக்கும் பாராட்டுக்கும் காரணமான பல அறிஞர்களையும், அரசியல் வாதிகளையும் உருவாக்கிய பச்சையப்பர் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவர் முருகரத்தனம்.

இன்று தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் தமிழ்த் தலைமை நடத்தும், அறிஞர் மு.வ.வின் மாணவர் படைவரிசையில் முன்னணி வீரர்.

கொங்கு நாட்டுச் சேர்வராயன் மலைச்சாரலில் பிறந்து மதுரைப் பசுமலையின் அடிவாரத்தில் காதலித்துக் குடியேறியவர்.

அறிஞர் அண்ணாவின் முயற்சியால் நிறுவப்பட்ட மதுரைப் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆய்வகத்தின் இந்நாள் இணைப் பேராசிரியர், நூலாசிரியர்; மொழியாராய்ச்சி வல்லுநர்.

○



எனக்குப் பாவேந்தர் பாரதிதாசனார் நினைவு ஓர் இனிய கனவு. அவரோடு நான் கொண்ட உறவு பெருமைக்கு உரியது மட்டுமல்ல; எனக்குப் பெருமிதம் தருவதும் ஆகும். திருவள்ளுவர் தந்த முப்பாலை ஆராய்வதன் வழித் தமிழினத்தின் தலைமகனும் அவரோடு என்னை உறவுபடுத்திக்கொள்வதில் எனக்கு எவ்வளவு பெருமையும் பெருமிதமும் ஏற்படுகின்றனவோ அவ்வளவு பெருமையும் பெருமிதமும் பாவேந்தரோடு எனக்கேற்பட்ட உறவால் உண்டாகின்றன. அவர் இந்த நூற்றாண்டின் இணையற்ற பாவலர்; பாட்டிலக்கியத்தில் முடிசூடா மன்னர். யாருக்குத்தான் அவர் உறவு பெருமிதம்தராது?

பாவேந்தரோடு உறவு சிறியதுதான்; ஒருசில சந்திப்புக்கள் கொண்டதே; நீண்டகால இடைவெளியும் கொண்டது; ஆனால் அரியது; நான் நினைவில் கொண்டு போற்றி வைத்தலுக்கு உரியது. வறியோன் வயிரமாலை ஒன்றைப் போற்றிப் பேணுவது போன்றது அது.

1950முதல்1956வரையிலான காலம் அது; தமிழுணர்ச்சி வெள்ளம்போல் பாய்ந்து பரவிய காலம். தமிழ் தவிர வேறு ஒன்றும் அறியாத ஒருமை உள்ளம் அன்றைய் என் உள்ளம். ஓரளவு தமிழ் வரலாறு தெரியும்; ஒருசிறிது தமிழ் இலக்கிய இலக்கணம் தெரியும். தமிழுணர்ச்சியின் ஊற்றுக்களான மறைமலை, பெரியார், அண்ணா என் ஆசான்கள். அவ்வியக்கத்தின் போர்ப்பாவலர்-செயங்

கொண்டார்-பாரதிதாசன்; அவர் பாட்டும் உரையும் எனக்குப் பாடம்.

தமிழ் வாழ்வு, பகுத்தறிவுக் கொள்கை. தமிழால் ஈர்க்கப்பட்டுத் தமிழ் பயில எண்ணம் கொண்டிருந்தேன். மூன்வர் மு வ. புகழ் தெரியும்; மு.வ. நூல்கள் அறிமுகம். பைந்தமிழைப் பற்றேடு கற்பிக்கும் பச்சையப்பன் கல்லூரியில் மு வ. நிழலில் விரும்பிச் சென்று தங்கித் தமிழ் படித்தேன். 1953 முதல் 1956 வரை பி.ஏ. (ஆனர்சு).

கொள்கையாராய்ச்சி; கட்சிக்கூட்டங்கள்... காட்டாற்றுப் போக்கில்லை; சம்வெள்ளியாற்றுப்போக்கு.

இந்நிலையில் சென்னைக்கு வந்திருந்த பாரதிதாசனுரை என் இனிய நண்பர் ஒருவரோடு காணச்சென்றேன். பச்சையப்பன் கல்லூரியில் பேசுவதற்கு அழைத்தல் நோக்கம்.

கவிஞர் அமைதியாக வரவேற்ருர்; தயங்காது ஒத்துக் கொண்டார். அது அவருக்குச் சாதாரண வாழ்க்கைப் போக்கு. ஆனல் எங்கள் கல்லூரிக்கு வருவதில் அவருக்கு வருமானம் ஒன்றும் இல்லை. இளைஞருடன் கலந்துரையாடலில் அவருக்கு இன்பம். அவரைக் கண்டு பேசியதில் எனக்குப் பெருமகிழ்ச்சி; ஒரு பெருங்கவிஞரை எளிதிலே கண்டுவிட்ட பெருமிதம்.

கவிஞர், 'பச்சையப்பன் கல்லூரியில் யார் தமிழ்த்துறைத் தலைவர்' என்று வினவினர். 'டாக்டர் மு. வரதராசனர்' எனப் பெருமையோடு கூறிக் கொண்டேன். உடனே அவர் 'யார்? அந்தக் கரியனு' என்ருர். எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. நான் மதித்துப் போற்றும் பேராசிரியரை ஆண்பால் ஒருமையால் கூறிப் பெயர் கூடச் சுட்டாது எளிய பட்டப்பெயர் வைத்துப் பாவேந்தர் வழங்கிவிட்டாரே என்பது என் உள்ளத்தைக் தைத்தது. நிலவொளியினை மேகம் மறைப்பது போன்று தோன்றியது.

மு.வ.வுக்கும் பாவேந்தர்க்கும் நல்ல உறவு இருந்த தாகத் தெரியவில்லை; நட்பும் இருந்ததில்லை; சாதாரண அறிமுகம் மட்டுமே இருந்திருக்கிறது. இருவருக்கும் வேற்றுபாடு நிறைய உண்டு. பாரதிதாசனார் பகுத்தறிவு வாதி; தமிழியக்க முன்னோடி; பெரியார் பாசறைத் தலைவர். மு.வ. முன்னர்ச் சைவசமயவாதி; பின்னர்ச் சமரசவாதி; அரசியலில் காந்திய, தேசிய வாதி ஆகவே இருவர்க்கும் உறவு குறைவு. கவிஞர் கவியுலகக் குயில் பாட்டும் பண்பாடுமே வாழ்க்கையாக்க் கொண்டவர்; மு.வ.வின் புதுத்தமிழியக்கம் கவிஞர்க்குப் புதிதே. கவிஞர் முதியர்; பெரியர்; அவர்க்கு எனத் தமிழ்ப் பேரு லகில் பரந்த இடம் உண்டு. அவரைத் தமிழ் உலகம் புரட்சிப்பாவலர் எனப் போற்றியது. அத்தகையவர்க்கு மு.வ. எளியராகக் காட்சி தந்ததில் வியப்பில்லை. புரட்சிக் கவிஞர் யாரையும் எளிதாக் நோக்கும் உயரிய தோற்றம் பெற்றவர். மு. வ. கரியமேனியராயினும் வெள்ளிய உள்ளமும் ஒள்ளிய அறிவும்கொண்டவர். நான் அமைதி கொள்வது கடினமாக இல்லை.

மற்ற தமிழாசிரியர்களைப் பற்றியும் கவிஞர் கேட்டார். அ.ச.ஞானசம்பந்தனாரைப் பற்றிக்கூறினேன். கவிஞர்க் குப் பழம்புராணங்கள் போற்றுவோரைப் பற்றி நல் லெண்ணம் இல்லை. பிறரைப்பற்றிக் கருத்துக் கூறுவ தில் கவிஞர் சாதாரணமாகவே நடந்து கொண்டார்.

என் கல்லூரிநாட்களில் பாரதிதாசனாருடன் நெருங்கிப் பழகும் ஓர் அன்பரின் நண்பரும் என்னுடன் பயின்றார். அவர் லால்குடியைச் சேர்ந்தவர். பாரதிதாசனாருடைய பழக்க வழக்கங்களையும் வாழ்க்கை முறைகளையும் நான் அவர் வாயிலாகக் கேட்டதுண்டு. புதுவைப் பாரதிதாச னார்க்கு உள்ளூரில் மதிப்பில்லை என்று அவர்கூறுவார். தமிழகத்தின் பிற பகுதிகளில் மதித்துப் போற்று வது போன்று அவருக்கு அவர் ஊரில் சிறப்பில்லையாம். அவர் வெளியில் சென்றுவிட்டு வரும்போது ரிக்ஷாக்

காரரிடம் பூசலிடுவது சாதாரணமாம்! சென்னையில் கூட நான் அப்பண்பைக் கவிஞரிடம் கண்டேன்.

பின்னொருமுறை 1955இல் கவிஞரைக் கண்டேன். கீழ்ப் பாக்கம் மருத்துவக் கல்லூரியில் அவர் பேசினார். திருக் குறளுக்குப் புத்துரை வகுத்துப் பேசினார் அவர். அவ் வுரை பற்றி அவரிடமே நேரில் கேட்டேன். 'திருக்குறள் உரையை ஏறத்தாழ எழுதி முடித்து விட்டேன்' என்றார், அவர். பின்னர்க் குயில் இதழில் 'வள்ளுவர் உள்ளம்' என்னும் பெயரில் அவ்வுரை விட்டுவிட்டு வந்துகொண்டி ருந்தது. அவர் எல்லாக் குறட்பாக்களுக்கும் முழுவதும் உரை எழுதியிருந்தாரோ என்பது எனக்கு ஐயமாக இருந்தது. அவ்வுரை சில குறள்களுக்கு மட்டும் குயில் இதழில் வந்தது. பாரதிதாசனார் சில குறள் அதிகாரங் களுக்கு மட்டுமே முழுமையாகவும் முறையாகவும் உரை எழுதியுள்ளார் எனவும் பிற அதிகாரங்களுக்குத் திருக் குறள் நூலின் ஓரங்களில் எழுதப்பட்ட குறிப்புக்கள் மட்டுமே உள்ளன எனவும் அண்மையில் அறிந்தேன். இன்னும் அவ்வுரை வெளிவரக் காணேன். ஏமாற்றமே எனக்கு ஏற்பட்டது.

பாரதிதாசனார் திருக்குறளுக்கு எழுதிய புத்துரை பகுத் தறிவு நோக்கிலும் தனித் தமிழர் நோக்கிலும் எழுதப் பட்டது. திருவள்ளுவர் திருக்குறளைச் சாங்கிய நூல் அடிப்படையில் எழுதியுள்ளார் எனக் கவிஞர் அடிக்கடி கூறுவதுண்டு. பகுத்தறிவு வாழ்வு மேற்கொண்டு தமிழாசிரியராகத் தொழில் புரிய இருந்த எனக்குப் பாரதிதாசனார் புத்துரையைப் பரப்புவது பணியாக இருக்க வேண்டும் என்று அன்று எண்ணிக் கொண் டேன். ஆனால் அவ்வாய்ப்பு இன்னும் எனக்கு வாய்க் காதது ஏமாற்றமாக உள்ளது.

என் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டுச் சேலம் கல்லூரி யில் 1956இல் தமிழ் விரிவுரையாளன் ஆனேன். ஐந்தாண்டுகள் ஓடின. 1961 இல் சென்னைப் பல்கலைக்

கழகத்தில் அறிஞர் மு.வ. மேற்பார்வையில் நான் ஆராய்ச்சி மாணவனாகச் சேர்ந்தேன். அவ்வாழ்க்கை மூன்றாண்டுகள். அப்போது 'பாரதிதாசனார் சென்னையில் நிலையாகத் தங்கித் தன் காவியமாகிய பாண்டியன் பரிசைப் பேசும் படமாக்கத் தொழிலகம் ஒன்றை அமைத்து முயற்சி மேற்கொண்டிருந்தார். என் அண்ணா முருகுசுந்தரத்துக்குப் பாரதிதாசனார் நன்கு அறிமுகம் ஆகியிருந்தார். அவர் வழியாக மருத்துவக் கல்லூரியில் பயின்றுகொண்டிருந்த என் தம்பிக்கும் அவர் அறிமுகம் ஆனார். கவிஞரின் தித்திப்புநீர் நோய்க்கு அவ்வப்போது என் தம்பியின் உதவி வேண்டி யிருந்தது. இந்நிலையில் கவிஞருடன் மீண்டும் உறவு கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

1963இல் தியாகராயநகரில் கவிஞர் இல்லத்துக்குச் சென்றேன். அப்போது அவர் பங்களாவில் பின்கட்டில் குடியிருந்தார். பங்களா என்னும் வளமனையில் இருந்து விட்டுக் கட்டுபடியாகாத காரணத்தால் பின்கட்டுக்குக் கவிஞர் குடி வந்துவிட்டார் என்றறிந்தேன். மட்டமான குடிலும் இல்லை. வளமான குடிலும் இல்லை. பின்கட்டு வாழ்க்கை எனக்கு வருத்தம் தரவில்லை. வளமனையில் இருந்துவிட்டுக் கட்டாது பின்கட்டுக்கு வந்துவீட்டார் என்ற செய்திதான் என் நெஞ்சை உறுத்தியது. 'அவர் எண்ணி வந்தது கைகூடவில்லை; திட்டமிட்டது நடக்க வில்லை; ஆசைநிறைவேறவில்லை. ஏமாற்றம் அடைந் தார்; தவறுசெய்து விட்டார்; பட்டணம் வந்து கெட் டார்?' என்ற கருத்துக்கள் என் உள்ளத்தில் ஒன்று ஒன் றாக வந்தன. இவையே உள்ளத்தை வருத்தின. இவை எல்லாம் உண்மையே. பேசும்படத்துறையில் இவை வழக்கம். அங்கு ஆறிடு மேடு மடுவும் போலாம் செல்வம். கவலைப்படுவதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் கவிஞர் இதில் இறங்கியதே கவலை தந்தது. நெடுந்தேர், கடல் ஓடியது போன்றிருந்தது; நாவாய் நிலத்தோடி யது போன்றிருந்தது. கவிஞர்க்குக் காவியம் உரியது.

ஆனால் அதைப்படமாக்குதல் உரியதல்ல. கவிஞர் கலைஞர்: அரசியல்வாதி; வாழ்வின் இறுதிப்படியில் நின்று கொண்டிருப்பவர். 'இவருக்கு ஏன் இந்தப் படத் தொழில் பைத்தியம்?' என்ற கேள்வியே என் உள்ளத்தில் எழுந்தது. அவர் முயற்சி தோல்வியில் முடிந்ததில் வியப்பில்லை!

கவிஞர் சிவாஜியையும் மற்றுஞ்சிலரையும் எதிர்பார்த்துச் சென்னை வந்திருந்தார். 'சிவாசி' புகழைக் குயில் கூவிக் கொண்டே இருந்தது. கத்தும் குயிலோசை காதில் பட்டால் மட்டும் போதுமா?கரையும் உள்ளம் வேண்டாமா?

கவிஞர் இல்லத்தில் தமிழ், இலக்கியச் சூழ்நிலையைக் கண்டேன். படத்தொழில் சூழ்நிலை ஒன்றையும் நான் காணவில்லை

பாரதிதாசனர் தமிழகம் போற்றும் மாபெருங்கவிஞர். ஓர் அரசியல் தலைவர். தமிழ்த்தாயின் தவப்புதல்வர். ஆனால் அவர் இல்லத்தில் அவற்றுக்குரிய ஆரவாரத்தை நான் காணவில்லை. ஏமாற்றத்தின் இடையிலேயும் கவிஞருக்குக் கவலை உள்ளம் இருந்ததாக வெளித்தெரியவில்லை. ஒரு கால் அது உள்ளூர இருந்திருக்கலாம்.

வேறொரு நண்பரும் அப்போது வெளியூரிலிருந்து வந்திருந்தார். கவிஞர் உணவருந்தும்படி வற்புறுத்தினர். வழக்கம்போல் அன்று மீன்குழம்பு. இல்லத்தரசியார் பழனியம்மாள் அப்போது அங்கிருந்தார்கள். இலக்கியப் பேச்சு நடைபெற்றுக்கொண்டிருந்தது மனைவி நடமாடிக் கொண்டிருந்தார். அவரைச் சுட்டிக்காட்டிக் கவிஞர் 'இவளைப் பார்த்தால் எப்படிக் கவிதை வரும்?' என்று ஒருபோடு போட்டுவிட்டார்! கவிஞர் வேடிக்கையே பேசினர். நாங்களும் புன்னகை செய்து கொண்டோம். கவிஞர் இல்லறத்தைச் சுவைகுன்றாமலே நடத்திக் கொண்டு வந்திருந்ததாக உணர்ந்தேன்.

1964ஆம் ஆண்டு தமிழர் திருநாளை ஒட்டிய ஒருபோது திருவல்லிக்கேணிக் கடற்கரையில் அமைந்திருந்த என்

விடுதிக்கருகே கவிஞர் வந்திருந்தார். அவரை ஒருமுறை என் விடுதிக்கு அழைக்க எண்ணினேன். அவருக்குப் புலால் உணவு விருப்பமானது என்பதை நான் அறிந் திருந்தேன். உணவகத்துக்கு நானே பொறுப்பு. 1964 பிப்ரவரி மாத விருந்தில் வான்கோழிப்புலவு வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. கவிஞரிடம் எங்கள் விருந்துக்கு வருமாறு வேண்டிக் கொண்டேன். வருவ தாக உடனே ஒத்துக் கொண்டார். என் அழைப்புப்பற்றி மகிழ்ச்சியும் அடைந்தார்! 'என்ன சிறப்புணவு' என்று கேட்டார். 'வான்கோழிப்புலவு' என்றேன். அவருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

விருந்து நடைபெற்ற அன்று கவிஞரை அழைக்கத் தியா கராயநகர் சென்றேன். அவர் காத்திருந்தார். வீட்டி லிருந்து குறுக்குத் தெருவைக் கடந்து பெருந்தெரு விற்கு நாங்கள் வந்தோம். தியாகராய நகரிலிருந்து மரீனுக் கடற்கரையில் உள்ள எங்கள் விடுதிக்கு வாடகை வண்டியில் (Taxi) கவிஞரை அழைத்து வரத் திட்டமிட்டிருந்தேன். இடையில் ரிக்ஷாக்காரன் ஒருவன் தலையிட்டான்; வற்புறுத்தினன். எனக்குச் சினம் ஏதுமில்லை. கவிஞருக்குச் சினம் பொங்கிவந்துவிட்டது. ரிக்ஷாக்காரனை அடிக்கக் கையை ஓங்கிக் கொண்டு சென்றுவிட்டார். எளிதிலே சிறுபொருளுக்கும் அவர் சீற்றம் கொண்டார் என்பது இதனுல் தெரியவந்தது.

விடுதியில் கவிஞர் அருகே அமர்ந்து அவருக்கு வேண்டி யதைப் பரிவுடன் வழங்கிக் கொண்டிருந்தேன். 'வான் கோழிப் புலவு நன்ருக இருந்தது என்று அவர் பாராட்டினார். ஆனுல் குழந்தையைப் போல மிகமிகச் சிறிதே உண்டார். அது எனக்கு ஏமாற்றத்தையே அளித்தது அந்த வயதில் சிறிதளவே உண்ணுதல் அவருக்கு வழக்கம் போலும்.

உணவை முடித்துவிட்டு மாடியில் உள்ள என் அறைக்குச் சென்ருேம். தாழ்வான ஒரு சாய்வு நாற்காலியில்

அவரை அமரவைத்தேன். அப்போது எம்.லிட். ஆய்வினை முடித்துவிட்டு பிஎச். டி. பட்டத்திற்கு ஆய்வு நடத்தி வந்தேன். என் ஆராய்ச்சியில் அவர் அவ்வளவு அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. பொதுவாகவே அக்காலத்தில் உயர்கல்விக் கழகங்களில் நடைபெற்று வந்த தமிழ் ஆராய்ச்சி பற்றி அவர்கள் அறியவும் இல்லை; அக்கறையும் காட்டவில்லை.

பாவேந்தரிடம் அவர் பாப்புனையும் ஆற்றல் பற்றிக் கேட்கவேண்டும் என்பது என் நெடுநாள் ஆவல். அவர், அண்மையில் குயில் இதழில் (30—12—58) எழுதிய ஓர் அழகுச்சிறுபாடல் பற்றிக் கேட்டேன். அந்தப் பாடல் இதுதான்:

*படி*

*எடுப்பு:*

நூலைப்படி!— சங்கத்தமிழ்
நூலைப்படி — முறைப்படி
நூலைப்படி

*உடனெடுப்பு:*

காலையிற் படி கடும்பகல் படி
மாலை இரவு பொருள்படும் படி
நூலைப்படி

*அடிகள்*

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வதெப்படி?
நூலைப்படி!

அறம்படி பொருளைப் படி
அப்படியே இன்பம் படி
சிறந்த தமிழ்நான் மறை
பிறந்த தென்று சொல்லும்படி
நூலைப்படி!

அகப்பொருள் படி அதன்படி
புறப்பொருள் படி நல்லபடி
புகப்புகப் படிப்படியாய்ப்
புலமை வரும் என்சொற்படி

நூலைப்படி!

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி!
சேதி அப்படி! தெரிந்துபடி
தீமை வந்திடு மேமறுபடி

நூலைப்படி!

பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி?

நூலைப்படி!

தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்கா இன் பம்மறுபடி
ஆகும்என்ற ஆன்றோர்சொற்படி

நூலைப்படி!

'இந்தப்பாடலை எவ்வளவு நேரத்தில் பாடினீர்கள்?' என்று நான் தொகுத்து வைத்திருந்த குயில் தொகுதியை அவர் கையில்கொடுத்துவிட்டுக் கவிஞரைக் கேட்டேன். பாடலை எழுதி அடித்துத் திருத்தி அமைத் திருப்பாரோ என எனக்கு அறிய ஆவல். கவிஞர் கை விரல்களில் சடக்குப் போட்டுக்கொண்டு 'ஒருநொடியில்' என்றார். 'இந்தப் பாடலைப் படிப்பதற்கு எவ்வளவு நேரமோ அவ்வளவு நேரம்தான் இயற்றுவதற்கும்' என்றார் கவிஞர். இவ்வாறு கூறிவிட்டுக் கவிஞர் அந்தப் பாடலை மெல்லிய குரலில் இசையோடு பாடிக்காட்டினார். யதுகுலகாம்மோதி இசையிலும் ஆதிதாளத்திலும் அமைக்கப்பட்ட இப்பாடலை 'எடுப்புடனும் உடனெடுப் புடனும்' அவர் பாடினார். கைவந்த கவிஞர்க்குக்

கவிதை பாடல் மிக எளிதே என நான் அன்று அறிந்து கொண்டேன்.

நான் தொகுத்து வைத்திருந்த குயில் தொகுதியைக் கையில் வாங்கியவுடன் 'திரு. முருகரத்தினம் வாழ்க' என்று எழுதிப் 'பாரதிதாசன்' என்று கையெழுத்திட்டு '23-2-64' என நாளும் இட்டனர் கவிஞர். அவர் வெளியிட்டு நான் தொகுத்து வைத்த குயிலிலும் என்னை வாழ்த்தி வரைந்த வாழ்த்திலும் அவர் இன்றும் என்னோடு வாழ்கிறார். அவர் வாழ்த்து நான் பெற்ற பட்டங்களுள் ஒன்றே எனக் கருதுகிறேன்.

1964 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் பாவேந்தரிட மிருந்து அழைப்பு வந்தது. தியாகராய நகரிலுள்ள அவர் இல்லத்திற்கு நான் விரைந்து சென்றேன். பாவேந்தர் என்னிடம் இவ்வாறு கூறினார். ''என்னுடைய பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்று பல ஊர்களிலிருந்து பலரும் என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சென்னையில் கொண்டாட வேண்டும் என்று நாரணதுரைக் கண்ணன் வந்தார். எல்லாவற்றுக்கும் மேலாகச் சென்னையில் ஒரு நடு அமைப்பை ஏற்படுத்தித் தமிழ் நாடெங்கும் கொண்டாடுவதை ஒருங்கிணைக்கலாம். நீயே இங்கு அந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டு நடத்து. மற்றவர்களுக்கு விழாக் கொண்டாடுவதற்கு அனுமதி கொடு. விழாச் செலவிற்கு எம்.ஆர். ராதாவைப் போய்ப்பார். அவர் கொடுப்பார். கொடுப்பதை வாங்கிக்கொள்''

ஒரு புறம் பாவேந்தரின் நிலைக்கு இரங்கினேன்: 'தமிழகத்தின் மாபெருங் கவிஞர் தம் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவதற்குத் தமிழகம் அறியாத என் போன்ற இளைஞர்களையும் ஓய்ந்து ஒதுங்கியோரையும் நம்பும் நிலை ஆகி விட்டதே என்பதே எனக்கு வருத்தம் தந்தது. தமிழகத்துத் தமிழ்த்தலைவர்கள் அனைவரும் இணைந்து கொண்டாடவேண்டிய விழா இது.

ஆனால் இவர் ஆதரவற்ற நிலையில் இருக்கிறார். இது அவர் தாமே தேடிக் கொண்டதுதான்! அவர் ஓர் இயக் கத்தைச் சார்ந்தவர். இயக்கமோ சிதறுண்டு கிடக் கின்றது. உட்பூசலும் ஆளுக்கு ஒரு குழுவுமாக இயங்குகிறது அது. கவிஞரும் அணைந்தும் செல்ல மாட்டார்; அணைத்தும் செல்லமாட்டார், இந்தக் குறைகள் எல்லாம் கவிஞரைத் தனிமைப்படுத்திவிட்டன.

தலைமைக் குழுவை எவ்வாறு அமைப்பது என்பது பற்றி பேச்சு வந்தது. நான் விளக்கங்கள் கேட்டேன். என் கருத்துக்களை வெளியிட்டேன். கருத்து வேறுபாடுகள் எழுந்தன. திராவிட இயக்கத்தின் பெருந்தலைவர்களை ஈடுபடுத்தி விழாவினைச் சிறப்புற நடத்தவேண்டும் என நான் எண்ணினேன். நாவலர் நெடுஞ்செழியன், சி.பி. சிற்றரசு, கி.வீரமணி முதலான சிலபெயர்களைக் குறிப் பிட்டு அவர்களை விழாக்குழுவில் சேர்த்துக் கொள்ள லாமா என்று கவிஞரிடம் கேட்டேன். உண்மையில் அவர்களுக்கும் கவிஞருக்கும் இடையில் அமைந்திருந்த உறவு எனக்கு முழுமையாகத் தெரியாது வெளித் தோற்றம் போன்று உள்ளுறவு இருக்கவில்லை. என்விருப்பமும் இவர்களை ஒன்றாகக் காண்பதுதான். ஆனால் கவிஞர் இவர்களை எல்லாம் எதிர்த்தார். ஆனால் யாரை வைத்து விழாவை நடத்துவது? செயல் வீரர்கள் யார்? நம் உண்மை நண்பர்கள் யார்? கவிஞர் தந்த பட்டியல் எனக்கு ஏமாற்றம் தந்தது. என் ஊக்கத்தையும் குறைத்தது. அவர் நம்பியிருந்தோர் ஓய்ந்தோர், தொண்டராற்றோர், மாற்றணியினர்... எஸ்.இராமநாதன். மணவாளராமானுசம்,வி.பி.ராமன் அகிலன், நாரணதுரைக்கண்ணர், ஈ. வி.கே.சம்பத்து இவர்களை எவ்வாறு அணுகுவது என்பதே என்மலைப்பு. கவிஞரிடம் என் ஏமாற்றத்தையோ மலைப்பையோ நான் காட்டிக்கொள்ளவில்லை. கவிஞர் குறிபிட்டவர்களுடன் இணைந்து பணியாற்ற உடன்பட்டேன்.

என் உள்ளத்தில் வேறொரு தயக்கமும் இருந்தது.1964

ஆம் ஆண்டாகிய அந்த ஆண்டில் ஏப்ரல் மாதத்தில் Diploma in Anthropology என்ற தேர்வும் ஜூன் மாதத்தில் Diploma in Linguistics என்ற தேர்வும் எழுதுவதற்கு என்னை தயார் செய்து கொண்டிருந்தேன். அத்தேர்வுகளைக் கைவிடுவதா? அல்லது தேர்வுகளை முடித்துவிட்டு வந்து விழாப்பணியைப் பார்ப்பதாஎன்பது என் உள்ளத்தில் ஏற்பட்ட ஊசலாட்டம். என்தேர்வுப் பணிகளை முடித்துவிட்டு விழாப்பணியில் முழுமூச்சாக ஈடு படுகிறேன் என்று கவிஞரிடமும் கூறிக் கொண்டேன். அவரும் அதற்கு உடன்பட்டார்.

நாரணதுரைக்கண்ணர் விழாவுக்கான சில முயற்சிகளை மேற்கொண்டிருந்திருக்கலாம். இந்நிலையில் திரு.ஈ.வி. கே. சம்பத்தவர்களிடம் "கவிஞருக்கு பிறந்தநாள் விழாக் கொண்டாட எண்ணம் கொண்டு விழாவுக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது, தங்கள் ஒத்து ழைப்புவேண்டும்'' என்று நண்பர் ஒருவர் வேண்டிக் கொண்டார் போலும். உடனே சம்பத்து 'கவிஞருக்கு விழா எடுக்க முன்னரும் சில முறைகள் முயற்சி மேற் கொண்டு நடைபெருது தோல்வியில் முடிந்தது. இனி மேல் யாரும் உதவி செய்யமாட்டார்கள். அவர் சும்மா இருக்கட்டும்' என்று கூறிவிட்டார். இக்கூற்றைக் கேட்டுக் கொண்டிருந்த நண்பர் ஒருவர் கவிஞரிடம் சென்று அப்படியே கூறிவிட்டார். கவிஞருக்கு அதிர்ச் சியும் ஏமாற்றமும் வருத்தமும் ஏற்பட்டன போலும். சம்பத்தைக் கவிஞர் நல்லுள்ளத்தோடு நம்பிக்கொண் டிருந்தார். இவ்வாறு விழாமுயற்சிக்கு முதலிலே ஓர் இடி ஏற்பட்டது. இந்த ஏமாற்றத்தையே என் அண்ணு வுக்கு மடல் வழி எழுதி என்மீது குறைபட்டுக் கொண் டார் கவிஞர். விழா மத்தியக் குழு அமைப்பது பற்றிக் கவிஞர் குறிப்பிட்டுவிட்டு‡ ''இதை நும்தம்பி முருகரத்

‡இக்கடிதம் 'பாவேந்தர் நினைவுகள்' என்னும் இந்நூலின் முதற் பகுதியில பககம் 124-125 இல் வெளியிடப்பட்டுள்ளது.

தினத்திடம் கூறினேன். எல்லாம் எனக்குத் தெரியும். நான் நாரணதுரைக்கண்ணரிடம் கலந்து ஏற்பாடு செய்து கொள்கிறேன் என்ருர். 'மறுநாள் வந்தார் அந்த மத்தியக்கமிட்டியில் நெடுஞ்செழியன், சிற்றரசு, முதலியவர்களைப் போடலாமல்லவா என்ருர். கடுமையாக மறுத்தேன். பிறகு வீரமணியைப் போடலாமா என்ருர். மறுத்தேன். எஸ். இராமநாதன், முன்னள் அண்ணுமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மணவாள ராமானுஜம், வி.பி.இராமன், அகிலன் முதலியவர்களைச் சொன்னேன். அவர் அவர்களை மறுத்தார். இன்று —அதாவது பதினைந்து நாட்களுக்குப்பின் ஆர்ட் டைரக்டர் அம்மையப்பன் வாயிலாகச் சேதி அனுப்பப்பட்டிருக்கிறது. வேறு யாரையாவது கொண்டு விழாவை நடத்திக்கொள்ளச் சொல்லுங்கள் என்று. நான் இவர்களைக் கேட்டதுண்டா விழா நடத்தச் சொல்லி?'' என்று என் அண்ணுவுக்கு எழுதியிருந்தார்.

விழாமுயற்சி ஆதரவிழந்ததை நான் அறியேன். நான் அதுவரை ஒரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. ஆனுல் நான் ஈடுபட்ட முயற்சியே தோல்வி கண்டது எனக் கவிஞர் தவருக எண்ணியிருக்க வேண்டும். உண்மையில் நாரணதுரைக்கண்ணரும் பிறரும் மேற்கொண்ட முயற்சியே தோல்வியில் முடிந்திருக்க வேண்டும். இது பற்றிக் கவிஞரைச் சந்தித்து விளக்கம் கேட்க வேண்டும் என்று எண்ணிய என் எண்ணம் கைகூடாதவாறு கவிஞர் விரைவில் இவ்வுலகையே நீத்துச் சென்று விட்டார்.

12-4-1964 அன்று பாவேந்தரை அவர் இல்லத்தில் கண்டு பேசினேன். பாவேந்தருக்கு உடல் நலமில்லாது போகச் சென்னை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிருர் என்ற செய்தியை 21-4-64 காலை கேள்விப்பட்டேன். உடனே மருத்துவமனைக்குச் சென்றேன். இரயிலில் மூன்ரும் வகுப்புப் பயணியைப் போலப்

பொதுப்பிரிவில் (General ward) அவர் சேர்க்கப்பட்டு இருந்தார். உறக்கமோ மயக்கமோ தெரியவில்லை. அவர் உணர்வின்றிப் படுத்திருந்தார். அண்மையில் சிலர்-ஒருசிலரே-கவலையுடன் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் நெருங்கிய உறவினர் போலும். பாமன்னரின் மகன் மன்னர்மன்னன் நின்றுகொண்டிருந்தார். வேறு யாரும் இல்லை. மன்னர் மன்னன் எனக்கு அறிமுகம் இல்லை. சிறிதுநேரம் பார்த்திருந்துவிட்டுத் திரும்பி விட்டேன். விடுதிக்குத் திரும்பிவந்த சிறிது நேரத்தில் பாவேந்தர் பாவுலகையும் பாருலகையும் நீத்துச் சென்று விட்டார் என்ற செய்தி பரவியது. முற்பகல் அச்செய்தி என் காதில் விழுந்தவுடன் தியாகராய நகரில் அவர் இல்லத்துக்கு விரைந்தோடினேன். அவர் இல்லம் 'வெறிச்சோடி' இருந்தது. பாவேந்தர் மருத்துவ விடுதி யிலிருந்து இல்லத்துக்குக் கொண்டுவரப்பட்டவுடன் புது வைக்குக் கொண்டுபோகப்பட்டார்; பிறந்த மண்ணி லேயே மறைந்துபோகத் தன் இல்லத்திற்கே சென் றார். செந்தமிழுக்குப் பாப்புனைந்த நா செந்தழலுள் வெந்தது.

பாவேந்தரோடு கருத்திலும் எண்ணத்திலும் நான் உறவு கொண்டிருந்த அளவு பழக்கத்தில் கொண்டிருக்க வில்லை. அவர் பாக்கள் இனிமையானதுபோல் அவர் பழக்கமும் எனக்கு இனிமை தந்தது. கல்வியைப் பற்றி வற்புறுத்தி வற்புறுத்தி அவர் பாடினார். 'படித்த குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்பது அவர்கருத்து. அப்போது எம்.ஏ., எம். லிட்., எம். பி.பி.எஸ். ஆக விளங்கிய உடன் பிறந்த எம் மூவரையும் 'ரொம்ப படித்த குடும் பம்' என்று பாவேந்தர் புகழ்பாடிக் கொண்டிருந்தார். ஆங்கில உயர்கல்வி பெற்ற எங்கள் நிலை அவருக்குப் பெருமை தருவதாகத் தோன்றியது. உரிமையோடும் பெருமையோடும் எங்களை அவர் தம் குடும்பத்தில் சேர்த் துக் கொண்டார். அவருக்குச் சாதி உணர்வு இருந்ததா என்பது நான் அறியமுடியவில்லை. அவரோடு பழக்கம்

கொண்டதில் எனக்கும் பெருமையும் பெருமிதமும் ஏற்பட்டன.'

அவர் தலைமையில் நான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற திட்டம் அப்போதே என்னிடம் உருவாகியிருந்தது. ஆனால் அது நடைபெற முடியாதபடி சாக்காடு குறுக்கிட்டது.

கனக சுப்புரத்தினம் கவிஞர் ரத்தினம்; சுப்பிரமணிய பாரதியாரின் செழுஞ்சொற் பாப்புனைதிறத்தால் இழுக்கப்பட்டுப் பாரதிதாசனார் ஆனார். வண்டமிழ்ப் பாவிற்கு வேந்தராக விளங்கினார்.; அறிவிலும் உணர்விலும் வாழ்விலும் முதிர்ச்சியடைந்தார்; பைந்தமிழ் உலகம் அவரைப்பாராட்டியது; கருத்து வேறுபட்டோரும் அவர் பாத்திறத்தைப் பாராட்டினர். தமிழகம் அவரை ஒரு குரலிலே ஏற்றிப் போற்றியது.

பாவேந்தர்க்கு மனநிறைவில்லை. அவர் மனம் மேலும் புகழ் நாடியது; பொருள் நாடியது. தம் படைப்புக்கள் மீது நம்பிக்கை வைத்து அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கச் செய்து உலகப்புகழ் பெற அவர் உள்ளம் விழைந்தது. தம் காவியங்களைப் படமாக்க வேண்டும் என்ற ஆசை கொண்டு முதிர்ந்த வயதில் பட்டணம் புறப்பட்டார். அவர் பண்டுதொட்டே அரசியல்வாதியுமாவார். ஆனால் தலைவராகவில்லை. முழுநேர அரசியற் பணியாளரே தலைவராவர். அரசியலோ கட்சியரசியலாகிக் கட்சிக்குள் குழு அரசியலுமாகிச் சீர்கெட்டது. பல்குழுப் பாழ் செய் உட்பகைக்குள் சிக்குண்டார் பாவேந்தர். இந்த அரசியல் பூசலுக்கு அவர் தகுதி பெற்றவர் இல்லை. அவர் தோல்வி கண்டார். அவர் அரசியலில் தூற்றுதலும் போற்றுதலும் மேற்கொண்டார். அவற்றுக்குப் பெரும்பான்மையான காரணம் அவர் நலம் கருதியே போலும். அவர் 'குயில்' அண்ணாவையும் எம்ஜியாரையும் தூற்றிப்பாடியது. தம் பேசும் பட வாய்ப்புக்கள் அவர்களால் கெட்டுவிட்டன என்ற

வருத்தம் அவருக்கிருந்தது. சிவாசியைப் போற்றித் துதிபாடியது குயில், பேசும்பட வாய்ப்பினை எதிர் பார்த்து. பெரியாரின் தி.மு.க வெறுப்பரசியலில் புகுந்து 'கண்ணீர்த் துளிகளை'ச் சாடினார் கவிஞர்.

புகழையும் பொருளையும் நாடிய அவர் உள்ளம் ஏமாற் றம் உற்றது. நிறைவேறாத ஆசைகள், உள்ளார்ந்த வருத்தம், எதிர்பாராத ஏமாற்றம், நிறைந்த உலகில் தனிமை—இவையே இறுதியில் அவர் வாழ்க்கை. இவற்றோடு உடன் பிறந்த நோய் நீரிழிவு. அவர் வாழ்க்கை பல ஆண்டுகள் முன் முடிந்ததில் வியப்பில்லை.

இயக்கம், கட்சி, குழு என்ற நிலைகளில் இயக்கத்தள வில் நின்றிருக்க வேண்டிய பாரதிதாசனார் குழுநிலைக்கு இறங்கினார். தமிழ்ப்பாவுலகம் அதனால் உற்ற இழப்பு ஈடுசெய்ய முடியாதது.